فتاوى مهمة تتعلق بالصلاة

تاميلي

# தொழுகை பற்றிய முக்கியமான கேள்வி பதில்கள்



# فتاوى مهمة تتعلق بالصلاة

**لسماحة الشيخ / عبد العزيز بن عبد الله بن باز**

**ترجمه إلى اللغة التاميلية:**

## شعبة توعية الجاليات في الزلفي

**الطبعة الأولى : ١/١٤٣٣ هـ.**

**ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٣٠هـ**

***فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر***

شعبة توعية الجاليات بالزلفي

فتاوى مهمة تتعلق بالصلاة- تاميل/ شعبة توعية الجاليات بالزلفي - الزلفي ١٤٣٠هـ

١٤٤ ص؛ ١٢ X ١٧ سم

ردمك : ٥- ١٧ - ٨٠١٣ -٦٠٣-٩٧٨

(النص باللغة التاميلية )

١ - الصلاة ٢ - الفتاوى الشرعية أ. العنوان

ديوي ٢٥٢.٢ ١٤٣٠ / ٣٦٣٥

رقم الإيداع : ١٤٣٠/٣٦٣٥

ردمك : ٥- ١٧ - ٨٠١٣ -٦٠٣-٩٧٨

**الصف والإخراج: شعبة توعية الجاليات في الزلفي**

# உள்ளே...


| | |
|---|---|
| 3 | தொழுகையின் நிபந்தனைகள் |
| 38 | பாங்கு |
| 44 | தொழும் முறை |
| 70 | ஜமாஅத்துடன் தொழுதல், இமாமத் செய்தல், இமாமைப் பின்பற்றுதல் |
| 105 | மறதிக்கான ஸுஜூத் |
| 113 | ஜம்வு, கஸர் |
| 126 | இதரச் சட்டங்கள் |

# فتاوى مهمة تتعلق بالصلاة

# தொழுகை பற்றிய முக்கியமான கேள்வி பதில்கள்

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் அவனுடைய தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத் தார்கள் மீதும், அவர்களுடைய தோழர்கள் மற்றும் அவர்களின் வழியைப் பின்பற்றி நடந்த அனைவரின் மீதும் உண்டாவதாக! சில சகோதரர்கள் தொழுகை சம்பந்மாக கேட்ட கேள்விகளும் அதற்கான பதில் களுமே இந்நூலில் உள்ளன. இதன் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களுக்குப் பயனளிக்க வேண்டுமென்றும் இறை மார்க்கத்தில் அவர்களுக்கு விளக்கம் தர வேண்டு மென்றும் அவனிடம் இறைஞ்சுகின்றோம். திண்ணமாக அவன் கேட்கக்கூடியவனாகவும், அருகில் உள்ளவ னாகவும் இருக்கின்றான்.

## தொழுகையின் நிபந்தனைகள்

1. சில பிரதேசங்களில் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து இரவாகவோ பகலாகவோ இருக்கும். சில நேரங்களில் ஐவேளைத் தொழுகைகளுக்கும் போது மாகாத அளவுக்கு அக்காலம சுருங்கிவிடும். இந்நிலை யில் அங்கு வசிப்பவர்கள் தமது தொழுகைகளை எப்படி நிறைவேற்றுவது?

**பதில்:** நீண்ட காலத்திற்கு இரவாகவோ பகலாகவோ இருக்கின்ற இதுபோன்ற பிரதேசங்களில் வசிப்பவர்கள், தங்கள் பகுதிகளில் 24 மணி நேரங்களைக் கணக் கிட்டுக் கொள்வதற்குத் தோதுவாக சூரியன் உச்சியி லிருந்து சாய்வது, மறைவது என்ற நிலை இல்லை யெனில் ஐவேளை தொழுகைகளுக்கான காலநேரங் களைக் கணித்துக் கொண்டு தொழுகைகளை நிறை வேற்ற வேண்டும்.

இது குறித்து நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் (ரலி) அறிவிக்கின்ற ஆதாரப்பூர்வமான ஹதீஸ் ஸஹீஹ் முஸ்லிமில் இடம்பெற்றுள்ளது. அதில் நபி(ஸல்) அவர்கள், தஜ்ஜாலுடைய காலத்தில் ஒரு வருடம் போன்றிருக்கும் ஒரு நாளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பற்றி (அதில் தொழுவது பற்றி) நபித்தோழர்கள் கேட்டதும், (اقْدُرُوا لَهُ قَدْرَهُ) "அதற்குரிய அளவை அதற்காக (தொழுகைக்காக) கணித்துக் கொள்ளுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 2937) இவ்வாறே தஜ்ஜாலுடைய காலத்தில் ஒரு மாதம் போன்று இருக்கும் மற்றொரு நாளுடைய சட்டமும். மேலும் ஒரு வாரம் போன்றிருக்கும் அடுத்த நாளுடைய சட்டமும் இவ்வாறு தான்.

ஆனால் 24 மணி நேரத்தில் இரவு சுருக்கமாகவும் பகல் நீண்டதாகவும் அல்லது பகல் சுருக்கமாகவும்

இரவு நீண்டதாகவும் இருக்கின்ற பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அவற்றினுடைய சட்டம் தெளிவானது தான். அங்கு வசிப்பவர்கள் சாதாரண நாட்களைப் போல தொழுது கொள்ள வேண்டும். இரவோ பகலோ மிகவும் சுருங்கிவிட்டாலும் சரியே. தொழுகைக்குரிய நேரங்கள் குறித்த பொதுவான ஹதீஸ்களே இதற்கு ஆதாரமாகும். அல்லாஹ் மிக அறிந்தவன்!

2. சிலர் தம் இரு தோள் புஜங்கள் மீது துணி எதுவும் போடாமல் கடமையான தொழுகைகளைத் தொழுகிறார்கள். குறிப்பாக ஹஜ் காலங்களில் இஹ்ராம் உடை அணிந்திருக்கும்போது இவ்வாறு தொழுகிறார்கள். இதன் சட்டமென்ன?

**பதில்:** தோள் புஜங்களை மறைத்துக்கொள்ள இயலாத நிலையில் இருந்தால் அவர்கள் மீது குற்ற மில்லை. ﴿فَاتَّقُوا اللهَ مَا اسْتَطَعْتُمْ﴾ [التغابن:١٦] "உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வை அஞ்சுங்கள்."(64:16) என அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் ஜாபிர்(ரலி) அவர் களிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

((فَإِنْ كَانَ وَاسِعًا فَالْتَحِفْ بِهِ وَإِنْ كَانَ ضَيِّقًا فَاتَّزِرْ بِهِ)) (خ/ ٣٦١)

"ஆடை விசாலமானதாக இருந்தால் அதன் ஒரு ஓரத்தை வலது தோளிலும் மற்றொரு ஓரத்தை இடது தோளிலுமாக அணிந்து கொள். ஆடை சிறியதாக

இருந்தால் அதை இடுப்பில் அணிந்துகொள்." (பார்க்க: புகாரி 361) எனவே இரு தோள் புஜங்களையோ அல்லது இரண்டில் ஒன்றையோ மறைத்துக் கொள்ள இயலுமானால் அறிஞர்களின் மிகச் சரியான கூற்றின் படி அதை மறைத்துக் கொள்வது அவசியமாகும். அதை மறைக்காமல் விட்டுவிட்டால் அவனது தொழுகை நிறை வேறாது. ஏனெனில் நபி(ஸல்) கூறியுள்ளார்கள்:

((لَا يُصَلِّي أَحَدُكُمْ فِي الثَّوْبِ الْوَاحِدِ لَيْسَ عَلَى عَاتِقَيْهِ شَيْءٌ)) (خ، م)

"உங்களில் யாரும் தமது தோள் புஜங்கள் மீது (ஆடை) எதுவும் இல்லாதிருக்க ஒரே ஆடையை அணிந்து கொண்டு தொழ வேண்டாம்." (புகாரி 359, முஸ்லிம் 516) அல்லாஹ் மிக அறிந்தவன்!

3. சிலர் பஜ்ர் தொழுகையை வானம் நன்கு வெளுக்கின்ற வரை தாமதப்படுத்துகிறார்கள். அதற்கு ஆதரமாக, (أَسْفِرُوا بِالْفَجْرِ فَإِنَّهُ أَعْظَمُ لِلْأَجْرِ) "பஜ்ரை வெளிச்சம் ஏற்பட்டதும் தொழுங்கள். ஏனெனில் அது மகத்தான கூலிக்குரியதாகும்" (திர்மிதி 154) என்ற ஹதீஸைக் காட்டுகிறார்கள். இது ஆதாரப்பூர்வமான ஹதீஸ்தானா? இந்த ஹதீஸையும் "தொழுகையை அதற்குரிய நேரத் தில் தொழுவது" (الصَّلَاةُ عَلَى وَقْتِهَا) (பார்க்க: புகாரி 527, முஸ்லிம் 85)) என்ற ஹதீஸையும் இணைப்பது எப்படி?

**பதில்:** மேற்கூறப்பட்ட அந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வ மானதுதான். அதை இமாம் அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா ஆகியோர் ரா.ஃ.பிவு பின் கதீஜ் மூலம் ஸஹீஹான அறிவிப்பாளர் தொடருடன் அறிவித்துள்ளனர். “நபி(ஸல்)அவர்கள் சுப்ஹுத் தொழு கையை இருட்டில் தொழுதார்கள்” என்று வந்துள்ள ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களுக்கும், “தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது” என்ற ஹதீஸுக்கும் மேற்கூறப்பட்ட அந்த ஹதீஸ் முரணானதல்ல.

பெரும் பாலான அறிஞர்களிடம் “பஜ்ரை வெளிச்சம் ஏற்பட்டதும் தொழுங்கள்” என்ற ஹதீஸின் கருத்து என்ன வெனில், (சந்தேகத்திற்கிடமின்றி) பஜ்ர் வந்து விட்டது என்று தெளிவாகும் வரை பஜ்ர் தொழுவதைத் தாமதப் படுத்தி இருள் நீங்கும் முன் அதனை நிறை வேற்றிட வேண்டுமென்பதுதான். நபி (ஸல்) அவர்கள் முஸ்தலி ஃ.பாவைத் தவிர மற்ற இடங்களில் அவ்வாறே நிறை வேற்றியுள்ளார்கள். ஏனெனில் முஸ்தலி.ஃ.பாவில் பஜ்ர் தொழுகையை பஜ்ரு எனும் அதிகாலை உதயமானதும் விரைந்து நிறைவேற்றுவதே சிறப்பானதாகும். நபி(ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது இவ்வாறே செய்துள்ளார்கள். பஜ்ர் தொழுகையை நிறைவேற்று வதற்குரிய நேரம் தொடர்பாக நபி(ஸல்) அவர்கள் மூலம் நிரூபணமான ஹதீஸ்களை இணைக்கும் முறை

இவ்வாறே ஆகும். இதெல்லாம் சிறப்பானது என்ற அடிப்படையில் கூறப்பட்டதாகும். மேலும் பஜ்ர் தொழு கையை சூரியன் உதிப்பதற்கு முன்பு வரை தாமதப் படுத்துவதும் ஆகுமானதே. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: (وَوَقْتُ صَلَاةِ الصُّبْحِ مِنْ طُلُوعِ الْفَجْرِ مَا لَمْ تَطْلُعْ الشَّمْسُ)

"பஜ்ருத் தொழுகையின் நேரம் பஜ்ரு எனும் அதிகாலை உதயமானதிலிருந்து சூரியன் உதயமாகும் வரையாகும்." அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு பின் ஆஸ்(ரலி), நூல்: முஸ்லிம் 612

4. அரபுகளில் சிலர் தமது தோப் எனும் சட்டையை சுருக்கமாகவும், (உள்ளே அணிகின்ற) சிர்வாலை நீளமா கவும் அணிவதைக் காண்கிறோம். இது பற்றி தங்களின் கருத்தென்ன?

**பதில்:** ஆடைகள் அனைத்தும் கெண்டைக் காலுக்கும் கணுக்காலுக்குமிடையே இருப்பதே நபிவழியாகும். அதனைக் கணுக்காலுக்குக் கீழே இறக்கி அணிவது கூடாது. ஏனெனில் ((مَا أَسْفَلَ مِنْ الْكَعْبَيْنِ مِنْ الْإِزَارِ فَفِي النَّارِ)) "கணுக்காலுக்குக் கீழ் வேட்டி உடுத்துவது நரகத்திற் குரியதாகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 5787) சிர்வால், பேண்ட், வேட்டி, சட்டை, தோப் ஆகிய அனைத்திற்கும் இதே சட்டம்தான். ஒரு உதார ணத்திற்காகத்தான் நபி(ஸல்) அவர்கள் வேட்டியைக் குறிப்பிட்டுள்ளார்கள். வேட்டியை மட்டும்தான் கணுக்

காலுக்குக் கீழ் அணியக் கூடாது என்பதல்ல. இன்னும் சொல்வதானால் ஆடைகள் கெண்டைக்காலின் பாதி வரை இருப்பதே சிறந்ததாகும். ஏனெனில்

((إِزْرَةُ الْمُسْلِمِ إِلَى نِصْفِ السَّاقِ)) (د/ ٤٠٩٣، جه/ ٣٥٧٣، حم/ ١٠٨٢٦)

"மு.'.மினின் ஆடை அவனது கெண்டைக்காலின் பாதி வரையாகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத் 4093, இப்னுமாஜா 3573, அஹ்மத் 10826)

5. ஒருவன் கிப்லாவைத் தெரிந்து கொள்ள முயற்சித்து, பின்னர் ஒரு திசையை நோக்கி இதுதான் கிப்லா என்று நினைத்துத் தொழுதான். தொழுத பிறகு, தான் தொழுதது கிப்லாவை நோக்கி அல்ல எனத் தெரிய வந்தால் அத்தொழுகையின் நிலை என்ன? இவ்வாறு அவன் தொழுதது முஸ்லிம்களின் நாட்டிலோ அல்லது நிராகரிப்பாளர்களின் நாட்டிலோ என்றால் அல்லது ஒரு பாலைவ்னத்தில் என்றால் சட்டநிலையில் வித்தியாச முண்டா?

**பதில்:** ஒருவர் பயணத்தில் இருந்தால் அல்லது கிப்லாவை அறிவித்துக் கொடுப்பவரில்லாத நாட்டில் இருந்தால்- அவர் கிப்லாவின் திசையைக் கண்டறிய முயற்சித்து, பின்னர் ஒரு திசையை நோக்கித் தொழுத பின் அவர் தொழுதது கிப்லா அல்லாத திசையெனத் தெரிய வந்தால் அவரது தொழுகை நிறைவேறிவிடும்.

எனினும் அவர் முஸ்லிம்களின் நாட்டில் இருந்தால் அவரது தொழுகை கூடாது. ஏனெனில் கிப்லாவின் திசையைக் காட்டித் தருபவரிடம் அவரால் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும். அதுபோல பள்ளிவாசல்களின் மூலமும் கிப்லாவைத் தெரிந்து கொள்ள இயலும்.

6. அதிகமானோர் தொழுகையை ஆரம்பிக்கும்போது நிய்யத்தை வாயால் மொழிவதைக் கேட்கிறோம். இதன் சட்டநிலை என்ன? மார்க்கத்தில் இதற்கு ஆதாரமுண்டா?

**பதில்:** தூய இம்மார்க்கத்தில் நிய்யத்தை மொழிவதற்கு எந்த ஆதாரமுமில்லை. நபி(ஸல்) அவர்களோ நபித்தோழர்களோ தொழுகையை ஆரம்பிக்கும்போது நிய்யத்தை மொழிந்ததாக எந்த ஒரு செய்தியும் பதிவு செய்யப்படவில்லை. நிய்யத் ஏற்படுவதற்குரிய இடம் உள்ளமாகும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:

((إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى)) (خ/ ١، م/ ١٩٠٧)

“செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதுதான் கிடைக்கிறது.” அறிவிப்பவர்: உமர்(ரலி), நூல்: புகாரி 1, முஸ்லிம் 1907

7. ஹிஜ்ர் இஸ்மாயீலில் (கஅபாவுக்கு அருகில் அரைவட்டமாக உள்ள இடத்தில்) தொழுவதற்கு சிலர் முண்டியடித்துக் கொண்டு செல்வதைக் காண்கிறோம்.

அவ்விடத்தில் தொழுவதன் சட்டமென்ன? அதற்கு ஏதும் சிறப்பு உண்டா?

**பதில்:** ஹிஜ்ர் இஸ்மாயீலில் தொழுவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் அது கஅபாவின் ஒரு பகுதியாகும். நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின்போது கஅபாவுக்குள் நுழைந்து அங்கு இரண்டு ரக்அத் தொழுததாக பிலால்(ரலி)அவர்கள் அறிவிக்கக்கூடிய ஆதாரப்பூர்வமான ஹதீஸ் புகாரி(397), முஸ்லிமில்(1329) பதிவு செய்யயப்பட்டுள்ளது. மேலும் ஆயிஷா(ரலி) அவர்கள் கஅபாவுக்குள் நுழைய விரும்பியபோது, "ஹிஜ்ரில் தொழுதுகொள். ஏனெனில் அதுவும் கஅபாவைச் சேர்ந்ததுதான்" என நபி(ஸல்)அவர்கள் கூறிதாகவும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ் வந்துள்ளது. (பார்க்க: திர்மிதி 876)

எனினும் கடமையான தொழுகையை கஅபாவுக்குள்ளோ, ஹிஜ்ர் இஸ்மாயீலிலோ தொழாமலிருப்பதே பேணுதலுக்குரிய செயலாகும். காரணம் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. மேலும், கஅபாவுக்கு உள்ளேயும், ஹிஜ்ர் இஸ்மாயீலிலும்- அதுவும் கஅபாவைச் சேர்ந்தது என்ற அடிப்படையில்- கடமையான தொழுகையை தொழுவது கூடாது என்று சில அறிஞர்களும் கூறியுள்ளனர்.

எனவே இந்த ஆதாரங்கள் மூலம் தெரிய வருவது இதுதான். கடமையான தொழுகையை கஅபாவுக்கு வெளியிலும் ஹிஜ்ருக்கும் வெளியிலும் தொழுவதே ஷரீஅத்தின் நடைமுறையாகும். அதுதான் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகவும், கஅபாவுக்குள்ளேயும் ஹிஜ்ருக்கு உள்ளேயும் தொழுவது கூடாது என்று கூறுகின்ற அறிஞர்களின் கருத்து வேறுபாடிலிருந்து விலகுவதாகவும் அமையும். அல்லாஹ் மிக அறிந்தவன்!

8. சில பெண்கள் மாதவிடாய்க்கும் உதிரப்போக் கிற்கும் வித்தியாசம் தெரியாமலிருக்கின்றனர். ஏனெனில் சில நேரங்களில் உதிரப்போக்கு நீடிக்கும்போது அந்தக் காலகட்டத்தில் தொழுகையை நிறுத்திவிடுகின்றார்கள். எனவே இது தொடர்பான சட்டமென்ன?

**பதில்:** மாதவிடாய் என்பது ஆதமுடைய பெண்மக் களுக்கு, பெரும்பாலும் ஒவ்வொரு மாதமும் வெளியாக வேண்டுமென அல்லாஹ் விதித்திருக்கிற ஓர் உதிரப் போக்காகும். இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஸஹீஹான ஹதீஸும் வந்துள்ளது. (பார்க்க: புகாரி 305)

தொடர் உதிரப்போக்கு உடையவளுக்கு மூன்று நிலைகள் உள்ளன:

**முதல் நிலை:** முதன் முதலாக மாதவிடாய் வரும் போதே தொடர் உதிரப்போக்கு ஏற்படுவது.

இந்த நிலையிலுள்ள பெண் ஒவ்வொரு மாதமும் இரத்தம் வருவதைக் காணும்போது மாதவிடாய்க் காரியாக இருந்து கொள்ள வேண்டும். தூய்மையாகும் வரை தொழவோ, நோன்பு நோற்கவோ கூடாது. மேலும் அவளுடைய கணவன் அவளுடன் தாம்பத்திய உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது. இந்தச் சட்டம் பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி உதிரப் போக்கின் காலம் 15 நாட்கள் வரை இருந்தால்தான். அல்லது அதற்கும் குறைவாக இருந்தால்தான். இந்த உதிரப்போக்கு 15 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்குமானால் அவள் தொடர் உதிரப்போக்கு உடையவளாவாள். மாதவிடாய்க்காரி அல்ல.

தொடர் உதிரப்போக்கையும் மாதவிடாயையும் அவளால் பிரித்தறிய முடியவில்லை என்றால் தனது உறவினர்களில் தன்னைப் போன்ற பெண்களுக்கு எத்தனை நாட்கள் மாதவிடாய் ஏற்படுகிறது என்பதை விசாரித்து அறிந்து, மாதத்தில் ஆறு அல்லது ஏழு நாட்கள் தன்னை மாதவிடாய்க்காரியாக எண்ணிக் கொள்ள வேண்டும்.

**இரண்டாவது நிலை:** தொடர் உதிரப்போக்கையும் மாத விடாயையும் அவளால் பிரித்தறிய முடிந்தால் மாத விடாய் இரத்தம் கருப்பாக அல்லது துர்வாடை உடை யதாக இருக்கும் என்பதை அறிந்து மாதவிடாய் இரத்தம்

வரக்கூடிய காலங்களில் தொழுகை, நோன்பு, உடலுறவு முதலியவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் குளித்துவிட்டு தொழுது கொள்ள வேண்டும். இவ்வாறு அவள் பிரித்தறிந்து செயல்படும்போது மாதவிடாய் 6 அல்லது 7 நாட்களையும் தாண்டி 15 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இது இரண்டாவது நிலை.

**மூன்றாவது நிலை:** தொடர் உதிரப்போக்கு ஏற்படுவ்தற்கு முன் அவளுக்கு வழக்கமாக வந்து கொண்டிருந்த மாதவிடாய்க் காலத்தைத் தெரிந்திருப்பது. வழக்கமாக அவளுக்கு மாதவிடாய் ஏற்படக்கூடிய அந்த நாட்களில் அவள் மாதவிடாய்க்காரியாக இருந்து கொண்டு பின்னர் குளித்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒவ்வொரு தொழுகைக்கும்- அதற்குரிய நேரம் வந்து விட்டால்- உளுச் செய்து கொள்ள வேண்டும்; இரத்தம் வந்து கொண்டிருந்தாலும் சரியே. மறுமாதம் வழக்கமான அவளுடைய மாதவிடாய் நாட்கள் வரும் வரை அவளிடம் அவளுடைய கணவன் தாம்பத்திய உறவை வைத்துக் கொள்ளலாம்.

இதுதான் தொடர் உதிரப்போக்கு உடையவள் குறித்து ஹதீஸ்களில் வந்துள்ளதன் அடிப்படையில் அமைந்த சுருக்கமான கருத்தாகும். இக்கருத்தையே புலூகுல் மராம் என்ற நூலின் ஆசிரியர் ஹா·.பிழ் இப்னு ஹஜர்

(ரஹ்) அவர்களும் முன்தகா எனும் நூலின் ஆசிரியர் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

9. ஒருவருக்கு ஒரு தொழுகை தவறிவிட்டது! உதார ணமாக ளுஹர் தொழுகை. அஸர் தொழுகைக்கு இகாமத் சொல்லப்படும்போதுதான் அவருக்கு அது நினைவுக்கு வருகிறது. அப்போது அவர் அஸரை நிய்யத் செய்து ஜமாஅத்துடன் சேர வேண்டுமா? அல்லது ளுஹ ருடைய நிய்யத்துடன் ஜமாஅத்துடன் சேர வேண்டுமா? அல்லது ளுஹரைத் தனியாகத் தொழுதுவிட்டு பின்னர் அஸர் தொழ வேண்டுமா?

"நடப்புத் தொழுகை தவறிவிடுமென அஞ்சினால் (தவறிப்போன தொழுகையைத் தொழுது விட்டுத்தான் அடுத்த தொழுகையைத் தொழ வேண்டும் என்கிற) வரிசைக்கிரமத்தைப் பேண வேண்டியதில்லை" என்று ஃபிக்ஹு கலை அறிஞர்கள் கூறியிருப்பதன் கருத் தென்ன? ஜமாஅத் தவறிவிடும் எனப் பயந்தால் வரிசைக் கிரமத்தைப் பேண வேண்டிய அவசியமில்லையா?

**பதில்:** தொழுகைகளை நிறைவேற்றும்போது வரிசைக் கிரமமாகத் தொழுவது அவசியம் என்பதால் ளுஹரை நிய்யத் செய்து கொண்டு அவர் அஸர் ஜமாஅத்துடன் சேர்ந்துவிட வேண்டும். பின்னர் அஸரை (தனியாக)த் தொழ வேண்டும். ஜமாஅத் தவறிவிடுமெனப் பயந்தாலும் வரிசைக்கிரமம் தவறக்கூடாது.

“நடப்புத் தொழுகையின் நேரம் தவறிவிடுமென அஞ்சினால் வரிசைக்கிரமத்தைப் பேண வேண்டிய தில்லை” என்று ஃபிக்ஹு கலை அறிஞர்கள் கூறியதன் கருத்து என்னவெனில், ஒருவருக்கு ஒரு தொழுகை தவறிவிட்டால் நடப்புத் தொழுகையைத் தொழுவதற்கு முன் முதலில் தவறிப்போனதைத் தொழ வேண்டும். நடப்புத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு நேரம் குறுகியதாக இருந்தால் முதலில் நடப்புத் தொழுகையைத் தொழுதுவிட வேண்டும். அதன் பிறகு தவறிப்போன தொழுகையைத் தொழ வேண்டும்.

உதாரணமாக, ஒருவன் இஷாத் தொழுகையைத் தொழவில்லை. சூரியன் உதிப்பதற்கு சற்று முன்னர் தான் அது அவனுக்கு நினைவுக்கு வருகிறது. மேலும் அன்றைய தினத்தின் ஃபஜ்ரையும் அவன் தொழவில்லை எனில் இந்த நிலையில் ஃபஜ்ருடைய நேரம் தவறிவிடுவதற்கு முன் முதலில் அவன் ஃபஜ்ரைத் தொழுதுவிட வேண்டும். ஏனெனில் அந்த நேரம் ஃபஜ்ருக்குரிய நேரமாகும். பின்னர் தவறிப்போன தொழுகையைத் தொழுது கொள்ள வேண்டும்.

10. அதிகமான பெண்கள் தமது தொழுகையில் கவனக் குறைவாக இருந்து வருகிறார்கள். அவர்கள் தொழும்போது அவர்களது இரு குடங்கைகள் அல்லது அவற்றில் சிறிது பகுதி வெளியே தெரிகிறது. இவ்வாறே

அவர்களது பாதம் அல்லது கெண்டைக்காலின் சிறிது பகுதி வெளியே தென்படுகிறது. அப்படியானால் அவர் களின் தொழுகை கூடுமா?

**பதில்:** பருவமடைந்த பெண் தொழும்போது தனது இரு முன் கைகளையும் முகத்தையும் தவிர உடல் முழுவதையும் மறைத்துக் கொள்வது கடமையாகும். ஏனெனில் பொதுவாக பெண்களுக்கு உடல் முழுவதும் மறைக்க வேண்டிய பகுதியாகும். தொழுகையில் அவர்கள் முகத்தையும் முன் கைகளையும் மறைக்கக் கூடாது. எனவே அவள் மறைத்துக் கொள்ள வேண்டிய பகுதிகளில் கெண்டைக்கால், பாதம், தலை போன்ற பகுதியோ அல்லது அவற்றில் சிறிதளவோ வெளியே தெரியும்படித் தொழுதால் அவளின் தொழுகை நிறை வேறாது. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

((لَا يَقْبَلُ الله صَلَاةَ حَائِضٍ إِلَّا بِخِمَارٍ)) (د/ ٦٤١، ت/ ٣٧٧، جه/ ٦٥٥)

"பருவமடைந்தவள் முக்காடின்றித் தொழுவதை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்." (அபூதாவூத் 641, திர்மிதி 377, இப்னுமாஜா 655, அஹ்மத் 24012,)

((الْمَرْأَةُ عَوْرَةٌ)) (ت/ ١١٧٣) மேலும் "பெண் மறைக்கப்பட வேண்டியவள்" என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள் ளார்கள். (திர்மிதி 1173)

عَنْ أُمِّ سَلَمَةَ أَنَّهَا سَأَلَتِ النَّبِيَّ ﷺ أَتُصَلِّي الْمَرْأَةُ فِي دِرْعٍ وَخِمَارٍ لَيْسَ عَلَيْهَا إِزَارٌ قَالَ إِذَا كَانَ الدِّرْعُ سَابِغًا يُغَطِّي ظُهُورَ قَدَمَيْهَا (د/ ٦٤٠)

மேலும் உம்முஸலமா (ரலி) அறிவிக்கிறார்கள்: கீழாடை இன்றி மேலாடை மற்றும் முக்காடுடன் ஒரு பெண் தொழலாமா? என நபி (ஸல்)அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள், “மேலாடை அவளது பாதங்களை மறைக்கும் அளவுக்கு நீளமாக இருந்தால் தொழலாம்” எனக் கூறினார்கள். (அபூதாவூத் 640) மேலும் இந்த ஹதீஸை உம்முஸலமா(ரலி) அவர்கள், நபி(ஸல்)அவர்கள் கூறியதாகக் கூறாமல் தமது சொந்தக் கருத்தாகக் கூறியிருப்பதே சரியானது என்கிறார்கள் ஹதீஸ்கலை அறிஞர்கள் என ஹா∴பிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தமது புலூகுல் மராமில் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு பெண் தொழுமிடத்தில் அந்நிய ஆண் இருந்தால் அவள் தனது முகத்தையும இரு முன்கைகளையும் கூட மறைத்துக் கொள்வது கடமையாகும்.

11. ஒரு பெண் அஸர் அல்லது இஷா நேரத்தில் மாதவிடாயிலிருந்து சுத்தமானால் அவள் அஸருடன் ளுஹ்றரையும் சேர்த்து அல்லது இஷாவுடன் ம∴க்ரிபையும் சேர்த்து ஜம்வு செய்தல் என்ற அடிப்படையில் தொழ வேண்டுமா?

**பதில்:** அறிஞர்களின் இரு வேறு கருத்துக்களில் சரியான கருத்தின்படி, ஒரு பெண் மாதவிடாயிலிருந்து அல்லது பிரசவத்தீட்டிலிருந்து அஸர் நேரத்தில் தூய்மை யானால் அவள் ளுஹரையும் அஸரையும் சேர்த்துத் தொழுவது அவசியமாகும். ஏனெனில் நோயாளி, பயணி யைப் போன்ற தக்க காரணமுள்ளவர்களின் விஷயத்தில் இவ்விரண்டு தொழுகைகளின் நேரமும் ஒன்றுதான். இவளது தூய்மை தாமதமானதால் இவளும் தக்க காரணமுடையவள்தான். இவ்வாறே இஷா நேரத்தில் தூய்மையாகிவிட்டால் மஃக்ரிபையும் இஷாவையும் சேர்த்துத் தொழுது கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்ட காரணம் இதற்கும் பொருந்தும். அதிகமான நபித் தோழர்கள் இவ்வாறே தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

12. ஒரு பள்ளியினுள் அல்லது அதன் முற்றத்தில் அல்லது அதன் கிப்லாவின் பக்கம் கப்ரு இருந்தால் அங்கு தொழுவது பற்றிய சட்டநிலை என்ன?

**பதில்:** பள்ளியில் கப்ரு இருந்தால் அங்கு தொழுவது கூடாது. அந்த கப்ரு தொழுபவர்களுக்கு முன்னால் அல்லது பின்னால் அல்லது வலது பக்கமோ இடது பக்கமோ எங்கிருந்தாலும் சரியே.

((لَعَنَ اللهُ الْيَهُودَ وَالنَّصَارَى اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسْجِدًا)) (خ/ ١٣٣٠)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: யூத, கிறிஸ்தவர் களை அல்லாஹ் சபிப்பானாக! அவர்கள் தங்கள் நபிமார்

களின் அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக ஆக்கிக் கொண்டனர். (புகாரி 1330, முஸ்லிம் 529)

((أَلَا وَإِنَّ مَنْ كَانَ قَبْلَكُمْ كَانُوا يَتَّخِذُونَ قُبُورَ أَنْبِيَائِهِمْ وَصَالِحِيهِمْ مَسَاجِدَ أَلَا فَلَا تَتَّخِذُوا الْقُبُورَ مَسَاجِدَ إِنِّي أَنْهَاكُمْ عَنْ ذَلِكَ)) (م/ ٥٣٢)

"எச்சரிக்கை! திண்ணமாக உங்களுக்கு முன் இருந்தவர்கள் தங்களது நபிமார்கள் மற்றும் நல்லவர்களின் அடக்கத்தலங்களை வழிபாட்டுத்தலங்களாக ஆக்கிவிட்டனர். எனவே! நீங்கள் கப்ருகளை வழிபாட்டுத் தலங்களாக ஆக்கிவிடாதீர்கள். நான் அதைவிட்டும் உங்களைத் தடுக்கின்றேன்" எனவும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 532)

மேலும் அடக்கத்தலத்தில் தொழுவது இணைவைப்பு மற்றும் அடங்கப்பட்டவர்கள் விஷயத்தில் வரம்பு மீறுவதன் பக்கம் கொண்டு செல்லக்கூடிய வழிமுறைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. எனவே ஷிர்க்கின் வாசலை அடைப்பதற்காகவும் மேற்கூறப்பட்ட இரு ஹதீஸ்களின் படியும் அந்தக் கருத்தில் வந்திருக்கும் இன்னும் பல ஹதீஸ்களின்படியும் செயல்படுவதற்காகவும் கப்ரு உள்ள பள்ளியில் தொழுவதைத் தவிர்ந்து கொள்வது கடமையாகும்.

13. பெரும்பாலான தொழிலாளர்கள் ளுஹரையும் அஸரையும் இரவு வரை தாமதப்படுத்துகிறார்கள்.

இதற்கு அவர்கள், தாங்கள் வேலையில் ஈடுபட்டிருப் பதாகவும் அல்லது தங்கள் ஆடை அசுத்தமாக அல்லது தூய்மையற்றதாக இருப்பதாகவும் காரணம் கூறுகிறார்கள். அவர்களுக்கு தாங்கள் கூறுவதென்ன?

**பதில்:** கடமையான தொழுகையை அதற்குரிய நேரத்தை விட்டும் தாமதப்படுத்துவது முஸ்லிமான ஆணுக்கும் பெண்ணுக்கும் கூடாதாகும். மாறாக தொழு கையை அதற்குரிய நேரத்தில்- தமது சக்திக்கேற்ப நிறைவேற்றுவது பருவமடைந்த முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும். வேலையில் ஈடுபடுவது தொழுகையைத் தாமதப்படுத்துவதற்குரிய காரணமாகாது. அதேபோல ஆடைகள் அசுத்தமாக இருப்பதும் அழுக்காக இருப்பதும் தொழுகையைப் தாமதப்படுத்து வதற்குரிய காரணங்கள் கிடையாது. தொழுகை நேரங்களில் வேலையை நிறுத்தி வைக்க வேண்டும். வேலை செய்பவர்கள் தொழுகை நேரம் வந்ததும் அசுத்தத்தை விட்டும் தமது ஆடையைக் கழுவிக் கொள்ள வேண்டும். அல்லது சுத்தமான வேறு ஆடையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அழுக்கைப் பொறுத்தவரை, அது அசுத்தத்தைச் சேர்ந்ததாகவோ தொழுகையாளிகளுக்குத் தொல்லை தரக்கூடிய- வெறுக்கத்தக்க வாடையுள்ளதாகவோ இல்லை எனில் அது தொழுகையை விட்டும் தடுக்கக்

கூடியதாக இருக்காது. ஆனால் அந்த அழுக்கோ அதன் வாடையோ தொழுகையாளிகளுக்குத் தொல்லை தரக் கூடியதாக இருந்தால் ஒரு முஸ்லிம் தொழுகைக்கு முன் அதைக் கழுவிக் கொள்ள வேண்டும். அல்லது வேறு உடை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நோயாளிகள், பயணிகள் போன்ற மார்க்கம் அனுமதிக்கின்ற காரணமுள்ளவர்கள் ளுஹரையும் அஸரையும் ளுஹருக்குரிய நேரத்திலோ அல்லது அஸருக்குரிய நேரத்திலோ சேர்த்துத் தொழுவது கூடும். இவ்வாறே ம.்.க்ரிபையும் இஷாவையும் இஷாவுடைய நேரத்திலோ அல்லது ம.்.க்ரிபுடைய நேரத்திலோ சேர்த்துத் தொழுவதும் கூடும். இதற்கு நபி(ஸல்)அவர்களுடைய வழிகாட்டுதலில் ஆதாரப்பூர்வமான சான்று உள்ளது. இவ்வாறே மழைக்காலங்களில் வழிகளில் சேறு ஏற்பட்டு அதனால் பள்ளிவாசலுக்கு வருவது மக்களுக்கு சிரமமாக இருந்தால் சேர்த்துத் தொழுவது கூடும்.

14. ஒருவன் தொழுது முடித்த பிறகு தனது ஆடையில் அசுத்தத்தைக் கண்டால் அந்தத் தொழுகையை அவன் திருப்பித் தொழ வேண்டுமா?

**பதில்:** ஒருவன் தனது உடம்பிலோ ஆடையிலோ அசுத்தம் இருப்பதுடன் தொழுது விடுகிறான். தொழுது முடித்த பிறகே அந்த அசுத்தம் அவனுக்குத் தெரிய வருகிறது எனில் அறிஞர்களின் இரு வேறு கருத்துக்

களில் சரியான கருத்தின்படி அவனது தொழுகை நிறைவேறிவிடும். இவ்வாறே முன்னரே அசுத்தம் இருப்பது தெரியவந்து பிறகு தொழுகை நேரத்தில் அதனை மறந்து விடுகிறான். பிறகு தொழுது முடித்த பிறகே அது நினைவுக்கு வருகிறது என்றால் அவனது தொழுகையும் நிறைவேறிவிடும். ஏனெனில், ﴿رَبَّنَا لَا تُؤَاخِذْنَا إِنْ نَسِينَا أَوْ أَخْطَأْنَا﴾ "எங்கள் இறைவா! நாங்கள் மறந்துவிட்டாலோ தவறு செய்து விட்டாலோ எங்களைத் தண்டித்து விடாதே!" (2:286) என்று அல்லாஹ் கூறுகிறான்.

மேலும் நபி(ஸல்)அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸும் இக்கருத்தைச் சரிகாணுகிறது. ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் செருப்புடன் தொழும்போது அதில் அசுத்தம் இருந்தது. உடனே ஜிப்ரீல்(அலை) அது பற்றி நபி(ஸல்)அவர்களுக்கு எடுத்துக் கூறியதும் நபியவர்கள் செருப்பைக் கழற்றிவிட்டுத் தொழுகையைத் தொடர்ந்தார்கள். அத்தொழுகையைப் புதிதாக முதலிலிருந்து ஆரம்பித்துத் தொழவில்லை. (பார்க்க: அபூதாவூத் 650) இது அல்லாஹ் வழங்கிய இலகுவாகும். தனது அடியார்களுக்கு அவன் காட்டிய க்ருணையுமாகும். எனினும் ஒருவன் உளுவின்றி இருப்பதை மறந்த நிலையில் தொழுது விட்டால் அறிஞர்களின் ஏகமனதான முடிவின்படி அவன் அதைத் திருப்பித் தொழ வேண்டும். ஏனெனில்

((لَا تُقْبَلُ صَلَاةٌ بِغَيْرِ طُهُورٍ وَلَا صَدَقَةٌ مِنْ غُلُولٍ)) (م/ ٢٢٤)

“உளூவின்றி தொழுகையும் மோசடி செய்த பொருட்களிலிருந்து (கொடுக்கப்படும்) தர்மமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 224)

((لَا تُقْبَلُ صَلَاةُ مَنْ أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ)) (خ/ ١٣٥، م/ ٢٢٥)

“உங்களில் ஒருவருக்கு உளூ நீங்கிவிட்டால் மீண்டும் உளூச் செய்யாது தொழும் தொழுகை ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை” என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 135, முஸ்லிம் 225)

15. தற்போது அதிகமான மக்கள் தொழுகையை அலட்சியம் செய்கின்றனர். சிலர் தொழுகையை முழுமையாகவே விட்டுவிடுகின்றனர். இவர்களைப் பற்றிய சட்ட நிலை என்ன? இவர்கள் விஷயத்தில் ஒரு முஸ்லிமின் கடமையென்ன? குறிப்பாக இவர்களுடைய பெற்றோர், மனைவி, மக்கள் போன்ற உறவினர்களின் கடமை என்ன?

**பதில்:** தொழுகையை அலட்சியம் செய்வது மிகப் பெரும் பாவங்களில் ஒன்றாகவும் நயவஞ்சகர்களின் பண்பாகவுமிருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ إِنَّ الْمُنَافِقِينَ يُخَادِعُونَ اللهَ وَهُوَ خَادِعُهُمْ وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا كُسَالَى يُرَاءُونَ النَّاسَ وَلَا يَذْكُرُونَ اللهَ إِلَّا قَلِيلًا ﴾ [النساء:١٤٢]

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். அவனோ அவர்களை ஏமாற்ற வுள்ளான். இவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பேறிகளாகவும் மக்களுக்கு காட்டுவோராகவுமே நிற்கின்றனர். அல்லாஹ்வை மிகக் குறைவாகவே நினைக்கின்றனர். (4:142) அவர்களின் பண்புகள் பற்றி அல்லாஹ் மேலும் கூறுவதாவது:

﴿وَمَا مَنَعَهُمْ أَنْ تُقْبَلَ مِنْهُمْ نَفَقَاتُهُمْ إِلَّا أَنَّهُمْ كَفَرُوا بِاللهِ وَبِرَسُولِهِ وَلَا يَأْتُونَ الصَّلَاةَ إِلَّا وَهُمْ كُسَالَى وَلَا يُنْفِقُونَ إِلَّا وَهُمْ كَارِهُونَ﴾ [التوبة:٥٤]

அல்லாஹ்வையும் அவனது தூதரையும் மறுத்ததும், சோம்பலாகவே தொழுது வந்ததும், விருப்பமில்லாமல் (நல்வழியில்) செலவிட்டதுமே அவர்கள் செலவிட்டவை அவர்களிடமிருந்து ஏற்கப்படுவதற்குத் தடையாக இருக்கிறது. (9:54)

((إِنَّ أَثْقَلَ صَلَاةٍ عَلَى الْمُنَافِقِينَ صَلَاةُ الْعِشَاءِ وَصَلَاةُ الْفَجْرِ وَلَوْ يَعْلَمُونَ مَا فِيهِمَا لَأَتَوْهُمَا وَلَوْ حَبْوًا)) (خ/ ٦٥٧، م/ ٦٥١) واللفظ له

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: நயவஞ்சகர்களுக்கு மிகப் பாரமான தொழுகை இஷாவும் பஜ்ரும்தான். இவ்விரண்டிலுமுள்ள சிறப்பை அவர்கள் அறிந்திருப்பார் களானால் தவழ்ந்தாவது அத்தொழுகைகளுக்கு வந்து விடுவார்கள். (புகாரி 657, (முஸ்லிம் 651)

எனவே முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் ஐவேளைத் தொழுகைகளை அவற்றிற்குரிய நேரங்களில் பேணித் தொழுவதும் அத்தொழுகைகளை அமைதியாக நிறைவேற்றுவதும் அவற்றின் பால் கவனம் செலுத்தி, பணிவுடனும் முழு ஈடுபாடுடனும் தொழுவதும் கடமை யாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:

﴿ قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ، الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ ﴾ [المؤمنون: ١،٢]

திண்ணமாக நம்பிக்கை கொண்டோர் வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் தமது தொழுகையில் பணிவைப் பேணுவார்கள். (23:1-2) மேலும் தொழுகையில் அமைதி நிலையைத் தவறவிட்ட ஒருவரை நபி(ஸல்) அவர்கள் திருப்பித் தொழும்படி ஏவியுள்ளார்கள் எனவும் நபி (ஸல்) அவர்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

குறிப்பாக ஆண்கள் தொழுகைகளை பள்ளிவாசல் களில் தமது சகோதரர்களுடன் சேர்ந்து ஜமாஅத்துடன் பேணுவது அவசியமாகும். ஏனெனில்

((مَنْ سَمِعَ النِّدَاءَ فَلَمْ يَأْتِهِ فَلَا صَلَاةَ لَهُ إِلَّا مِنْ عُذْرٍ)) (جه/ ٧٩٣)

“பாங்கு சப்தத்தைக் கேட்பவர் தக்க காரணமின்றி பள்ளிக்கு செல்லவில்லையெனில் அவருக்குத் தொழு கையில்லை” என நபி(ஸல்)கூறினார்கள். (இப்னுமாஜா 793, தாரகுத்னி, இப்னு ஹிப்பான், ஹாகிம்- ஸஹீஹான அறிவிப்பாளர் தொடருடன்.)

தக்க காரணம் என்பது என்ன? என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் நோய் அல்லது அச்சநிலை எனக் கூறினார்கள். (பார்க்க: ஹாகிம், பைஹகீ)

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ أَتَى النَّبِيَّ ﷺ رَجُلٌ أَعْمَى فَقَالَ يَا رَسُولَ الله إِنَّهُ لَيْسَ لِي قَائِدٌ يَقُودُنِي إِلَى الْمَسْجِدِ فَسَأَلَ رَسُولَ الله ﷺ أَنْ يُرَخِّصَ لَهُ فَيُصَلِّيَ فِي بَيْتِهِ فَرَخَّصَ لَهُ فَلَمَّا وَلَّى دَعَاهُ فَقَالَ هَلْ تَسْمَعُ النِّدَاءَ بِالصَّلَاةِ قَالَ نَعَمْ قَالَ فَأَجِبْ (م)

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களிடம் பார்வை இழந்த ஒரு மனிதர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! என்னை பள்ளிக்கு அழைத்துச் செல்பவர் யாருமில்லை" என்று கூறி, வீட்டில் தொழுது கொள்ள அனுமதி வேண்டினார். நபி(ஸல்) அவர்களும் அவருக்கு அனுமதியளித்தார்கள். அவர் திரும்பிச் சென்றபோது நபி(ஸல்) அவர்கள் அவரை அழைத்து, "தொழுகைக்கு பாங்கு சொல்லப்படுவதை நீர் செவியேற்பீரா?" எனக் கேட்டார்கள். அதற்கவர் ஆம்! எனக் கூறினார். அப்படியானால் நீ (பள்ளிக்கு வருவதன் மூலம்) அதற்குப் பதிலளிக்க வேண்டும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 653)

அபூஹுரைரா(ரலி)அவர்கள் மேலும் அறிவிப்பதாவது: 'எனக்கு இப்படியொரு எண்ணம் தோன்றியது. அதாவது நான் தொழுகைக்கு இகாமத் சொல்லுமாறு உத்தர

விட்டு அதன்படி இகாமத் சொல்லப்பட்டு பின்னர் ஒரு வரை மக்களுக்கு தொழுவிக்குமாறு கட்டளையிட்டு, பின்னர் சில மனிதர்களுடன் விறகுகளை எடுத்துக் கொண்டு (கூட்டுத்) தொழுகைக்கு வராதவர்களிடம் சென்று அவர்களை வீட்டோடு எரித்து விடலாம்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். ((முஸ்லிம் 651) புகாரி யிலும் இக்கருத்து உள்ளது.

((وَلَقَدْ هَمَمْتُ أَنْ آمُرَ بِالصَّلَاةِ فَتُقَامَ ثُمَّ آمُرَ رَجُلًا فَيُصَلِّيَ بِالنَّاسِ ثُمَّ أَنْطَلِقَ مَعِي بِرِجَالٍ مَعَهُمْ حُزَمٌ مِنْ حَطَبٍ إِلَى قَوْمٍ لَا يَشْهَدُونَ الصَّلَاةَ فَأُحَرِّقَ عَلَيْهِمْ بُيُوتَهُمْ بِالنَّارِ))(م/ ٦٥١)

ஆதாரப்பூர்வமான இந்நபிமொழிகள் யாவும் ஜமா அத்துடன் தொழுவது ஆண்கள் விஷயத்தில் மிக முக்கி யமான கடமையாகும் என்பதையும் ஜமாஅத் தொழு கைக்கு வராதவர்கள் சரியான தண்டனைக்குரியவர்கள் என்பதையும் அறிவிக்கின்றன.

அல்லாஹ் அனைத்து முஸ்லிம்களின் நிலைமை களையும் சீராக்குவானாக. அவன் விரும்பியவாறு அவர்கள் நடப்பதற்கு நல்லருள் புரிவானாக! என அல்லாஹ்விடம் இறைஞ்சுகிறோம்.

அறிஞர்களின் மிகச் சரியான கருத்தின்படி, சில நேரங் களிலேனும் தொழுகையை முழுமையாக விட்டுவிடுவது

மிகப் பெரும் இறைநிராகரிப்பாகும். தொழுகையை விட்டு விடுபவர் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந் தாலும் சரி! மேலும் தொழுகை கடமையென்பதை அவர் மறுக்கவில்லையென்றாலும் சரியே. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

((إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ)) (م/ ٨٢)

“ஒரு மனிதன் இணைவைப்பிலும் இறைநிராகரிப்பிலும் இருக்கிறான் என்பதன் அடையாளம் தொழுகையை விட்டுவிடுவதாகும்.” (முஸ்லிம் 82)

((الْعَهْدُ الَّذِي بَيْنَنَا وَبَيْنَهُمْ الصَّلَاةُ فَمَنْ تَرَكَهَا فَقَدْ كَفَرَ)) (ت/ ٢٦٢١)

“நமக்கும் அவர்களுக்குமிடையே உள்ள உடன்பாடு தொழுகைதான். எவன் அதை விட்டுவிடுகிறானோ அவன் கா.ஃ.பிராகிவிட்டான்.” (அஹ்மத் 21859, திர்மிதி 2621, நஸயீ 459, இப்னுமாஜா 1079) இது தொடர்பாக இன்னும் அநேக ஹதீஸ்கள் உள்ளன.

தொழுகை கடமை என்பதை ஆண்களில் அல்லது பெண்களில் யாரேனும் மறுத்தால்- அறிஞர்களின் ஏகமன தான முடிவின்படி- அவர் மிகப் பெரும் இறைநிராகரிப்புச் செயலை செய்தவராவார். அவர் தொழுதாலும் சரியே. அல்லாஹ் நம்மையும் எல்லா முஸ்லிம்களையும் இதிலி ருந்து காத்தருள்வானாக என அல்லாஹ்விடம் வேண்டு

கிறோம். நிச்சயமாக அவன் பிரார்த்திக்கப்படுவதற்குச் சிறந்தவனாவான்.

ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுவதும் சத்தியத்தை எடுத்துரைப்பதும் நன்மையான காரியத்திலும் இறையச்சமுள்ள காரியத்திலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதும் முஸ்லிம்கள் அனைவர் மீதும் கடமையாகும். இத்தகைய கடமையில் இதுவும் ஒன்றாகும்: ஜமாஅத்துக்கு யார் வராமலிருக்கின்றாரோ அல்லது ஜமாஅத்துக்கு வருவதில் யார் அலட்சியமாக இருக்கின்றாரோ அதனால் சில நேரங்களில் தொழுகையையே விட்டுவிடுகின்றாரோ அவருக்கு உபதேசம் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கோபம் மற்றும் தண்டனை குறித்து அவரை எச்சரிக்க வேண்டும். அவருடைய தாய், தந்தை, சகோதரர்கள் மற்றும் வீட்டிலுள்ள அனைவரும் அவருக்கு அறிவுரை செய்ய வேண்டும். அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டி அந்த நேர்வழியில் அவர் நிலைத்திருக்கும் வரை அந்த அறிவுரையை தொடர்ந்து செய்து வர வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَالْمُؤْمِنُونَ وَالْمُؤْمِنَاتُ بَعْضُهُمْ أَوْلِيَاءُ بَعْضٍ يَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَيُؤْتُونَ الزَّكَاةَ وَيُطِيعُونَ اللهَ وَرَسُولَهُ أُولَئِكَ سَيَرْحَمُهُمُ اللهُ إِنَّ اللهَ عَزِيزٌ حَكِيمٌ ﴾ [التوبة:٧١]

நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றவருக்கு உற்ற நண்பர்களாவர். அவர்கள் நன்மையை ஏவுவார்கள் தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலைநாட்டுவார்கள், ஸகாத்தையும் கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவார்கள். அவர்களுக்கே அல்லாஹ் அருள் புரிவான். அல்லாஹ் மிகைத்தவனும் நுண்ணறிவாளனும் ஆவான். (9:71)

((مُرُوا أَوْلَادَكُمْ بِالصَّلَاةِ وَهُمْ أَبْنَاءُ سَبْعِ سِنِينَ وَاضْرِبُوهُمْ عَلَيْهَا وَهُمْ أَبْنَاءُ عَشْرٍ وَفَرِّقُوا بَيْنَهُمْ فِي الْمَضَاجِعِ)) (د/ ٤٩٥)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களின் குழந்தைகள் ஏழு வயதை அடையும்போது அவர்களை தொழும்படி ஏவுங்கள், பத்து வயதை அடைந்ததும் (தொழவில்லையானால்) அவர்களை அடியுங்கள், படுக்கையில் அவர்களைப் பிரித்து வையுங்கள். (அபூதாவூத் 495) ஏழு வயதில் சிறுவர் சிறுமியரைத் தொழும்படி ஏவுவதற்கும், பத்து வயதில் அவர்கள் தொழாவிட்டால் அடிப்பதற்கும் ஏவப்பட்டிருக்கும்போது பருவ வயதை அடைந்தவர்களை தொழும்படி ஏவுவதற்கும் தொழுகையை விட்டுவிட்டால் அவர்களை அடிப்பதற்கும் அத்துடன் தொடர்ந்து அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கும் கூடுதல் கடமைப்பட்டுள்ளோம்.

சத்தியத்தையும் பொறுமையையும் ஒருவருக்கொருவர் போதித்துக் கொள்ள வேண்டுமென்று அல்லாஹ் கூறியுள்ளான்.

﴿وَالعَصْرِ، إِنَّ الإِنْسَانَ لَفِي خُسْرٍ، إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ، ﴾[العصر:١-٣]

“காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்து, உண்மையையும் பொறுமையையும் போதித்துக் கொண்டோரைத் தவிர.” (104:1-3)

(இஸ்லாமியச் சட்டங்கள் ஆளுகின்ற நாட்டில்) யாரேனும் பருவ வயதை அடைந்த பின்னர் தொழாமலும் உபதேசத்தை ஏற்காமலும் இருந்தால் அவன் அதிலிருந்து மீள்வதற்காக அவன் பிரச்சனையை ஷரீஅத் அடிப்படையிலான நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். பிறகு அவன் தவ்பாச் செய்து மீண்டு விட்டால் சரி. இல்லையெனில் அவன் கொல்லப்படுவான்.

எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்களின் நிலைமைகளை சீராக்குவானாக! மார்க்கத்தில் அவர்களுக்கு விளக்கம் அளிப்பானாக! நன்மையான காரியத்திலும் இறையச்சமுள்ள காரியத்திலும் ஒருவருக்கொருவர் உதவுவதற்கும் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதற்கும் சத்தியத்தையும் பொறுமையையும் ஒருவருக்

கொருவர் அறிவுரை செய்வதற்கும் அருள்புரிவானாக! என்று அவனிடம் இறைஞ்சுவோமாக. நிச்சயமாக அவன் வாரி வழங்குபவனும் கொடைவள்ளலும் ஆவான்.

16. வாகன விபத்துகள் போன்ற சில விபத்துகளின் காரணமாக சிலருக்கு மூளையில் அடிபட்டு பல நாட்கள் சுயநினைவை இழந்து விடுகின்றனர். அல்லது மயக்க முற்றுவிடுகின்றனர். அவர்களுக்கு நினைவு திரும்பியதும் விடுபட்ட தொழுகைகளை அவர்கள் கழாச் செய்ய வேண்டுமா?

**பதில்:** மூன்று அல்லது அதைவிடக் குறைவான நாட்கள் அவர்கள் சுயநினைவற்றிருந்தால் தொழுகை களைக் கழா செய்வது அவசியமாகும். ஏனெனில் மேற் கூறப்பட்ட நாட்களில் அவர்கள் மயக்க முற்றிருப்பது தூக்கத்திற்கு ஒப்பானதாகும். அது கழா செய்வதைத் தடுக்காது. பல நபித்தோழர்களுக்கு மூன்று நாட்க ளுக்கும் குறைவாக மயக்க நிலை ஏற்பட்டிருந்த போது தொழுகைகளைக் கழா செய்துள்ளார்கள் என்று அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்க ளுக்கும் மேலாக மயக்க நிலை இருந்தால் கழா செய்ய வேண்டியதில்லை.

((رُفِعَ الْقَلَمُ عَنْ ثَلَاثَةٍ عَنْ النَّائِمِ حَتَّى يَسْتَيْقِظَ وَعَنْ الصَّبِيِّ حَتَّى يَشِبَّ وَعَنْ الْمَعْتُوهِ حَتَّى يَعْقِلَ)) (ت/ ١٤٢٣، د/ ٤٤٠٢، جه/ ٢٠٤١)

ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்று நபர்களை விட்டும் எழுதுகோல் உயர்த்தப்படுகின்றது. தூங்குபவன் விழிக்கும் வரையிலும், சிறுவன் பருவ வயதை அடையும் வரையிலும், பைத்தியம் பிடித்தவன் தெளியும் வரையிலும். (அதாவது இந்தச் சந்தர்ப்பங் களில் இவர்களிடம் நிகழும் பாவங்கள் பதிவு செய்யப் படுவதில்லை.) (திர்மிதி 1423, அபூதாவூத் 4402, இப்னு மாஜா 2041) மூன்று நாட்களுக்கும் மேலாக மயக்க நிலை இருப்பவர்கள் அவர்களின் முழு உணர்வும் நீங்கி யிருப்பதால் பைத்தியக்காரனுக்கு ஒப்பாகிவிடுகிறார்கள்.

17. பெரும்பாலான நோயாளிகள் தொழுகையில் அலட்சியமாக இருக்கின்றார்கள். நான் குணமடைந்த பின்னர் கழா செய்து கொள்வேன் எனக் கூறுகின்றார்கள். இன்னும் சிலர் என்னால் உளு செய்ய முடிவதில்லை. அசுத்தத்தை விட்டும் தூய்மையாக இருக்க முடிவ தில்லை. நான் எப்படித் தொழுவது? என்றும் கூறுகின் றனர். இவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:** நோயாளிக்கு சுயநினைவு இருக்கும் வரை- சுத்தம் செய்ய இயலவில்லை என்ற காரணத்திற்காக அவரது நோய் தொழுகையை நிறைவேற்றுவதை விட்டும் அவரைத் தடுக்காது. எனினும் நோயாளி தனது சக்திக் கேற்ப தொழுது கொள்ள வேண்டும். முடிந்தால் தண்ணீ ரைக் கொண்டு உளு செய்ய முடிந்தால் அவ்வாறு

செய்து கொள்ள வேண்டும். தண்ணீரைப் பயன்படுத்த இயவில்லை எனில் தயம்மும் செய்து கொள்ள வேண்டும். மேலும் தொழுகை நேரத்தில் உடம்பில் அல்லது ஆடையில் உள்ள அசுத்தத்தைக் கழுவிக் கொள்ள வேண்டும். அல்லது அதை மாற்றிவிட்டு வேறு சுத்தமான ஆடை அணிந்து கொள்ள வேண்டும். அசுத் தத்தைக் கழுவவோ ஆடையை மாற்றவோ இயலவில் லையெனில் அதைச் செய்ய வேண்டாம். தனது நிலை மைக்கேற்ப அவர் தொழுது கொள்ள வேண்டும்.

﴿فَاتَّقُوا اللهَ مَا اسْتَطَعْتُمْ﴾ [التغابن:١٦] உங்களால் முடிந்த வரை அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (அல்குர்ஆன் 64:16)

((وَإِذَا أَمَرْتُكُمْ بِأَمْرٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ)) (خ/ ٧٢٨٨، م/ ١٣٣٧)

“நான் உங்களுக்கு ஒன்றை ஏவினால் அதை முடிந்த அளவு செய்யுங்கள்” என நபி(ஸல்) அவர்கள் கூறி னார்கள். (புகாரி 7288, முஸ்லிம் 1337)

((صَلِّ قَائِمًا فَإِنْ لَمْ تَسْتَطِعْ فَقَاعِدًا فَإِنْ لَمْ تَسْتَطِعْ فَعَلَى جَنْبٍ))

இம்ரான் இப்னு ஹுஸைன் (ரலி) அவர்கள், தாம் நோயுற்றிருப்பதாக நபி(ஸல்)அவர்களிடம் கூறியபோது, “நீ நின்று தொழு. இயலாவிட்டால் உட்கார்ந்து தொழு. அதற்கும் இயலாவிட்டால் ஒருக்கழித்துப் படுத்துத்துக் கொண்டு தொழு” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (புகாரி1117) நஸயீயின் ஸஹீஹான அறிவிப்புத் தொடரில்

“அதற்கும் இயலாவிட்டால் நிமிர்ந்து படுத்துத் கொண்டு தொழு” என கூடுதல் வாசகத்துடன் வந்துள்ளது.

18. வேண்டுமென்றே தொழுகையை விட்டவன் -ஒரு வேளைத் தொழுகையை அவன் விட்டாலும் சரி அல்லது கூடுதலாக விட்டாலும் சரி- அல்லாஹ் அவனுக்கு திருந்துவதற்கான வாய்ப்பை வழங்கினால் விடுபட்ட தொழுகையை கழா செய்ய வேண்டுமா?

**பதில்:** அறிஞர்களின் சரியான கூற்றின்படி வேண்டு மென்றே அவன் தொழுகையை விட்டிருந்தால் கழா செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் ஒருவன் வேண்டு மென்றே தொழுகையை விடுவது அவனை இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியேற்றி, கா∴பிர்களின் கூட்டத்தில் சேர்த்துவிடுகிறது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

((إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ)) (م/ ٨٢)

ஒரு மனிதன் இறைநிராகரிப்பிலும் இணைவைப்பிலும் இருக்கிறான் என்பதன் அடையாளம் அவன் தொழு கையை விட்டுவிடுவதாகும். அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி), நூல்: முஸ்லிம் 82

((الْعَهْدُ الَّذِي بَيْنَنَا وَبَيْنَهُمْ الصَّلَاةُ فَمَنْ تَرَكَهَا فَقَدْ كَفَرَ)) (حم/ ٢١٨٥٩)

“நமக்கும் அவர்களுக்குமிடையே உள்ள உடன்பாடு தொழுகைதான். எவன் அதை விட்டுவிடுகிறானோ அவன்

கா.்.பிராகிவிட்டான்" எனவும் நபி(ஸல்)அவர்கள் கூறியுள் ளார்கள். அறிவிப்பவர்: புரைதா இப்னு ஹஸீப் (ரலி), நூல்: அஹ்மத் 21859, திர்மிதி 2621, நஸயீ 459, இப்னு மாஜா 1079.

ஒரு கா.்.பிர்- கு.்.ப்ருடைய காலத்தில் விடுபட்ட தொழு கையை கழா செய்ய மாட்டான். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கா.்.பிர்களுக்கு, விடுபட்ட தொழுகை களை கழா செய்ய வேண்டுமென நபி(ஸல்) அவர்கள் கட்டளையிடவில்லை. அதுபோல இஸ்லாத்தை விட்டும் மதம் மாறி மீண்டும் இஸ்லாத்தில் இணைகின்றவர்கள் தங்கள் தொழுகைகளைக் கழாச் செய்ய வேண்டும் என்று நபித்தோழர்களும் கூறவில்லை.

ஆனால் வேண்டுமென்றே தொழுகையை விட்டவன்- அதே நேரத்தில் தொழுகை கடமை என்பதை மறுக்க வில்லையெனில் அதைக் கழா செய்தால் குற்றமில்லை. அதுதான் பேணுதலுக்குரிய செயலாகவும் அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளுக்குரிய பிரச்சனைக்குள் புகுந்து விடாமல் இருப்பதாகவும் அமையும். ஏனெனில் தொழு கையை விட்டவன்- தொழுகை கடமை என்பதை அவன் மறுக்கவில்லை எனில்- கா.்.பிராக மாட்டான் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அல்லாஹ் மிக அறிந்தவன்!

**பாங்கு**

19. தொழுகையின் ஆரம்ப நேரத்தில் பாங்கு சொல்லப்படவில்லை எனில் பிறகு பாங்கு சொல்லத் தேவையில்லை. ஏனெனில் பாங்கு சொல்வது நேரம் வந்து விட்டதை அறிவிப்பதற்குத்தான் எனச் சிலர் கூறுகின்றனர். இது விஷயத்தில் தாங்களின் கருத்தென்ன? மேலும் வனாந்தரத்தில் தனித்துத் தொழுபவன் பாங்கு சொல்ல வேண்டுமா?

**பதில்:** பாங்கு சொல்பவர் தொழுகையின் ஆரம்ப நேரத்தில் பாங்கு சொல்லவில்லையெனில் பிறகு பாங்கு சொல்வதை ஷரீஅத் அவருக்கு அனுமதிப்பதில்லை. அந்த இடத்தில் அவரல்லாத வேறு பாங்கு சொல்பவர்கள் இருந்தால் (அவர்கள் பாங்கு சொல்லியிருப்பார்கள் என்பதனால்) பாங்கு சொல்லப்பட வேண்டும் என்ற நோக்கம் நிறைவேறி விடுகிறது. என்றாலும் பாங்கு சொல்வதற்கு சிறிதளவுதான் தாமதமாகிவிட்டது என்றால் அவர் பாங்கு சொல்வதில் தவறில்லை. மேலும் அந்த ஊரில் அவர் மட்டுமே பாங்கு சொல்பவர் என்றால் கொஞ்ச நேரம் தாமதமானாலும் பாங்கு சொல்லித் தான் ஆக வேண்டும். ஏனெனில் பாங்கு சொல்வது அனைவருக்கும் பொதுவாக ஒருவராவது சொல்லிவிட வேண்டும் எனும் நிலையிலுள்ள கடமை (ஃபர்ளு

கி.ஃபாயா) ஆகும். அவரைத் தவிர வேறு யாரும் சொல்ல வில்லை என்பதால் இப்போது அவர் மீது பாங்கு சொல்வது கடமையாகிவிடுகிறது. ஏனெனில் பாங்கு சொல்வதற்கு அவர்தான் பொறுப்பாளராக இருக்கிறார். மட்டுமல்ல மக்கள் பெரும்பாலும் அவரின் பாங்கையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

பயணத்தில் இருப்பவர் ஓரிடத்தில் அவர் மட்டும் தனித் திருந்தால் அங்கு அவர் பாங்கு சொல்லிக் கொள்ள வேண்டும் என்று ஷரீஅத் விரும்புகிறது. ஏனெனில் அபூஸஈத்(ரலி) அவர்கள் அறிவிக்கக்கூடிய ஆதாரப் பூர்வமான ஹதீஸ் வந்துள்ளது.

((فَإِذَا كُنْتَ فِي غَنَمِكَ أَوْ بَادِيَتِكَ فَأَذَّنْتَ بِالصَّلَاةِ فَارْفَعْ صَوْتَكَ بِالنِّدَاءِ فَإِنَّهُ لَا يَسْمَعُ مَدَى صَوْتِ الْمُؤَذِّنِ جِنٌّ وَلَا إِنْسٌ وَلَا شَيْءٌ إِلَّا شَهِدَ لَهُ يَوْمَ الْقِيَامَةِ قَالَ أَبُو سَعِيدٍ سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللهِ ﷺ))

அபூஸஈத்(ரலி)அவர்கள் ஒரு மனிதரிடம், “நீ உனது ஆடுகளுடன் சென்றால் அல்லது நீ வனாந்தரத்தில் இருந்தால் பாங்கு சொல்லும்போது உன் குரலை உயர்த்திச் சொல்வீராக. ஏனெனில் பாங்கு சொல்பவரின் சப்தத்தைக் கேட்கின்ற ஜின்னோ மனிதனோ அல்லது வேறு எதுவாக இருந்தாலும் மறுமை நாளில் அவருக்காகச் சாட்சி சொல்லும்” என்று கூறினார்கள்.

மேலும் இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் கூறியதாகவும் குறிப்பிட்டார்கள். (புகாரி 609) மேலும் ஷரீஅத்தில் பாங்கு கடமையாக்கப்பட்டிருப்பதற்கும் அதன் நன்மைகளுக்கும் இன்னும் பல பொதுவான ஹதீஸ்களும் வந்துள்ளன.

20. ஊரில் அல்லது வனாந்தரத்தில் பெண்கள் தனியாகவோ ஜமாஅத்தாகவோ தொழும்போது பாங்கு சொல்வதற்கு ஷரீஅத்தில் அனுமதி உண்டா?

**பதில்:** பெண்கள் ஊரில் இருந்தாலும் சரி பயணத்தில் இருந்தாலும் சரி அவர்களுக்கு பாங்கு, இகாமத் மார்க்கமாக்கப்படவில்லை. ஏனெனில் பாங்கும் இகாமத்தும் ஆண்களுக்குரிய தனிப்பட்ட காரியங்களாகும். இதற்கு ஸஹீஹான பல ஹதீஸ்கள் உள்ளன.

21. ஒருவன் தனியாகவோ ஜமாஅத்துடன் சேர்ந்தோ தொழும்போது இகாமத் சொல்ல மறந்து விட்டால் அத்தொழுகையில் குறையேதும் ஏற்படுமா?

**பதில்:** தனியாகத் தொழுபவர் அல்லது ஜமாஅத்தாகத் தொழுபவர்கள் இகாமத் சொல்லாமல் தொழுது விட்டால் அவர்களது தொழுகை நிறைவேறிவிடும். ஆனால் அவ்வாறு செய்தவர்கள் அல்லாஹ்விடம் தவ்பா செய்து கொள்ள வேண்டும். இவ்வாறே பாங்கு சொல்லாமல் தொழுதாலும் அவர்களது தொழுகை கூடிவிடும். ஏனெனில் பாங்கும் இகாமத்தும் அனைவ

ருக்கும் பொதுவாக ஒருவராவது சொல்லிவிட வேண்டும் எனும் நிலையிலுள்ள கடமை (ஃபர்ளு கிஃபாயா) ஆகும். இவ்விரண்டும் தொழுகையின் அடிப்படைக் கடமைக ளுக்கு வெளியே உள்ளவையாகும்.

பாங்கையும் இகாமத்தையும் விட்டவர்கள் அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஃபர்ளு கிஃபாயா எனும் நிலையிலுள்ள கடமைகளை ஒருவர் கூட செய்யாமல் எல்லோரும் விட்டுவிட்டால் அனைவரும் குற்றவாளியாவர். ஒருவ ராவது நிறைவேற்றிவிட்டால் அனைவரின் சார்பாக அந்த கடமை நீங்கிவிடும். இத்தகைய ஃபர்ளு கிஃபாயா எனும் நிலையிலுள்ள கடமைகளில் ஒன்றுதான் பாங்கும் இகா மத்தும். இவ்விரண்டையும் ஒருவரேனும் செய்துவிட்டால் மற்ற அனைவரையும் விட்டும் கடமையும் குற்றமும் நீங்கிவிடும். அவர்கள் ஊரிலிருந்தாலும் சரி அல்லது பயணத்திலிருந்தாலும் சரி. கிராமங்கள், நகரங்களில் இருந்தாலும் சரி அல்லது வனாந்தரத்தில் இருந்தாலும் சரி. அல்லாஹ் அனைத்து முஸ்லிம்களுக்கும் அவன் விரும்புகின்ற வழியில் செல்வதற்கு அருள் புரிவானாக! எனப் பிரார்த்திப்போம்.

22. ஃபஜ்ருத் தொழுகையில் பாங்கு சொல்பவர் “அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்” (தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது) எனக் கூறுவதற்கு ஆதார

முள்ளதா? “ஹய்ய அலா ஹைரில் அமல்” (நற்செயலின் பகக்கம் விரைந்து வாருங்கள்) எனக் கூறுகிறார்களே! அது பற்றி தங்கள் கருத்தென்ன? அதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா?

**பதில்:** நபி (ஸல்) அவர்கள் பிலால்(ரலி) அவர்களுக்கும் அபூமஹ்தூரா (ரலி) அவர்களுக்கும் ஃபஜ்ருடைய பாங்கில் “அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்” எனக் கூறும்படி கட்டளையிட்டதாக நபிமொழிகளில் நிரூபணமாகியுள்ளது. (பார்க்க: நஸயீ 643, அபூதாவூத் 504) மேலும் அனஸ் (ரலி) அவர்கள் “ஃபஜ்ருடைய பாங்கில் ‘அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்’ எனக் கூறுவது நபிவழியாகும்” எனக் கூறியுள்ளதாக இப்னு ஹுஸைமா அவர்கள் தமது நூலில் பதிவு செய்துள்ளார்கள். (பர்க்க: இப்னு ஹுஸைமா 2/170) அறிஞர்களின் சரியான கருத்தின்படி இவ்வார்த்தை அதிகாலை (ஃபஜ்ர்) உதயமானதும் சொல்ல வேண்டிய பாங்கில் சொல்லப்படும். இகாமத்தைக் கவனித்து இதற்கு முதல் பாங்கு என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் இகாமத்து இரண்டாவது பாங்காக உள்ளது. “ஒவ்வொரு இரண்டு பாங்குகளுக்கும் இடையில் தொழுகையுண்டு” என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதுபோல. (புகாரி 624)

((بَيْنَ كُلِّ أَذَانَيْنِ صَلَاةٌ ثَلَاثًا لِمَنْ شَاءَ)) (خ/ ٦٢٤)

பாங்கில் “ஹய்ய அலா ஹைரில் அமல்” (சிறந்த செயலின் பக்கம் விரைந்து வாருங்கள்) என்று சில ஷிஆக்கள் கூறுவது பித்அத்தாகும். இதற்கு ஸஹீஹான ஹதீஸ்களில் எந்த ஒரு ஆதாரமுமில்லை. அல்லாஹ் அவர்களுக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் நபிவழி யைப் பின்பற்றி நடப்பதற்கும், அதைத் தங்களின் கடவாய்ப் பற்களால் பற்றிப் பிடித்துக் கொள்வதற்கும் வழிகாட்டுவானாக! என அவனிடம் வேண்டுவோமாக. ஏனெனில் நபிவழிதான் நம் சமுதாயத்தில் அனைவ ருக்கும் ஈடேற்றமும் நற்பாக்கியமும் பெறுவதற்கான வழிமுறையாகும்.

23. கிரகணத் தொழுகைக்கு “அஸ்ஸலாத்து ஜாமிஆ” (ஜமாஅத்து தொழுகைக்கு வாருங்கள்) என அழைப்பு விடுக்கப்பட வேண்டுமென ஹதீஸில் வந்து உள்ளது. அது ஒரு முறை கூற வேண்டுமா? அல்லது பல முறை கூற வேண்டுமா? பல முறை கூறவேண்டு மெனில் எத்தனை முறை?

**பதில்:** கிரகணத் தொழுகைக்கு “அஸ்ஸலாத்து ஜாமிஆ” என அழைப்பு விடுக்க வேண்டுமென நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டதாக ஹதீஸ்களில் காணப்படு கின்றது. (பார்க்க: புகாரி 1066, முஸ்லிம் 901) இவ்வாறு அழைப்பு விடுப்பவர் தாம் இதனை மக்களுக்கு செவி யேற்கச் செய்துவிட்டோம் என எண்ணும் வரை திரும்பத்

திரும்ப அவ்வார்த்தையைக் கூறுவது நபிவழியாகும். நாம் அறிந்த வரை இதற்கென குறிப்பிட்ட வரம்பு ஏதும் கிடையாது. அல்லாஹ் மிக அறிந்தவன்!

## தொழும் முறை

24. தொழும்போது தமக்கு முன்னால் ஒரு தடுப்பு வைத்துக் கொள்ளும் விஷயத்தில் அதிகமான சகோ தரர்கள் கடுமையாக நடந்து கொள்கின்றார்கள். எந்த அளவுக்கெனில் பள்ளியில் இருக்கும்போது காலியான ஒரு தூண் கூட அவர்களுக்குக் கிடைக்காத போது வேறு தடுப்பு கிடைக்கும் வரை காத்துக் கொண்டிருக் கின்றனர். தடுப்பு ஏற்படுத்திக் கொண்டு தொழாதவர் களை ஆட்சேபிக்கவும் செய்கின்றனர். இன்னும் சிலர் இவ்விஷயத்தில் கவனக்குறைவாக இருக்கிறார்கள். இதில் எது உண்மை? தடுப்பு இல்லாதபோது தடுப் புக்குப் பதிலாக கோடு போட்டுக் கொள்ளலாமா? இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

**பதில்:** தடுப்பு வைத்துக் கொண்டு தொழுவது வலியு றுத்தப்பட்ட சுன்னத்தாகும். கடமையானதல்ல. நட்டி வைத்துக் கொண்டு தொழுவதற்கு ஏதும் கிடைக்க வில்லையெனில் கோடு கிழித்துக் கொண்டால் போது மானதே. இதற்கான ஆதாரங்கள் வருமாறு:

((إِذَا صَلَّى أَحَدُكُمْ فَلْيُصَلِّ إِلَى سُتْرَةٍ وَلْيَدْنُ مِنْهَا)) (د/ ٦٩٧، جه/ ٩٥٤)

"உங்களில் ஒருவர் தொழும் போது தடுப்பு வைத்துக் கொண்டு தொழட்டும். அதை நெருங்கி நின்று கொள் ளட்டும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (அபூதா வூத் 697, இப்னுமாஜா 954)

((يَقْطَعُ الصَّلَاةَ إِذَا لَمْ يَكُنْ بَيْنَ يَدَيْ الرَّجُلِ مِثْلُ مُؤَخِّرَةِ الرَّحْلِ الْمَرْأَةُ وَالْحِمَارُ وَالْكَلْبُ الأَسْوَدُ)) (م/ ٥١٠، ٥١١، جه/ ٩٥٢) واللفظ له

"ஒரு முஸ்லிம் தனக்கு முன்னால் ஒரு தார்க்குச்சி போன்று எதையும் வைத்துக் கொள்ளாமல் தொழும் போது (அவரது முன்னால்) பெண், கழுதை, கருப்பு நாய் ஆகியவை (கடந்து சென்றால்) அவரது தொழுகையை முறித்துவிடும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா 952), இதே கருத்து முஸ்லிமிலும் (510, 511) இடம்பெற்றுள்ளது.

((إِذَا صَلَّى أَحَدُكُمْ فَلْيَجْعَلْ تِلْقَاءَ وَجْهِهِ شَيْئًا فَإِنْ لَمْ يَجِدْ شَيْئًا فَلْيَنْصِبْ عَصًا فَإِنْ لَمْ يَكُنْ مَعَهُ عَصًا فَلْيَخُطَّ خَطًّا وَلَا يَضُرُّهُ مَا مَرَّ بَيْنَ يَدَيْهِ)) (حم/ ٧٠٨٧)

உங்களில் ஒருவர் தொழும்போது தனக்கு முன்னால் ஏதேனும் ஒரு பொருளை (தடுப்பை) வைத்துக் கொள் ளட்டும், எதுவும் கிடைக்கவில்லையெனில் ஒரு குச்சியை நட்டி வைத்துக் கொள்ளட்டும், அதுவும் கிடைக்க வில்லையெனில் ஒரு கோடு கிழித்துக் கொள்ளட்டும், பின்னர் அவனுக்கு முன்னால் நடந்து செல்பவர்களால்

அவனுக்கு எவ்வித இடைஞ்சலும் கிடையாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத் 7087, இப்னு மாஜா 943, அபூதாவூத் 689) இதன் அறிவிப்புத் தொடர் ஹஸன் என்ற தரத்தில் உள்ளதாகும்.) இதனை ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் புலூகுல் மராம் எனும் நூலில் கூறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் நபி(ஸல்)அவர்கள் சில நேரங்களில் தடுப்பு இல்லாமலும் தொழுதுள்ளார்கள் என ஹதீஸ்களில் நிரூபணமாகியுள்ளது. இது தடுப்பு கடமையானதல்ல என்பதையே காட்டுகிறது. மேலும் தடுப்பு வைத்துக் கொண்டு தொழ வேண்டுமென்பதிலிருந்து மஸ்ஜிதுல் ஹராம் விதிவிலக்குப் பெறுகிறது. அங்கு தொழுபவர் தடுப்பு வைத்துக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இப்னு ஸுபைர் (ரலி) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் தடுப்பு இன்றி தொழுதுள்ளார்கள். அப்போது தவாஃப் செய்பவர்கள் அவர்களுக்கு முன்னால் தவாஃப் செய்து கொண்டிருந்திருந்தார்கள் என ஹதீஸில் வந்துள்ளது. மேலும் நபி(ஸல்)அவர்கள் மூலமாகவும் இதற்கு சான்று உள்ளது. ஆயினும் பலவீனமான அறிவிப்பாளர் தொடருடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டுமல்ல மஸ்ஜிதுல் ஹராம் பெரும்பாலும் மக்கள் நெருக்கடிக்குரிய இடமாகவும் தொழுபவரின் குறுக்கே

செல்வதைத் தவிர்க்க முடியாத இடமாகவும் கருதப்படு கிறது. ஆதலால் அங்கு தடுப்பு வைத்துக் கொள்ளும் கடமை நீங்கிவிடுகிறது. நெருக்கடியான நேரங்களில் மஸ்ஜிதுந் நபவீக்கும் மக்கள் நெருக்கடி நிறைந்த ஏனைய இடங்களுக்கும் இதே சட்டம்தான். அல்லாஹ் கூறுகிறான்: உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வை அஞ்சுங்கள். (64:16) நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்கு ஒன்றைக் கட்டளையிட்டால் அதனை முடிந்த அளவு செயல்படுத்தங்கள். (புகாரி 7288, முஸ்லிம் 1337) அல்லாஹ் மிக அறிந்தவன்!

25. அதிகமானோர் தமது தொழுகையில் தம் இரு கைகளையும் தொப்புளுக்குக் கீழே வைப்பதைக் காண்கிறோம். சிலர் நெஞ்சின் மீது வைக்கிறார்கள். இவர்கள் தொப்புளுக்குக் கீழ் வைப்பவர்களை கடுமை யாக ஆட்சேபிக்கிறார்கள். இன்னும் சிலர் தாடிக்குக் கீழ் வைக்கிறார்கள். வேறு சிலர் கைகளைத் தொங்க விட்டுக் கொள்கிறார்கள். இவற்றில் எது சரி?

**பதில்:** ஆதாரப்பூர்வமான நபிவழி அறிவிப்பதாவது: ஒருவன் தொழுகையில் நிற்கும்போது தனது வலது முன் கையை இடது முன் கையின் மீது வைத்து அதனை நெஞ்சின் மீது வைப்பதே சிறந்ததாகும். ருகூவுக்கு முன்னரும் ருகூவுக்குப் பின்னரும் இவ்வாறே வைக்க வேண்டும். வாயில் இப்னு ஹுஜ்ர், ஹுல்புத் தாயி மற்றும்

ஸஹ்ல் பின் ஸ.'.த் (ரலி) ஆகியோர் அறிவிக்கக்கூடிய ஹதீஸ்கள் மூலம் இந்நபிவழி நிரூபணமாகியுள்ளது. தொப்புளுக்குக் கீழே கைகளை வைப்பது தொடர்பாக அலீ(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற பலவீனமான ஹதீஸ் வந்துள்ளது. ஆனால் கைகளைக் கட்டாமல் தொங்க விட்டுக் கொள்வதும் தாடிக்குக் கீழே கைகளை வைப் பதும் நபிவழிக்கு முரணானதாகும்.

26. அதிகமான சகோதரர்கள் ஜில்ஸதுல் இஸ்தி ராஹா எனும் "ஓய்வு இருப்பு" க்கு முக்கியத்துவம் தருகி றாாகள். அதை விடுபவர்களைக் குறை கூறவும் செய்கி றார்கள். இதன் சட்டமென்ன? இமாமுக்கும் இமாமைப் பின்பற்றித் தொழுபவருக்கும் தனியாகத் தொழுப வருக்கும் ஷரீஅத்தில் இதற்கு அனுமதி உண்டா? (ஓய்வு இருப்பு என்பது ஒவ்வொரு ரக்அத் முடிந்து அடுத்த ரக்அத்திற்காக எழும்போது சிறிது உட்கார்ந்து விட்டு எழுந்திருப்பதாகும்.)

**பதில்:** இமாம், ம.'.மூம், தனித்துத் தொழுபவர் ஆகிய அனைவருக்கும் இந்த "ஓய்வு இருப்பு" விரும்பத் தக்க தாகும். இது இரண்டு ஸஜ்தாக்களுக்கிடையே அமர்வ தைப் போன்றதொரு சிறு இருப்பாகும். இந்த இருப்பில் திக்ர், துஆ எதுவும் கிடையாது. இதை யாரேனும் விட்டு விட்டால் குற்றமில்லை. நபி(ஸல்)அவர்கள் மூலம் மாலிக் இப்னு ஹுவைரித்(ரலி), அபூஹுமைத்(ரலி), மற்றும் பல

நபித்தோழர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ்கள் இதற்குச் சான்றாக உள்ளன.

27. ஒருவன் விமானத்திலிருக்கும் போது தொழுகையை எப்படி நிறைவேற்ற வேண்டும்? தொழுகையை அதன் ஆரம்ப நேரத்திலேயே விமானத்தில் வைத்துத் தொழுதுவிடுவது சிறந்ததா? அல்லது அதன் கடைசி நேரத்திற்குள் விமானம் நிலையத்தை அடைந்துவிடும் என்றிருந்தால் விமானம் நிலையத்தை அடையும் வரை காத்திருப்பது சிறந்ததா?

**பதில்:** விமானத்திலிருக்கும் ஒரு முஸ்லிமின் கடமை என்னவெனில் தொழுகை நேரம் வந்துவிட்டால் அவன் தனது சக்திக்கேற்ப தொழுகையை நிறைவேற்றி விட வேண்டும். நின்று தொழ முடிந்தால்- நின்ற நிலையிலிருந்தே ருகூ.்.வையும் சுஜூதையும் நிறைவேற்ற முடிந்தால் அவ்வாறு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு நின்று தொழ முடியவில்லையெனில் உட்கார்ந்து தொழு வேண்டும். அப்போது சைகை மூலம் ருகூவு, சுஜூத் செய்ய வேண்டும். நின்று தொழுதுவதற்கும் ருகூவு, சுஜூதை .சைகை மூலம் அல்லாமல் முறையாகச் செய்வதற்கும் வசதியான ஓர் இடம் விமானத்தில் அவனுக்கு கிடைத்தால் அவ்வாறு செய்வது அவனுக்கு கடமையாகும். இதற்கான ஆதாரங்கள் வருமாறு:

உங்களால் இயன்றவரை அல்லாஹ்வை அஞ்சுங்கள். (அல்குர்ஆன் 64:16) இம்ரான் இப்னு ஹுஸைன் (ரலி) அவர்கள் நோயுற்றிருந்த போது அவரிடம், "நீ நின்று தொழு. இயலாவிட்டால் உட்கார்ந்து தொழு. அதற்கும் இயலாவிட்டால் ஒருக்கழித்துப் படுத்துத்துக் கொண்டு தொழு" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (புகாரி 1117) நஸயீயின் ஸஹீஹான அறிவிப்புத் தொடரில் "அதற்கும் இயலாவிட்டால் நிமிர்ந்து படுத்துத் கொண்டு தொழு" என்ற கூடுதலான செய்தியும் இடம் பெற்றுள்ளது.

தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுது விடுவதே அவனுக்குச் சிறந்தது. தரையில் இறங்கி தொழு வதற்காக அதன் கடைசி நேரம் வரை பிற்படுத்தினால் குற்றமில்லை. பொதுவான ஆதாரங்களே இதற்குச் சான்றாகும். கார், ரயில், கப்பல் ஆகியவற்றில் தொழு வதன் சட்டமும் விமானத்தில் தொழுவதன் சட்டத்தைப் பேன்றுதான்.

28. பெரும்பாலோர் தொழுகையில் அதிகம் விளை யாடவும் அசையவும் செய்கிறார்கள். தொழுகையை முறிக்கக்கூடிய அசைவுக்கு குறிப்பிட்ட அளவு உண்டா? தொடர்ந்து மூன்று அசைவுகள் என இதனை வரையறுப் பதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? தொழுகையில் அதிகம் விளையாடுபவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை யாது?

தொழுகையில் அமைதியைக் கடைபிடிப்பதும் விளை யாடுவதைத் தவிர்ப்பதும் நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மீது கடமையாகும். ஏனெனில் தொழு கையில் அமைதியைக் கடைபிடிப்பது அதன் ருகுன் (முதல் நிலைக் கடமை)களில் ஒன்றாகும். நபி(ஸல்) அவர்கள், தொழுகையில் அமைதியைக் கடைபிடிக்காத ஒருவரை திருப்பித் தொழும்படி ஏவியதாக புகாரி 757, முஸ்லிமில் 397 பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே பணிவுடனும் அல்லாஹ்வின் முன்னிலையில் முழு ஈடுபாட்டுடனும் கவனத்துடனும் தொழுகையை நிறை வேற்றுவது முஸ்லிமான ஆண், பெண் அனைவரின் மீதும் கடமையாகும். “நம்பிக்கை கொண்டோர் வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் தமது தொழுகையில் பணிவைப் பேணுவார்கள்.” (அல்குர்ஆன் 23:1-2)

ஆடையையோ தாடியையோ அல்லது வேறு எதை யாவது பிடித்துக் கொண்டு தொழுகையில் விளையா டுவது வெறுக்கத்தக்கதாகும். தூய இந்த மார்க்கத்தி லிருந்து நாம் அறிந்தவரை, இந்த விளையாட்டு அதிக மாகவும் தொடராகவும் இருக்குமானால் அது ஹராம் ஆகும் என்பது மட்டுமல்ல தொழுகையையும் அது பழாக்கிவிடும். ஆயினும் இதற்கென எந்த அளவுகோலும் கிடையாது. தொடர்ந்து மூன்று அசைவுகள் என்று வரை யறுத்துக் கூறுவது பலவீனமான கருத்தாகும். இதற்கு

எந்த ஆதாரமும் கிடையாது. இதற்குரிய அளவுகோல் தொழுபவரைப் பொறுத்ததாகும். தொழுபவர் தனது விளையாட்டு அதிகமாகவும் தொடராகவும் நிகழ்ந்து விட்டதெனக் கருதினால் -அவரது தொழுகை ஃபர்ளு தொழுகையாக இருந்தால் அதைத் திருப்பித் தொழ வேண்டும், மேலும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேட வேண்டும்.

முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் நாம் கூறும் அறிவுரை இதுதான்: தொழுகையை அவர்கள் முறையாகப் பேணுவதுடன், அதில் பணிவையும் மேற் கொள்ள வேண்டும். மேலும் தொழுகையில் விளையா டுவதைத் தவிர்க்க வேண்டும். அந்த விளையாட்டு குறை வாக இருப்பினும் சரியே! ஏனெனில் தொழுகை மகத் தானதொரு கடமையாகும். இஸ்லாத்தின் தூணாகவும், இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஏகத்துவம் மற்றும் தூதுத்துவ சாட்சியத்திற்குப் பிறகு மிக முக்கி யமான கடமையுமாகும். மறுமையில் மனிதனிடம் கேட் கப்படும் முதல் கேள்வியும் இதுவேயாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் அவன் பொருந்திக் கொள்கின்ற விதத்தில் இத்தொழுகையை நிறைவேற்றிட முஸ்லிம் களுக்கு நல்லருள் புரிவானாக!

29 சுஜூதுக்கு செல்லும் போது இரண்டு கைகளை தரையில் வைப்பதற்கு முன் இரண்டு முட்டுக்கால்களை

வைப்பது சிறந்ததா? அல்லது முட்டுக்கால்களை வைப் பதற்கு முன் கைகளை வைப்பது சிறந்ததா? இது சம்பந் தமாக வரக்கூடிய இரண்டு ஹதீஸ்களை ஒன்றிணைப்பது எப்படி?

**பதில்:** அறிஞர்களின் சரியான கருத்துப்படி ஒருவர் சுஜூதுக்கு செல்லும்போது இரண்டு கைகளை தரையில் வைப்பதற்கு முன்னால் இரண்டு முட்டுக்கால்களை வைக்க இயலுமானால் அவ்வாறு வைப்பதே நபிவழி யாகும். பெரும்பாலான அறிஞர்களின் கருத்தும் இது தான். வாயில் பின் ஹுஜ்ர்(ரலி)அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸும், அதன் கருத்தில் அமைந்த இன்னும் பல ஹதீஸ்களும் இதற்கு ஆதாரமாகும்.

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸும் உண்மையில் அவற்றிற்கு முரணானது கிடையாது. மாறாக அவற்றுடன் பொருந்திப் போவதாகவே அமைந் துள்ளது. ஏனெனில் அபூஹுரைரா(ரலி)அவர்கள் அறிவிக் கின்ற ஹதீஸில் ஒட்டகம் அமர்வது போல அமர வேண் டாம் என்றே நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். ஸஜ்தாவுக்கு செல்லும்போது முட்டுக்கால்களை தரையில் வைப்பதற்கு முன் இரு கைகளை வைப்பவர் ஒட்டகத்திற்கு ஒப்பாவர் என்பது தெளிவு! அபூஹுரைரா (ரலி) அவர்களின் ஹதீஸின் கடைசியில் "இரு முட்டுக் கால்களை வைப்பதற்கு முன் கைகளை வைக்கட்டும்"

என்று கூறப்பட்டிருக்கிறதே என்று சொன்னால், யாரோ ஒரு அறிவிப்பாளர் மாற்றிக் கூறிவிட்டார் என்று எடுத்துக் கொள்வதே சரியானதாகும். அந்த ஹதீஸில் "இரு கைகளை வைப்பதற்கு முன் முட்டுக்கால்களை வைக் கட்டும்" என்று இருப்பதே சரியானதாகும். இவ்வாறு செய்வதன் மூலம் எல்லா ஹதீஸ்களும் ஒன்றிணைந்து விடும். மேலும் மேற்கூறப்பட்ட அபூஹுரைரா(ரலி) அவர் களின் ஹதீஸின் கடைசிப் பகுதி முதல் பகுதியோடு பொருந்திப் போய்விடும். அதன் மூலம் ஹதீஸ்களுக் கிடையே உள்ள முரண்பாடும் நீங்கிவிடும். இக்கருத் தையே பேறறிஞர் இப்னுல் கய்யூம்(ரஹ்)அவர்கள் தமது "ஸாதுல் மஆத்" என்ற நூலில் உணர்த்தியுள்ளார்கள். நோய் மற்றும் முதுமையின் காரணமாக முதலில் முட்டுக் கால்களை வைக்க முடியாதவர்கள் கைகளை ஊன்றி ஸஜ்தா செய்வதில் குற்றமில்லை. "உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வை அஞ்சுங்கள்." (அல்குர்ஆன் 64:16)

"நான் உங்களுக்கு ஒன்றைத் தடுத்தால் அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒன்றை ஏவினால் அதை முடிந்த அளவு செயல்படுத்துங்கள்" என நபி(ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரி 7288, முஸ்லிம் 1337) அல்லாஹ் மிக அறிந்தவன்!

30. தொழுகையில் கனைப்பது, ஊதுவது, அழுவது பற்றி தங்கள் கருத்தென்ன? இவை தொழுகையைப்

பாழாக்கிவிடுமா?

**பதில்:** தொழுகையில் கனைப்பது, ஊதுவது அழுவது இவை யாவும் தொழுகையை முறித்துவிடாது. அவசியம் ஏற்படும்போது இதைச் செய்வதில் குற்றமேதுமில்லை. ஆனால் தேவையில்லாமல் செய்வது வெறுக்கத்தக்கது. நபி(ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது அலீ (ரலி) அவர்கள் (வீட்டினுள் வர) அனுமதி கேட்டபோது அதற்காக நபி(ஸல்) அவர்கள் கனைத்தார்கள்.

அழுவதைப் பொறுத்தவரை அந்த அழுகை பணிவுடனும் இறைவனோடு ஒன்றிய வகையிலும் அதற்கென சிரமம் எடுத்துக் கொள்ளாத விதத்தில் வெளிப்பட்டால் தொழுகையிலும் தொழுகை அல்லாத இடங்களிலும் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டதே. நபி(ஸல்) அவர்கள் தொழுகையில் அழுதுள்ளார்கள் என்று ஆதாரப்பூர்வமான ஹதீஸ் வந்துள்ளது. மேலும் அபூபக்கர்(ரலி), உமர்(ரலி) மற்றும் பல நபித்தோழர்களும் அவர்களை நேர்மையுடன் பின்பற்றிய சான்றோர்களும் (தாபியீன்கள்) தொழுகையில் அழுதுள்ளார்கள் என்பதற்கு ஆதாரப் பூர்வமான சான்றுகளும் உள்ளன.

31. தொழுபவருக்கு முன்னால் நடந்து செல்வதன் சட்டநிலை என்ன? இது விஷயத்தில் ஹரம் ஷரீ∴ப் மற்ற இடங்களிலிருந்து வேறுபடுகிறதா? தொழுபவரின்

குறுக்கே செல்வதால் தொழுகை முறிந்துவிடும் என்பதன் கருத்து என்ன? உதாரணமாக கருப்பு நாய், பெண்கள், கழுதை ஆகியோர் தொழுபவரின் குறுக்கே சென்று விட்டால் அவர் திரும்பத் தொழ வேண்டுமா?

**பதில்:** தொழுபவரின் முன்னால் செல்வது அல்லது அவருக்கும் அவர் வைத்திருக்கும் தடுப்புக்கும் இடையே செல்வது ஹறாமாகும். ஏனெனில்

((لَوْ يَعْلَمُ الْمَارُّ بَيْنَ يَدَيْ الْمُصَلِّي مَاذَا عَلَيْهِ لَكَانَ أَنْ يَقِفَ أَرْبَعِينَ

خَيْرًا لَهُ مِنْ أَنْ يَمُرَّ بَيْنَ يَدَيْهِ)) (خ/ ٥١٠، م/ ٥٠٧)

“தொழுபரின் முன்னால் நடப்பவர் அதனால் தனக்கு ஏற்படும் கேட்டை அறிந்திருந்தால் அவருக்கு முன்னால் நடப்பதை விட நாற்பது (நாட்கள், மாதங்கள், வருடங்கள்) நின்று விடுவது அவருக்குச் சிறந்ததாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தொழுபவருக்கு முன்னால் நடப்பவர் பருவமடைந்த பெண்ணாக அல்லது கருப்பு நாய், கழுதையாக இருந்தால் அது அவரது தொழுகையை முறித்து விடும்; அதனைப் பாழ்படுத்தி விடும். இம்மூன்றைத் தவிர வேறு எதுவும் சென்றால் தொழுகையை முறிக்காது. ஆனால் அதன் நன்மை குறைந்து விடும்.

((يَقْطَعُ الصَّلَاةَ إِذَا لَمْ يَكُنْ بَيْنَ يَدَيْ الرَّجُلِ مِثْلُ مُؤَخِّرَةِ الرَّحْلِ الْمَرْأَةُ

وَالْحِمَارُ وَالْكَلْبُ الأَسْوَدُ)) (م/ ٥١١، جه/ ٩٥٢) واللفظ له

“ஒரு மனிதன் தனக்கு முன்னால் ஒரு தார்க்குச்சி போன்று எதையும் வைத்துக் கொள்ளாமல் தொழும் போது (அவரது முன்னால்) பெண், கழுதை, கருப்பு நாய் ஆகியவை (கடந்து சென்றால்) அவரது தொழுகையை முறித்துவிடும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: இப்னுமாஜா 952, இதே கருத்து முஸ்லிமிலும் (510) இடம்பெற்றுள்ளது.

இதுபோன்றே அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸையும் இமாம் முஸ்லிம் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். (பார்க்க: முஸ்லிம் 511) ஆனால் அதில் கருப்பு நாய் என்றில்லாமல் பொதுவாக நாய் என்று உள்ளது. ஒரே ஹதீஸ் ஒரு இடத்தில் பொதுவாகவும் ஒரு இடத்தில் குறிப்பாகவும் வந்தால் பொதுவாக வந்துள்ள ஹதீஸுக்கும் குறிப்பாக வந்துள்ள ஹதீஸின் சட்டத்தையே கொடுக்க வேண்டும் என்பது அறிஞர்களிடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அடிப்படையாகும்.

மஸ்ஜிதுல் ஹராமில் தொழுபவருக்கு முன்னால் நடந்து செல்வது ஹராமாகாது. மேற்கூறப்பட்ட மூன்றும் அல்லது வேறு எதுவும் (தொழுபவரின் குறுக்கே செல்வதால்) அவரது தொழுகையை முறித்துவிடாது. ஏனெனில் அது நெருக்கடிக்குரிய இடாமாக உள்ளது.

அங்கு தொழுபவரின் குறுக்கே செல்வதைத் தவிர்ப்பது சிரமமானதாகும். இது குறித்து தெளிவான ஹதீஸ் வந்துள்ளது. ஆனால் அதில் பலவீனம் உள்ளது. என்றாலும் இது பற்றி இப்னு ஸுபைர்(ரலி)அவர்களும் இன்னும் பல நபித்தோழர்களும் கூறியதாக வந்துள்ள செய்திகள் மூலம் இதற்கு வலு சேர்க்க முடியும். மட்டுமல்ல இது நெருக்கடி மிகுந்த இடமாகவும் குறுக்கே செல்வதைத் தவிர்ப்பது சிரமமான இடமாகவும் இருப்பதனாலும் அதற்கு இன்னும் வலு சேருகிறது.

இதே போன்றுதான் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுந் நபவியும் இன்னும் பல பள்ளிகளும். அங்கே நெருக்கடி அதிகமாகி குறுக்கே செல்வதை விட்டும் தவிர்ந்து கொள்ள இயலவில்லையெனில் குறுக்கே செல்வது ஹராமாகாது. “உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வை அஞ்சுங்கள்.” (அல்குர்ஆன் 64:16) “எவரையும் அவரது சக்திக்குட்பட்டே தவிர அல்லாஹ் சிரமப்படுத்த மாட்டான்.” (அல்குர்ஆன் 2:286) “நான் உங்களுக்கு தடுத்ததை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். நான் உங்களுக்கு ஏவியதை முடிந்த வரை செயல்படுத்தங்கள்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி 7288, முஸ்லிம் 1337)

32. தொழுகைக்குப் பிறகு துஆ செய்யும் போது கைகளை உயர்த்துவது பற்றி தங்கள் கருத்தென்ன?

இதில் ஃபர்ளு தொழுகைக்கும் நஃபில் தொழுகைக்கு மிடையே வித்தியாசம் ஏதும் உண்டா?

**பதில்:** துஆ செய்யும்போது கைகளை உயர்த்துவது சுன்னத்தாகும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

((إِنَّ رَبَّكُمْ تَبَارَكَ وَتَعَالَى حَيِيٌّ كَرِيمٌ يَسْتَحْيِي مِنْ عَبْدِهِ إِذَا رَفَعَ يَدَيْهِ إِلَيْهِ أَنْ يَرُدَّهُمَا صِفْرًا)) (د/ ١٤٨٨، ت/ ٣٥٥٦، جه/ ٣٨٦٥)

"உங்கள் இறைவன் வெட்கமுள்ளவன், கொடையாளன். அவனுடைய அடியான் அவனிடம் கை ஏந்திக் கேட்டுவிட்டால் அவனை வெறுங்கையோடு அனுப்புவதற்கு அவன் வெட்கப்படுகிறான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸல்மான்(ரலி), நூல்: அபூதாவூத் 1488, திர்மதி 3556, இப்னுமாஜா 3865, ஹாகிம் அவர்கள் இதை சரிகண்டுள்ளார்கள்.

((إِنَّ اللهَ طَيِّبٌ لَا يَقْبَلُ إِلَّا طَيِّبًا وَإِنَّ اللهَ أَمَرَ الْمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِينَ فَقَالَ ﴿يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنَ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا إِنِّي بِمَا تَعْمَلُونَ عَلِيمٌ﴾ وَقَالَ ﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ﴾ ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ يَا رَبِّ يَا رَبِّ وَمَطْعَمُهُ حَرَامٌ وَمَشْرَبُهُ حَرَامٌ وَمَلْبَسُهُ حَرَامٌ وَغُذِيَ بِالْحَرَامِ فَأَنَّى يُسْتَجَابُ لِذَلِكَ (م/ ١٠١٥)

மேலும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானதைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அல்லாஹ் தனது தூதர்களுக்குக் கட்டளையிட்டதையே மு∴மின்களுக்கும் கட்டளையிட்டுள்ளான். "தூதர்களே! தூய்மையான வற்றை உண்ணுங்கள், நல்லறம் செய்யுங்கள், நீங்கள் செய்வதை நான் நன்கு அறிகிறேன்" (அல்குர்ஆன் 23:51) மேலும் "நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றை உண்ணுங்கள்." (2:172)

பின்னர் நெடு தூரம் பயணம் செய்த ஒரு மனிதனைப் பற்றி நபி(ஸல்) குறிப்பிட்டார்கள். அவனது தலைமுடி கலைந்து புழுதி படர்ந்திருந்தது. அவன் தனது இரு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தியவனாக "என் இறைவனே! என் இறைவனே!" எனப் பிரார்த்திக் கிறான். அவன் உண்பதும் ஹராம், அவன் குடிப்பதும் ஹராம், அவன் உடுத்துவதும் ஹராம், ஹராமிலேயே அவன் வளர்ந்திருக்கிறான். அவனது பிரார்த்தனை எங்ஙு கனம் ஏற்றுக் கொள்ளப்படும்? (முஸ்லிம் 1015)

எனினும் நபி(ஸல்)அவர்கள் கைகளை உயர்த்தாத இடங்களில் கைகளை உயர்த்துவதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. உதாரணமாக ஐவேளை தொழுகைக் குப் பின்னர், இரு ஸஜ்தாக்களுக்கிடையில், தொழு

கையில் ஸலாம் கொடுப்பதற்கு முன், ஜு்ம்ஆ மற்றும் இரண்டு பெருநாட்களில் உரை நிகழ்த்தும் போது. ஏனெனில் இந்த இடங்களில் நபி(ஸல்) அவர்கள் தமது கைகளை உயர்த்தியதில்லை. ஒன்றைச் செய்வதற்கும் ஒன்றை விடுவதற்கும் நபி(ஸல்)அவர்கள் தான் நமக்கு முன்மாதிரி. என்றாலும் ஜு்ம்ஆ உரையிலோ அல்லது இரு பெருநாட்களின் உரையிலோ மழை வேண்டிப் பிரார்த்திக்கும்போது நபி(ஸல்) அவர்கள் செய்தது போல கைகளை உயர்த்துவதற்கு அனுமதியுள்ளது.

நஃபில் தொழுகைக்குப் பின் துஆச் செய்யும்போது கைகளை உயர்த்துவதற்கு தடை இருப்பதாக நமக்குத் தெறியவில்லை. பொதுவான ஆதாரங்களின் அடிப்ப டையில் இவ்வாறு செய்யலாம். என்றாலும் இதை வழக்க மாகச் செய்யாமலிருப்பதே சிறந்ததாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்திருப்பதாக நிரூபணமா கவில்லை. ஒவ்வொரு நஃபில் தொழுகைக்குப் பிறகும் அவர்கள் இப்படிச் செய்திருந்தால் அது நமக்கு அறிவிக் கப்பட்டிருக்கும். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் பயணத்தி லிருக்கும்போதும் ஊரிலிருக்கும் போதும் இன்னும் அவர் களின் ஏனைய எல்லா நிலைகளிலும் அவர்கள் சொன்ன வற்றையும் செய்தவற்றையும் நபித்தோழர்கள் நமக்கு எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

ஆனால் “தொழுகை என்பது அச்சமும் பணிவும், உனது கைகளை உயர்த்தி இறைவா! இறைவா! எனக் கூறுவதுமாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக வந்துள்ள பிரபலமான ஹதீஸ் பலவீனமானதாகும். ஹா.ஃ.பிழ் இப்னு ரஜப் அவர்களும் வேறு சில அறிஞர் களும் இதனைத் தெளிவுப்படுத்தியுள்ளனர்.

33. தொழுத பின்னர் நெற்றியிலுள்ள மண்ணைத் துடைப்பது மக்ரூஹ் என சிலர் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமுள்ளதா?

**பதில்:** நாம் அறிந்தவரை இதற்கு ஆதாரமில்லை. ஸலாம் கொடுப்பதற்கு முன் இவ்வாறு செய்வது மக்ரூஹ் ஆகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் மழை பொழிந் திருந்த ஓர் இரவில் சுபுஹ்த் தொழுது விட்டு ஸலாம் கொடுத்தார்கள். அப்போது அவர்களின் நெற்றியில் நீர் மற்றும் சேறின் அடையாளம் தென்பட்டதாக நிரூபண மாகியுள்ளது. இதிலிருந்து தொழுகை முடிவதற்கு முன் அதைத் துடைக்காமலிருப்பது சிறந்தது எனத் தெரிகிறது.

34. தொழுது விட்டு முஸா.ஃ.பஹா செய்வதன் சட்ட நிலை என்ன? இதில் .ஃ.பர்ளு தொழுகைக்கும் ந.ஃ.பில் தொழுகைக்குமிடையே ஏதேனும் வித்தியாச முண்டா?

**பதில்:** முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது முஸா.ஃ.பஹா செய்வது மார்க்கம்

அனுமதித்த ஒன்று. நபி(ஸல்) அவர்கள் தமது தோழர் களைச் சந்தித்தால் அவர்களிடம் முஸா.்.பாஹா செய் வார்கள். நபித்தோழர்களும் ஒருவரையொருவர் சந்தித் துக்கொள்ளும்போது முஸா.்.பஹா செய்வார்கள். அனஸ் (ரலி) அவர்களும் ஷஅபி(ரஹ்) அவர்களும் கூறுகிறார் கள்: “நபித்தோழர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால் முஸா.்.பஹா செய்வார்கள். பயணத்திலி ருந்து திரும்பி வந்தால் கட்டித்தழுவிக் கொள்வார்கள்.”

மேலும் கஅபிப்னு மாலிக்(ரலி)அவர்களை அல்லாஹ் மன்னித்தபோது சொர்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்ட பத்துப்பேர்களில் ஒருவரான தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் பள்ளியில், நபி (ஸல்) அவர்களின் சபையிலிருந்து எழுந்து கஅபிப்னு மாலி கிடம் சென்று முஸா.்.பஹா செய்து, பாவமன்னிப்புக் கிடைத்ததற்காக அவர்களுக்கு வாழ்த்துக் கூறியதாக புகாரி, முஸ்லிமில் உள்ளது. இந்நிகழ்ச்சி நபி(ஸல்) அவர்களின் காலத்திலும் அவர்களுக்குப் பிறகும் முஸ்லிம்களிடையே பிரபலமானதாகும்.

ஒரு ஹதீஸில் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறி னார்கள்: இரண்டு முஸ்லிம்கள் சந்தித்துக் கொள்ளும் போது ஒருவர் மற்றவரிடம் முஸா.்.பாஹா செய்தால் மரத்திலிருந்து இலைகள் உதிர்வது போல அவர்களின் பாவங்கள் உதிர்ந்துவிடும்.

பள்ளியில் அல்லது ஸ.்.ப்பில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது முஸா.்.பாஹா செய்வது விரும்பத்தக்க தாகும். தொழுகைக்கு முன் முஸா.்.பஹா செய்ய வில்லையெனில் தொழுகைக்குப் பின்னர் செய்து கொள் ளலாம். இதனால் மிக்க மேலான சுன்னத்தை நிறை வேற்றிக் கொள்ளலாம். மட்டுமல்ல அன்பை உறுதிப் படுத்தி பகைமையை அகற்றிக் கொள்ளும் அம்சமும் இதில் இருக்கிறது. எனினும் ஒருவர் .்.பர்ளு தொழு கைக்கு முன் முஸா.்.பஹா செய்யவில்லை எனில் .்.பர்ளு தொழுதுவிட்டு தொழுகைக்குப் பிறகு ஓதக் கூடிய சுன்னத்தான திக்ருகளை ஓதிய பிறகு முஸா .்.பஹா செய்து கொள்ளலாம்.

சிலர் .்.பர்ளு தொழுதுவிட்டு ஸலாம் கொடுத்தவுடன் முஸா.்.பஹா செய்கிறார்கள். இதற்கு எந்த ஆதாரமும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இன்னும் சொல் வதானால் இதற்கு ஆதாரமில்லாததால் சரியான கருத் தின்படி இது மக்ரூஹ்- வெறுக்கத்தக்கதாகும். ஏனெனில் ஒருவன் .்.பர்ளு தொழுது விட்டு ஸலாம் கொடுத்த வுடன் நபி(ஸல்) அவர்கள் செய்து வந்த திக்ருகளை செய்வதற்குத்தான் ஷரீஅத் அவனுக்கு அனுமதியளித் திருக்கிறது.

ந.்.பில் தொழுகையைப் பொறுத்த வரையில் அதற்கு முன் முஸா.்.பஹா செய்யாமல் இருந்தால் ந.்.பில்

தொழுது விட்டு முஸா.'.பஹா செய்வதற்கு மார்க்கத்தில் அவனுக்கு அனுமதியுண்டு. ந.'.பில் தொழும் முன் முஸா .'.பஹா செய்திருந்தால் அதுவே போதுமானதாகும்.

35. .'.பர்ளு தொழுகைக்குப் பிறகு சுன்னத் தொழுவதற்காக இடத்தை மாற்றிக் கொள்வது விரும்பத்தக்கதென்பதற்கு ஏதேனும் ஆதாரமுள்ளதா?

**பதில்:** நாம் அறிந்த வரை இதற்கு ஆதாரப்பூர்வமான ஹதீஸ் ஏதும் கிடையாது. எனினும் இப்னு உமர்(ரலி) அவர்களும் இன்னும் அநேக நபித்தோழர்களும் தாபிஈன்களும் அவ்வாறு செய்துள்ளனர். எனவே இது விஷயத்தில் தாரளமாக நடந்து கொள்ளலாம். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! மேலும் இது சம்பந்தமாக பலவீனமான ஹதீஸ் ஒன்று வந்துள்ளது. இப்னு உமர் (ரலி) மற்றும் சான்றோர்களான நபித்தோழர்கள் மற்றும் தாபிஈன்களுடைய செயல் அதன் பலவீனத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

36. .'.பஜ்ர் தொழுகைக்கும் ம.'.க்ரிப் தொழுகைக்கும் பின்னர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக் கலஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் என பத்து முறை கூற வேண்டு என்று ஹதீஸில் ஆர்வமூட்டப்பட்டுள்ளது. அந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானதுதானா?

**பதில்:** இது சம்பந்தமாக ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அந்த ஹதீஸ்கள் யாவும் மேற்கூறப்பட்ட திக்ரை ∴பஜ்ர் தொழுகைக்குப் பிறகும் ம∴க்ரிப் தொழுகைக்குப் பிறகும் பத்து தடவை கூற வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. ஆனால் அந்த திக்ரை பத்து தடவை பின்வருமாறு கூற வேண்டும்.

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
يُحْيِي وَيُمِيتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக் கலஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்.

எனவே பஜ்ர் தொழுகைக்குப் பிறகும் ம∴ரிப் தொழுகைக்குப் பிறகும் இந்த திக்ரைப் பேணிக் கொள்வது முஸ்லிம்களில் ஆண், பெண் அனைவருக்கும் சுன்னத்தாகும். அதுவும் ..பர்ளு தொழுகைக்குப் பிறகு ஓத வேண்டிய திக்ருகளை ஓதிய பிறகே இந்த திக்ரை ஓத வேண்டும்.

ஐவேளைத் தொழுகைகளிலும் ஸலாம் கொடுத்த பிறகு ஓத வேண்டிய திக்ருகள் வருமாறு:

அஸ்த∴க்∴பிருல்லாஹ், அஸ்த∴க்∴பிருல்லாஹ், அஸ்த∴க்∴பிருல்லாஹ் அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம் வமின்

கஸ்ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம். ((முஸ்லிம் 591)

أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ ، اَللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ
تَبَارَكْتَ يَاذَا الْجَلاَلِ وَلإِكْرَامِ

(பொருள்: அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். இறைவா! நீ எல்லாக் குறைகளை விட்டும் பாதுகாப்பு பெற்றவன். உன்னிடமிருந்தே பாதுகாப்பு ஏற்படுகின்றது. மதிப்பும் மகத்துவமும் மிக்கவனே! நீ உயர்ந்து விட்டாய்!)

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அ.'.தைத்த, வலா மு.'.திய லிமா மன.'.த, வலா யன்.'.பஉ தல்ஜத்தி மின்கல்ஜத். (புகாரி 844, முஸ்லிம் 593)

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ
اَللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَاالْجَدِّ مِنْكَ الْجَد

(பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது! புகழும் அவனுக்கே! அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். இறைவா! நீ கொடுப்பதைத்

தடுப்பவர் எவருமில்லை. நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவருமில்லை. மதிப்புடைய எவரும் எந்தப் பயனும் அளிக்கமாட்டார். மதிப்பு உன்னிடமே உள்ளது.)

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹி, லாயிலாஹ இல்லல்லாஹு வலா நஅபுது இல்லா இய்யாஹு, லஹுன் நி.'.மது, வலஹுல் .'.பழ்லு, வலஹுஸ் ஸனாவுல் ஹஸனு, லாயிலாஹ இல்லல் லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் கா.'.பிரூன். (முஸ்லிம் 594)

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ لاَإِلَهَ إِلاَّ اللهُ وَلاَ نَعْبُدُ إِلاَّ إِيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ لاَإِلَهَ إِلاَّ اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

(பொருள்: வணக்கத்திற்குரியவன அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது! புகழும் அவனுக்கே! அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். அல்லாஹ்வின் துணையின்றி நல்லவற்றைச் செய்யவோ தீயவற்றிலிருந்து விலகவோ இயலாது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர

வேறு யாருமில்லை. அவனைத் தவிர வேறு எவரையும் நாங்கள் வணங்கமாட்டோம். அருட்கொடை அவனுக் குரியது. பேருபகாரமும் அவனுக்குரியது. அழகிய புகழும் அவனுக்குரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எருமில்லை. நிராகரிப்போர் விரும்பாவிட் டாலும் வணக்கங்களை அவனுக்கு மட்டுமே கலப்பற்ற முறையில் செய்வோம்.)

இமாகமாக இருந்தால் அஸ்த.'.க்.'.பிருல்லாஹ், அஸ்த.'.க்.'.பிருல்லாஹ், அஸ்தக்.'.பிருல்லாஹ், அல்லா ஹு"ம்ம அன்தஸ்ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபாரக்த்த யாதல் ஜலாலி வல் இக்ராம் என்று கூறியதும் மக்களை முன்னோக்கித் திரும்பி உட்கார்ந்து கொள்ள வேண்டும். நபி(ஸல்)அவர்களைப் பின்பற்றி இவ்வாறு அவர் செய்து கொள்ள வேண்டும். இமாம் மக்களை முன்னோக்கித் திரும்பும் போது வலது புறமாகவோ இடது புறமாகவோ திரும்பிக் கொள்ளலாம். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள்.

மேலும் ஐவேளைத் தொழுகைகளில் இந்த திக்ருக ளுக்குப் பிறகு சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33 தடவை, அல்லாஹு" அக்பர் 33 தடவையும் நூறைப் பூர்த்தி செய்ய "லாஇலாஹ இல்லல்லாஹு" வஹ்தஹு" லாஷரீக்கலஹு", லஹு"ல் முல்கு வலஹு"ல் ஹம்து, வஹு"வ அலாகுல்லி ஷையின் கதீர்" என்று ஒரு

முறை கூறுவதும் விரும்பத்தக்கதாகும். ஏனெனில் நபி (ஸல்)அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு நல்லார்வமூட்டி இருப்பதோடு பாவங்கள் மன்னிக்கப்படும் காரண காரி யங்களில் இதுவும் ஒன்றாகும் என்று தெளிவுபடுத்தியும் உள்ளார்கள் என ஆதாரப்பூர்வமான ஹதீஸ் வந்துள்ளது.

மேலும் ஐவேளைத் தொழுகைகளுக்குப் பின்னர் குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் மற்றும் ஆயத்துல் குர்ஸி ஆகிய வற்றையும் ஒரு முறை ஓதிக் கொள்ள வேண்டும். ஃபஜ் ருக்குப் பிறகும், மஃக்ரிபுக்குப் பிறகும் தூங்கும்போதும் குல்ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய மூன்றையும் மூன்று முறைகள் ஓதிக் கொள்ள வேண்டும். இதற்கு ஆதாரப் பூர்வமான ஹதீஸ்கள் வந்துள்ளன.

## ஜமாஅத்துடன் தொழுதல், இமாமத் செய்தல், இமாமைப் பின்பற்றுதல்

37. தற்காலத்தில் மார்க்கக் கல்வி பயிலும் சில மாண வர்கள் உட்பட அநேக முஸ்லிம்கள் ஜமாஅத்துடன் தொழுவதில் அலட்சியம் காட்டுகின்றனர்.சில அறிஞர்கள் ஜமாஅத்துடன் தொழுவது கட்டாயமில்லை எனக் கூறியி ருப்பதை இதற்குக் காரணம் காட்டுகின்றனர். ஜமாஅத் துடன் தொழுவதன் சட்டமென்ன? இத்தகையோருக்குத்

தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:** அறிஞர்களின் மிகச் சரியான கருத்தின்படி பாங்கு சப்தத்தைக் கேட்கின்ற, (பள்ளிக்கு வருவதற்கு) சக்தியுள்ள ஆண்கள் அனைவர் மீதும் பள்ளியில் முஸ்லிம்களுடன் சேர்ந்து ஜமாஅத்தாகத் தொழுவது கடமையாகும் என்பதில் ஐயமில்லை.

((مَنْ سَمِعَ النِّدَاءَ فَلَمْ يَأْتِهِ فَلَا صَلَاةَ لَهُ إِلَّا مِنْ عُذْرٍ)) (جه/ ٧٩٣)

“பாங்கு சப்தத்தைக் கேட்டவர் பள்ளிக்கு வரவில்லையெனில் அவருக்குத் தொழுகை கிடையாது. தக்க காரணம் உடையவரைத் தவிர” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா 793, இப்னுஹிப்பான் 2099 ஆதாரப் பூர்வமான அறிவிப்பாளர் தொடருடன் ஹாகிம் 855)

தக்க காரணம் என்றால் என்ன? என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் அச்சம் மற்றும் நோய் எனக் கூறினார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ أَتَى النَّبِيَّ ﷺ رَجُلٌ أَعْمَى فَقَالَ يَا رَسُولَ اللهِ إِنَّهُ لَيْسَ لِي قَائِدٌ يَقُودُنِي إِلَى الْمَسْجِدِ فَسَأَلَ رَسُولَ اللهِ أَنْ يُرَخِّصَ لَهُ فَيُصَلِّيَ فِي بَيْتِهِ فَرَخَّصَ لَهُ فَلَمَّا وَلَّى دَعَاهُ فَقَالَ هَلْ تَسْمَعُ النِّدَاءَ بِالصَّلَاةِ قَالَ نَعَمْ قَالَ فَأَجِبْ (م/ ٦٥٣)

பார்வை இழந்த ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! என்னைப் பள்ளிக்கு

அழைத்துச் செல்ல யாருமில்லை" என்று கூறி, தனது வீட்டில் தொழுது கொள்ள அனுமதிக்குமாறு வேண் டினார். அதற்கு நபியவர்கள், "பாங்கின் சப்தத்தை நீர் கேட்கிறீரா?" எனக் கேட்டார்கள். அதற்கவர் "ஆம்" எனக் கூறவும், "அப்படியானால் நீர் (பள்ளிக்கு வருவதன் மூலம்) அதற்கு பதிலளிப்பீராக" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: ((முஸ்லிம் 653)

عَنْ أَبِي هُرَيْرَةَ عن النبي ﷺ ...وَلَقَدْ هَمَمْتُ أَنْ آمُرَ بِالصَّلَاةِ فَتُقَامَ ثُمَّ آمُرَ رَجُلًا فَيُصَلِّيَ بِالنَّاسِ ثُمَّ أَنْطَلِقَ مَعِي بِرِجَالٍ مَعَهُمْ حُزَمٌ مِنْ حَطَبٍ إِلَى قَوْمٍ لَا يَشْهَدُونَ الصَّلَاةَ فَأُحَرِّقَ عَلَيْهِمْ بُيُوتَهُمْ بِالنَّارِ (خ/ ٦٥٧، م/ ٦٥١) واللفظ له

அபூஹுரைரா(ரலி)அவர்கள் மேலும் அறிவிப்பதாவது: தொழுகை நிலைநாட்டப்பட நான் கட்டளையிட்டுப் பின்னர் ஒருவரை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கூறி பிறகு விறகுக் கட்டைகளுடன் சில மனிதர்களை அழைத்துச் சென்று ஜமாஅத்துக்கு வராதவர்களை அவர் களின் வீட்டோடு தீயிட்டு கொளுத்த நான் நினைத்தேன்" என நபி(ஸல்) கூறினார்கள். நூல்: புகாரி 657, முஸ்லிம் 651, இவ்வாசகம் முஸ்லிமுக்குரியது.

இந்த ஹதீஸ்களும் இக்கருத்தில் அமைந்த இன்னும் பல ஹதீஸ்களும் பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவது

ஆண்களுக்கு கடமையாகும் என்பதைத் தெறிவிக்கின்றன. ஜமாஅத்துக்கு வராதவர் கடும் தண்டனைக் குரியவராவார். பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவது கடமையில்லை என்றிருந்தால் அதை விடுபவர் தண்டனைக்குரியவராக ஆகமாட்டார்.

இன்னும் பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவது இஸ்லாத்தினுடைய மிக முக்கியமான மற்றும் வெளிப் படையான அடையாளங்களில் ஒன்றாகும். முஸ்லிம் களிடையே ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும் அவர்களிடையே பகைமை நீங்கி நேசமும் பாசமும் உருவாவதற்கும் உரிய காரணிகளில் ஒன்றாகும். அது மட்டுமல்ல ஜமாஅத்துடன் தொழுவதை விட்டுவிடுவதில் நயவஞ்சகர்களுக்கு ஒப்பாகும் நிலையும் உள்ளது. எனவே இதிலிருந்து விலகிக் கொள்வது அவசியமாகும். மாற்றுக் கருத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் மார்க்க ஆதாரங்களுக்கு முரணாக உள்ள எல்லாக் கருத்துக்களையும் தூக்கி எரிந்துவிட வேண்டும். அவற்றை நம்பக் கூடாது.

﴿ فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ ذَلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا ﴾ [النساء:٥٩]

அல்லாஹ் கூறுகிறான்: ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் முரண்பட்டால் அதை அல்லாஹ்விடமும் இத்தூத

ரிடமும் கொண்டு செல்லுங்கள். நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பியிருந்தால் இதுவே சிறந்ததும் மிக அழகிய விளக்கமும் ஆகும். (4:59)

﴿وَمَا اخْتَلَفْتُمْ فِيهِ مِنْ شَيْءٍ فَحُكْمُهُ إِلَى اللهِ﴾ [الشورى:١٠]

நீங்கள் ஒரு விஷயத்தில் முரண்பட்டால் அதுபற்றிய முடிவு அல்லாஹ்விடமே உள்ளது. (42:10)

ஸஹீஹ் முஸ்லிமில் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ளது: "எங்களிடையே நான் பார்த்திருக்கிறேன், நயவஞ்சகனையோ நோயாளியையோ தவிர வேறு யாரும் ஜமாஅத் தொழுகைக்கு வராமலிருக்க மாட்டார்கள். இயலாத ஒரு மனிதரை இரண்டு பேர்கள் கைத்தாங்கலாக அழைத்து வந்து வரிசையில் நிறுத்தப்படும்." (பார்க்க: முஸ்லிம் 654) சந்தேகமில்லாமல் இது, நபித்தோழர்கள் பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவதைப் பேணியிருப்பதையும் அதில் உள்ள அவர்களின் ஆர்வத்தையுமே காட்டுகிறது. எந்த அளவுக்கு எனில் சில நேரங்களில் நோயாளியான ஒரு மனிதரை இருவர் கைத்தாங்கலாக அழைத்து வந்து வரிசையில் நிறுத்தியிருக்கிறார்கள்! ஜமாஅத்துடன் தொழுவதில் அவர்களுக்கு இருந்த மிகுந்த ஆர்வம் தான் இதற்குக் காரணம்.

38. இமாமைப் பின்பற்றித் தொழுபவர் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓத வேண்டுமா? வேண்டாமா? என்பதில் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. இதில் சரியான கருத்து என்ன? பின்பற்றித் தொழுபவர் ஸூரத்துல் ஃபாத்திஹாவை அவசியம் ஓதியாக வேண்டுமா? பின்பற்றித் தொழுபவர்கள் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவதற்குத் தோதுவாக இமாம் சிறிது நேரம் மௌனமாக இருக்கவில்லை எனில் அதை அவர்கள் எப்போது ஓதுவது? இமாம் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதிய பிறகு பின்பற்றித் தொழுவோர் அதை ஓதுவதற்காக அவர் மௌனமாக இருக்க வேண்டுமா?

**பதில்:** ((لَا صَلَاةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الْكِتَابِ)) (خ/ ٧٥٦، م/ ٣٩٤) "ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகை இல்லை" (புகாரி 756, முஸ்லிம் 394) என்று நபி(ஸல்) அவர்கள் பொதுவாகக் கூறியிருப்பதால் சரியான கருத்தின்படி சப்தமாக மற்றும் மெதுவாக ஓதக்கூடிய எல்லாத் தொழுகைகளிலும் இமாமைப் பின்பற்றித் தொழுவோர் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவது அவசியமாகும்.

((لَعَلَّكُمْ تَقْرَءُونَ خَلْفَ إِمَامِكُمْ قُلْنَا نَعَمْ هَذًّا يَا رَسُولَ الله قَالَ لَا تَفْعَلُوا إِلَّا بِفَاتِحَةِ الْكِتَابِ فَإِنَّهُ لَا صَلَاةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِهَا)) (د/ ٨٢٣، ت/ ٣١١، حم/ ٢١٦٣٦)

மேலும் நபி(ஸல்) அவர்கள், (தமது தோழர்களிடம்) "நீங்கள் உங்கள் இமாமுக்குப் பின்னால் ஓதுகிறீர்கள் என நினைக்கிறேன்" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "ஆம்" என்றனர். "ஸூரத்துல் ∴பாத்திஹாவை தவிர வேறு எதையும் ஓதாதீர்கள். ஏனெனில் ஸூரத்துல் ∴பாத்திஹாவை ஓதாவதவருக்குத் தொழுகையில்லை" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத் 823, திர்மிதி 311, அஹ்மத் 21636, 21576 இந்த ஹதீஸை ஸஹீஹான அறிவிப்பாளர் தொடருடன் இமாம் அஹ்மத் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

இமாம் மௌனமாக இருக்கின்ற நேரங்களில் பின் பற்றித் தொழுபவர் ஸூரத்துல் ∴பாத்திஹாவை ஓத வேண்டும் என்பதே ஷரீஅத்தின் நடைமுறையாகும். இமாம் மௌனமாக இல்லாமல் ஓதிக்கொண்டிருந்தாலும் பின்பற்றித் தொழுபவர் ஸூரத்துல் ∴பாத்திஹாவை ஓதி விட்டு பிறகு மௌனம் காக்க வேண்டும். இமாம் ஓதிக் கொண்டிருக்கும்போது பின்பற்றித் தொழுவோர் மௌன மாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கக்கூடிய பொது வான ஆதாரங்களிலிருந்து இது விதிவிலக்கானதாகும். எனினும் பின்பற்றித் தொழுபவர் ∴பாத்திஹாவை ஓத மறந்துவிட்டால் அல்லது அறியாமையால் அதை விட்டு விட்டால் அல்லது அதை ஓதுவது அவசியமில்லை என்று நம்பியிருந்தால் அவர் மீது குற்றமில்லை. பெரும்பாலான

அறிஞர்களின் கருத்துப்படி இத்தகையவருக்கு இமாம் ஓதுவதே போதுமானதாகும்.

அதுபோல இமாம் ருகூவிலிருக்கும் போது ஒருவர் வந்தால் அவருடன் சேர்ந்து அவரும் ருகூஃ. செய்ய வேண்டும். அவருக்கு அந்த ரக்அத் கிடைத்து விடும். ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்காததால் அதை அவர் ஓத வேண்டியதில்லை. அபூபக்ரா(ரலி) உடைய ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும்.

عَنْ أَبِي بَكْرَةَ أَنَّهُ انْتَهَى إِلَى النَّبِيِّ ﷺ وَهُوَ رَاكِعٌ فَرَكَعَ قَبْلَ أَنْ يَصِلَ إِلَى الصَّفِّ فَذَكَرَ ذَلِكَ لِلنَّبِيِّ ﷺ فَقَالَ زَادَكَ اللهُ حِرْصًا وَلَا تَعُدْ (خ/ ٧٨٣)

நபி(ஸல்)அவர்கள் ருகூவிலிருக்கும்போது அபூபக்ரா (ரலி) அவர்கள் (பள்ளிக்கு) வந்தார்கள். வரிசையில் வந்து சேர்வதற்கு முன் ருகூஃ. செய்து விட்டு பின்னர் வரிசையில் சேர்ந்து கொண்டார்கள். பிறகு இதனை நபி(ஸல்)அவர்களிடம் எடுத்துக்கூறினார்கள். அப்போது அவர்கள், "அல்லாஹ் உனக்கு ஆர்வத்தை அதிகப் படுத்துவானாக! இனி அவ்வாறு செய்யாதே!" எனக் கூறினார்கள். (புகாரி 783) அந்த ரக்அத்தை திரும்பத் தொழும்படி கட்டளையிடவில்லை.

"இனி அவ்வாறு செய்யாதே!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதன் கருத்து, வரிசையில் வந்து சேர்வ தற்கு முன்னரே ருகூஃ. செய்யாதே என்பதாகும். எனவே

இமாம் ருகூவிலிருக்கும் போது யாரேனும் பள்ளிக்கு வந்தால் வரிசையில் வந்து சேர்வதற்கு முன்பே ருகூஃ செய்யக் கூடாது. மாறாக வரிசையில் வந்து சேரும் வரை பொறுமையாக இருக்க வேண்டும். அதனால் அந்த ரக்அத் அவருக்குத் தவறிவிட்டாலும் சரியே! என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

((إِذَا أُقِيمَتْ الصَّلَاةُ فَلَا تَأْتُوهَا تَسْعَوْنَ وَأْتُوهَا تَمْشُونَ عَلَيْكُمْ السَّكِينَةُ فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا فَاتَكُمْ فَأَتِمُّوا)) (خ/ ٩٠٨، م/ ٦٠٢)

தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் நீங்கள் ஓடி வராதீர்கள்; நடந்தே வாருங்கள். மேலும் அமைதியைக் கடைபிடியுங்கள். உங்களுக்குக் கிடைத்ததைத் தொழுது கொள்ளுங்கள். தவறிதைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். (புகாரி 908, முஸ்லிம் 602)

(مَنْ كَانَ لَهُ إِمَامٌ فَقِرَاءَتُهُ لَهُ قِرَاءَةٌ) (جه/ ٨٥٠، حم/ ١٤١١٦) واللفظ له

"யார் இமாமைப் பின்பற்றித் தொழுகிறாரோ இமாம் ஓதுவது அவருக்கும் சேர்த்தாகும்" (இப்னுமாஜா 850, அஹ்மத் 14116) என்று வரக்கூடிய ஹதீஸ் பலவீனமானதாகும். அறிஞர்களிடம் அது ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. அது ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என வைத்துக் கொண்டாலும் எல்லா ஹதீஸ்களையும்

ஒன்றிணைத்துப் பார்க்கும்போது ஸூரத்துல் ஃபாத்திஹா இதற்கு விதிவிலக்காகும். இமாம் ஓதினாலும் பின்பற்றித் தொழுவோர் அதை அவசியம் ஓதியாக வேண்டும்.

ஸூரத்துல் ஃபாத்திஹாவுக்குப் பிறகு இமாம் மௌனமாக இருப்பதற்கு நாம் அறிந்த வரை ஆதாரப்பூர்வமான எந்த ஹதீசும் இல்லை. எனினும் இது விஷயத்தில் தாரளமாக நடந்து கொள்ளலாம் இன்ஷா அல்லாஹ். யாரேனும் அவ்வாறு செய்தால் அவர் மீது எந்தக் குற்றமுமில்லை. யாரேனும் அதை விட்டுவிட்டால் அவர் மீதும் குற்றமில்லை. ஏனெனில் நாம் அறிந்தவரை இது சம்பந்தமாக நபி(ஸல்)அவர்கள் வழியாக எந்த ஹதீஸும் நிரூபணமாகவில்லை.

நபி(ஸல்)அவர்கள் வழியாக நிரூபணமாகியிருப்பது இரண்டே மௌனம்தான். ஒன்று தக்பீரதுல் இஹ்ராம் எனும் முதல் தக்பீருக்குப் பிறகு. இதில் ஆரம்ப துஆ ஓத வேண்டும். மற்றொன்று ஸூரத்துல் ஃபாத்திஹாவுக்குப் பின் துணை ஸூரா ஓதிய பிறகு- அதாவது ருகூவு செய்வதற்கு முன்பாகும். இந்த மௌனம் துணை ஸூரா ஓதுவதற்கும் ருகூவுக்குமிடையே பிரிக்கும் விதமாக உள்ள சிறிய மௌனமாகும்.

39. ஸஹீஹான ஹதீஸில் வெங்காயம், பூண்டு மற்றும் அதுபோன்ற வாடையுடைய ஒரு வகைக் கீரையைச் சாப்பிட்டவர் பள்ளிக்கு வருவதற்குத் தடை வந்துள்ளது.

பீடி, சிகரட், போன்ற ஹராமான வெறுக்கத்தக்க வாடை யுடைய பொருட்களும் இதில் சேருமா? அப்படியானால் இந்தப் பொருட்களை உண்டவர் ஜமாஅத்துக்கு வராமலி ருப்பதற்கு தக்க காரணம் உடையவர். அதனால் அவர் குற்றவாளியாக மாட்டார் என்று இதன் கருத்தாகுமா?

**பதில்:** “பூண்டு அல்லது வெங்காயம் சாப்பிட்டவர் நமது பள்ளியின் பக்கம் வரவேண்டாம். அவருடைய வீட்டில் இருந்து கொள்ளட்டும்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறிய தாக ஹதீஸ் வந்துள்ளது. (புகாரி 855, முஸ்லிம் 564)

((مَنْ أَكَلَ ثُومًا أَوْ بَصَلًا فَلْيَعْتَزِلْ مَسْجِدَنَا وَلْيَقْعُدْ فِي بَيْتِهِ)) (خ/ ٨٥٥)

((முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில்) “எதனால் மனிதர் களுக்குத் தொல்லை ஏற்படுகிறதோ அதனால் மலக்குக ளுக்கும் தொல்லை ஏற்படுகிறது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக உள்ளது. ((முஸ்லிம் 564)

எவற்றில் வெறுக்கத்தக்க வாடை இருக்கிறதோ அவற் றின் சட்டநிலை பூண்டு மற்றும் வெங்காயத்தின் சட்ட நிலை போன்றாகும். உதாரணமாக பீடி, சிகரட் பிடிப்பவர், இன்னும் எவரது அக்குளில் அல்லது உடம்பில், உடை யில், காலுறையில் அருகில் இருப்பவருக்கு இடையூறு அளிக்கின்ற வகையில் துர்வாடை இருக்கிறதோ அவரும் ஜமாஅத்துடன் தொழுவது வெருக்கத்தக்கதாகும். அந்த வாடையை நீக்குகின்றவற்றைப் பயன்படுத்தும் வரை

அவர் ஜமாஅத்துக்கு வராமலிருக்க வேண்டும். ஆயினும் அல்லாஹ் கடமையாக்கிய ஜமாஅத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக இயன்ற வரை அந்த வாடையை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

புகைபிடித்தல் பொதுவாகவே ஹராமானதாகும். அதில் மார்க்கத்திற்கும், உடலுக்கும் பொருளுக்கும் தீங்குகள் இருப்பதால் எல்லா நேரங்களிலும் அதை விட்டு விடுவது கடமையாகும். அல்லாஹ் முஸ்லிம்களின் நிலைகளைச் சீர்ப்படுத்தி, அனைத்து நன்மைகளையும் செய்வதற்கு அருள் புரிவானாக!

40. வரிசையை வலது பக்கத்திலிருந்து துவக்க வேண்டுமா? அல்லது இமாமுக்குப் பின்னாலிருந்து ஆரம்பிக்க வேண்டுமா? மக்களை வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் சமமாக நிற்கச் செய்யலாமா? அதற்காக பெரும்பாலான இமாம்கள் சொல்வதுபோல வரிசையில் (வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும்) சமமாக நில்லுங்கள் என்று சொல்லலாமா?

**பதில்:** வரிசையை இமாமுக்குப் பின்னால் மத்தியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் இடது பக்கத்தை விட வலது பக்கம் சிறந்ததாகும். முன் வரிசையைப் பூர்த்தி செய்யாமல் அடுத்த வரிசையை ஆரம்பிக்கக்கூடாது. வலது பக்கத்தில் மக்கள் அதிகமாக

நிற்பது தவறல்ல. அதற்குச் சமமான அளவு இடது பக்கத்திலும் நிற்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் சமமாக நில்லுங்கள் என்று சொல்வது நபிவழிக்கு முரணானதாகும். எனினும் முதல் வரிசை பூர்த்தியாகாமல் இரண்டாம் வரிசையை ஆரம்பிப்பதோ இரண்டாவது வரிசை பூர்த்தியாகாமல் மூன்றாவது வரிசையை ஆரம்பிப்பதோ கூடாது. இது போல அடுத்தடுத்த வரிசைகளை அதற்கு முந்தைய வரிசையைப் பூர்த்தியாக்காமல் ஆரம்பிப்பதும் கூடாது. ஏனெனில் இவ்வாறு செய்ய வேண்டுமென்றே நபி(ஸல்) அவர்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

41. ந.ஃ.பில் தொழுபவருக்குப் பின்னால் ஃ.பர்ளு தொழுபவர் பற்றி தங்கள் கருத்தென்ன?

**பதில்:** ந.ஃ.பில் தொழுபவருக்குப் பின்னால் ஃ.பர்ளு தொழுவதில் குற்றமில்லை. ஏனெனில் ஓர் அச்ச நிலைத் தொழுகையில் இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் செய்ததாக சான்று உள்ளது. அப்போது நபி(ஸல்) அவர்கள் ஒரு அணியினருக்கு இரண்டு ரக்அத் தொழுவித்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள். அதன் பின்னர் மற்றொரு அணியினருக்கும் இரண்டு ரக்அத் தொழுவித்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள். நபி(ஸல்)அவர்களுக்கு முதல் இரண்டு ரக்அத் ஃ.பர்ளாகும். இரண்டாவதாக தொழுவித்த

இரண்டு ரக்அத் ந.்.பிலாகும். அப்போது அவர்களுக்குப் பின்னால் தொழுதவர்கள் .்.பர்ளு தொழுதவர்களாவர்.

((أَنَّ مُعَاذَ بْنَ جَبَلٍ كَانَ يُصَلِّي مَعَ رَسُولِ الله ﷺ الْعِشَاءَ الْآخِرَةَ ثُمَّ يَرْجِعُ إِلَى قَوْمِهِ فَيُصَلِّي بِهِمْ تِلْكَ الصَّلَاةَ (م/ ٤٦٥)

முஆத் பின் ஜபல்(ரலி) அவர்கள், நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் இஷா தொழுதுவிட்டு பின்னர் தமது மக்களிடம் திரும்பிச் சென்று அதே தொழுகையை தொழுவிப்பார்கள். அது அவர்களுக்கு ந.்.பிலாகவும் அந்த மக்களுக்கு .்.பர்ளாகவும் ஆகிவிடும். (முஸ்லிம் 465) இது போன்றே ரமழானில் மக்கள் தராவீஹ் தொழுது கொண்டிருக்கும் போது இஷா தொழாத ஒருவர் பள்ளி வாசலுக்கு வந்தால், ஜமாஅத்துடைய சிறப்பு கிடைப்பதற்காக அவர்களுடன் சேர்ந்து இஷாவை தொழுதிட வேண்டும். இமாம் ஸலாம் கொடுத்த பிறகு விடுபட்ட ரக்அத்தை பூர்த்தி செய்து தொழுகையை நிறைவு செய்திட வேண்டும்.

42. வரிசைக்குப் பின்னால் தனியாக நின்று தொழுபவருடைய தொழுகையின் நிலை என்ன? ஒருவர் பள்ளியில் நுழையும்போது முன் வரிசையில் இடமில்லையானால் அவர் என்ன செய்ய வேண்டும்? பருவமடையாத சிறுவன் அங்கிருந்தால் அவனுடன் ஒரு அணியாக நின்று கொள்ளலாமா?

**பதில்:** வரிசைக்குப் பின்னால் தனியாக நின்று தொழுபவரின் தொழுகை கூடாது. ஏனெனில் "வரிசைக்குப் பின்னால் தனியாக நின்று தொழுபவருக்கு தொழுகையில்லை" என்று நபி(ஸல்) கூறியுள்ளார்கள். (பார்க்க: ஸஹீஹுல் ஜாமிஃ லில்அல்பானி 949) மேலும் நபி (ஸல்) அவர்கள் வரிசைக்குப் பின்னால் தனியாக நின்று தொழுதவரை திருப்பித் தொழும்படி ஏவினார்கள். முன் வரிசையில் இடம் இருந்ததா? இல்லையா என்றெல்லாம் அவரிடம் கேட்கவில்லை. இவ்வாறு விசாரிக்காமல் நபி (ஸல்)அவர்கள் கட்டளையிட்டிருப்பது முன் வரிசையில் இடம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பின் வரிசையில் தனியாக நின்று தொழுவது கூடாது என்பதை உணர்த்துவதோடு வரிசைக்குப் பின்னால் தனியாக நின்று தொழுவதிலுள்ள கவனக் குறைவிற்கான வழியை அடைப்பதாகவும் அமைந்திருக்கிறது.

எனினும் இமாம் ருகூவிலிருக்கும்போது தாமதமாக வருபவர் வரிசையில் சேர்வதற்கு முன்பே ருகூவு செய்து கொண்டு- இமாம் ஸுஜூத் செய்வதற்கு முன்னர் வரிசையில் சேர்ந்து கொண்டால் அது அவருக்குக் கூடும். ஏனெனில் ஸஹீஹுல் புகாரியில் அபூபக்ரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ் இதற்குச் சான்றாகும். நபி(ஸல்) அவர்கள் ருகூவிலிருக்கும்போது அபூபக்ரா (ரலி) தொழுகைக்கு வந்து வரிசையில் சேர்வதற்கு

முன்பே ருகூவு செய்து கொண்டு பின்னர் வரிசையில இணைந்து கொண்டார். நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்ததும் அவரிடம், "அல்லாஹ் உனக்கு ஆர்வத்தை அதிகரிப்பானாக! இனி இவ்வாறு செய்யாதே!" எனக் கூறினார்கள்.. அந்த ரக்அத்தைத் திரும்பத் தொழும்படி கட்டளையிடவில்லை. (பார்க்க: புகாரி 783)

இமாம் தொழுகையில் இருக்கும்போது ஒருவர் தாம தமாக வந்தால் முன் வரிசையில் இடமில்லை என்றால் தன்னுடன் வரிசையில் நிற்பதற்கு ஒருவர் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டும். அவர் ஏழு வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சிறுவனாக இருந்தாலும் பரவாயில்லை. அல்லது முன்னால் சென்று இமாமுடைய வலது பக்கத்தில் நின்று கொள்ள வேண்டும். எல்லா ஹதீஸ்களின்படி செயல்படுவதாக இருந்தால் இவ்வாறு தான் செய்ய வேண்டும். அல்லாஹ் அனைத்து முஸ்லிம் களுக்கும் அவனது மார்க்கத்தில் விளக்கம் பெறுவ தற்கும் அதில் உறுதியாக இருப்பதற்கும் நல்லருள் புரிவானாக! அவன் யாவற்றையும் செவியேற்பவனும் அருகில் உள்ளவனும் ஆவான்.

43. இமாமத் செய்யும்போது அந்த நிய்யத் அவசி யமா? பள்ளிக்கு வரும் ஒருவர் தொழுது கொண்டிருக்கும் இன்னொருவரைப் பின்பற்றித் தொழலாமா? தாமதமாக வந்தவர் தனக்குத் தவறிவிட்ட ரக்அத்தைப் பூர்த்தி செய்து

கொண்டிருக்கும்போது அவரைப் பின்பற்றித் தொழலாமா?

இமாமத் செய்யும் போது அந்த நிய்யத் அவசியமே. ஏனெனில் “செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியது தான் கிடைக்கும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 1, முஸ்லிம் 1907)

ஒருவர் பள்ளியில் நுழையும் போது அவருக்கு ஜமாஅத் தவறிவிட்டது எனில் தனியாகத் தொழும் ஒரு வரை அவர் கண்டால் அவருடன் சேர்ந்து- அவரைப் பின் பற்றி (ஜமாஅத்தாக) தொழுவதில் தவறில்லை. மட்டு மின்றி அதுவே சிறந்தது. ஏனெனில் மக்கள் தொழுது முடித்ததும் ஒருவர் பள்ளிக்குள் வந்தார். இதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், “இவருக்குத் தர்மம் செய்பவர்- இவருடன் சேர்ந்து (ஜமாஅத்தாக) தொழ யாரேனும் உண்டா?” எனக் கேட்டார்கள். (பார்க்க: அபூதாவூத் 574) இதன் மூலம் ஜமாஅத்தின் சிறப்பு அவ்விருக்கும் கிடைத்துவிடுகிறது. ஏற்கனவே தொழுதுவிட்டவருக்கோ அத்தொழுகை ந.ஃ.பிலாகிவிடும்.

முஆத்(ரலி) அவர்கள் நபி(ஸல்)அவர்களுடன் இஷா தொழுது விட்டு, தம் கூட்டத்தார்களிடம் சென்று அதே தொழுகையைத் தொழுவிப்பார்கள். இது அவர்களுக்கு ந.ஃ.பிலாகவும் அம்மக்களுக்கு ஃ.பர்ளாகவும் ஆகிவிடும்.

நபி(ஸல்) அவர்களும் இதனை அங்கீகரித்துள்ளார்கள். (பார்க்க: முஸ்லிம் 465)

ஜமாஅத் தொழுகைக்கு தாமதமாக வந்தவர் தனக் குத் தவறிவிட்ட ரக்அத்தை பூர்த்தி செய்து கொண்டி ருக்கும்போது ஜமாஅத்தை தவறவிட்ட ஒருவர் வந்தால் ஜமாஅத்தின் சிறப்பு கிடைப்பதை எதிர்பார்த்து- தொழுது கொண்டிருப்பவருடன் சேர்ந்து (ஜமாஅத்தாகத்) தொழு வதில் தவறில்லை. அவர் தனது ரக்அத்தைப் பூர்த்தி செய்ததும் இவர் எழுந்து தனது தொழுகையை நிறைவு செய்து கொள்ள வேண்டும். பொதுவான சான்றுகளின் அடிப்படையில் இவ்வாறு செய்து கொள்ளலாம். இந்தச் சட்டம் ஐவேளைத் தொழுகைகளுக்கும் பொதுவானதே. தொழுகையை அதன் நேரத்தை விட்டும் பிற்படுத்தக் கூடிய ஆட்சித் தலைவர்கள் தோன்றுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அபூதர் (ரலி) அவர்களிடம் கூறியபோது "அப்போது நீ தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுது விடு. அவர்களுடன் இருக்கும்போது அத்தொ ழுகை உனக்குக் கிடைத்தால் அவர்களுடனும் (சேர்ந்து) தொழுதுகொள். அது உனக்கு நஃபிலாகும். நான் தொழுதுவிட்டேன். அதைத் திரும்பவும் தொழ மாட்டேன் எனக் கூறாதே!" என்றும் குறிப்பிட்டார்கள். (பார்க்க: முஸ்லிம் 648)

44. தாமதமாக வந்தவருக்கு இமாமுடன் சேர்ந்து கிடைத்த ரக்அத்கள் அவரது தொழுகையின் ஆரம்ப ரக்அத்களாகக் கணிக்கப்படுமா? அல்லது இறுதி ரக்அத் களாகக் கணிக்கப்படுமா? உதாரணமாக நான்கு ரக்அத் தொழுகையில் இரண்டு ரக்அத்தை தவற விட்டவர், மீத முள்ள இரண்டு ரக்அத்தில் ஸூரத்துல் ∴பாத்திஹாவுடன் வேறு ஒரு ஸூராவை ஓத வேண்டுமா?

**பதில்:** தாமதமாக வந்தவருக்கு இமாமுடன் சேர்ந்து கிடைத்த ரக்அத்கள் அவரது தொழுகையின் ஆரம்ப ரக்அத்களாகவே கணிக்கப்படும் என்பதே சரியான கருத்தாகும். இமாம் ஸலாம் கொடுத்த பிறகு அவர் நிறைவேற்றுகின்ற ரக்அத்கள் கடைசி ரக்அத்களாகும். எல்லாத் தொழுகைகளிலும் இவ்வாறுதான். ஏனெனில்

((إِذَا أُقِيمَتْ الصَّلَاةُ فَلَا تَأْتُوهَا تَسْعَوْنَ وَأْتُوهَا تَمْشُونَ عَلَيْكُمْ السَّكِينَةُ فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا فَاتَكُمْ فَأَتِمُّوا)) (خ/ ٩٠٨، م/ ٦٠٢)

தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் நீங்கள் ஓடி வராதீர்கள்; நடந்தே வாருங்கள். மேலும் அமைதி யைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்கு எது கிடைத்ததோ அதைத் தொழுது கொள்ளுங்கள். எது தவறிவிட்டதோ அதைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். (புகாரி 908, முஸ்லிம் 602)

இந்த ஆதாரத்தை வைத்துப் பார்க்கும்போது நான்கு ரக்அத் தொழுகைகளில் மூன்றாவது நான்காவது ரக்அத்திலும் ம.்.க்ரிப் தொழுகையின் மூன்றாவது ரக்அத்திலும் ஸூரத்துல் .்.பாத்திஹா மட்டும் ஓதுவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் புகாரி, முஸ்லிமில் அபூகதாதா(ரலி) அவர்கள் வழியாக ஒரு நபிமொழி அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது நபி(ஸல்)அவர்கள் ளுஹர், அஸர் தொழுகைகளின் முதல் இரண்டு ரக்அத்தில் ஸூரத்துல் .்.பாத்திஹாவையும் வேறு ஒரு ஸூராவையும் ஓதுவார்கள். முதல் ரக்அத்தை நீட்டியும் இரண்டாவது ரக்அத்தை சுருக்கியும் தொழ வைப்பார்கள். கடைசி இரண்டு ரக்அத்தில் ஸூரத்துல் .்.பாத்திஹா மட்டும் ஓதுவார்கள். (பார்க்க: புகாரி 759, முஸ்லிமில் 451)

சில நேரங்களில் ளுஹர் தொழுகையின் மூன்றாவது, நான்காவது ரக்அத்தில் ஸூரத்துல் .்.பாத்திஹாவுக்கு மேல் கூடுதலாக வேறொரு ஸூராவை ஓதிக்கொண்டால் அதுவும் நல்லதுதான். ஏனெனில் அபூஸஈத்(ரலி) அவர்கள் வழியாக ஒரு ஹதீஸ் ஸஹீஹ் முஸ்லிமில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் ளுஹர் தொழுகையின் முதல் இரண்டு ரக்அத்தில் அலி.்.ப் லாம் மீம் தன்ஸீல் (ஸஜ்தா) ஸூரா அளவும், கடைசி இரண்டு ரக்அத்தில் அதில் பாதி

அளவும் ஓதுவார்கள் அஸர் தொழுகையின் முதல் இரண்டு ரக்அத்துகளில் ளுஹர் தொழுகையின் கடைசி இரண்டு ரக்அத்துகளில் ஓதிய அளவும், அஸர் தொழுகையின் கடைசி இரண்டு ரக்அத்துகளில் அதில் பாதியளவும் ஓதுபவர்களாக இருந்தனர். (பார்க்க: முஸ்லிம் 452) இந்த அளவை வைத்துப் பார்க்கும்போது நபி(ஸல்) அவர்கள் சில நேரங்களில் ளுஹர் தொழுகையின் கடைசி இரண்டு ரக்அத்துகளில் ஸுரத்துல் ஃபாத்திஹாவுக்கு மேல் வேறொரு ஸுராவையும் ஓதியுள்ளார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

45. சில ஜும்ஆ பள்ளிகளில் நெருக்கடியின் காரணமாக சில சமயங்களில் பள்ளி நிறைந்து, சிலர் சாலைகளிலும் நடைபாதைகளிலும் தொழுகின்றனர். இது பற்றி தங்கள் கருத்தென்ன? பள்ளிக்கு வெளியே தொழுபவர்களுக்கும் பள்ளிக்குமிடையே பிரிக்கின்ற வகையில் பாதை ஏதும் இருந்தால் அல்லது இல்லாவிட்டால் சட்டத்தில் ஏதேனும் வித்தியாசம் உண்டா?

**பதில்:** பள்ளிவாசலின் உள்ளே தொழுகின்றவர்களின் வரிசைகளுடன் பள்ளிவாசலுக்கு வெளியே தொழுகின்றவர்களின் வரிசைகள் இணைந்திருந்தால் அவ்வாறு தொழுவதில் குற்றமேதுமில்லை. இவ்வாறே பள்ளிக்கு வெளியே நிற்கக்கூடிய மஃமூம்கள் முன் வரிசையைப் பார்க்கின்ற வகையில் அல்லது தக்பீரைக் கேட்கின்ற

வகையில் இருந்தால்- அவர்களுக்கும் பள்ளிவாசலுக்கு மிடையே பிரிக்கின்ற வகையில் பாதை ஏதும் இருந் தாலும்- எந்தக் குற்றமுமில்லை. ஏனெனில் ஜமாஅத் துடன் தொழுவது கடமை என்பதனாலும் பள்ளிக்கு வெளியே இருப்பவர்கள் முன் வரிசையைப் பார்ப்பதன் மூலமும் தக்பீரைக் கேட்பதன் மூலமும் இந்த ஜமா அத்தை அடைந்து கொள்ள முடிகிறது என்பதனாலும் இவ்வாறு தொழுவது கூடும். ஆனால் பள்ளிக்கு வெளியே தொழுபவர்கள் யாரும் இமாமைத் தாண்டி நின்று தொழக் கூடாது. ஏனெனில் ம.்.மூம்கள் நிற்பதற்குரிய இடம் அதுவல்ல.

46. தாமதமாக வந்தவர், இமாம் ருகூவில் இருக்கின்ற நிலையில் அந்த இமாமுடன் சேர்ந்து விட்டால்- அந்த ரக்அத் அவருக்குக் கிடைக்க வேண்டுமெனில் இமாம் ருகூவிலிருந்து எழுவதற்கு முன் "சுப்ஹான ரப்பியல் அளீம்" என்று அவர் சொல்ல வேண்டும் என்பது நிபந்த னையா?

**பதில்:** தாமதமாக வந்தவர், இமாம் ருகூவில் இருக் கின்ற நிலையில் அந்த இமாமுடன் சேர்ந்து விட்டால் அந்த ரக்அத் அவருக்குக் கிடைத்துவிடும். இமாம் ருகூவி லிருந்து எழுந்த பிறகே அவர் சுப்ஹான ரப்பியல் அளீம் சொல்லியிருந்தாலும் சரியே. ஏனெனில்,

((مَنْ أَدْرَكَ رَكْعَةً مِنْ الصَّلَاةِ فَقَدْ أَدْرَكَ الصَّلَاةَ))(خ/ ٥٨٠، م/ ٦٠٧)

“தொழுகையில் ஒரு ரக்அத்தை அடைந்து கொண்டவர் தொழுகையை அடைந்து கொண்டவராவார்” என்று பொதுவாகவே நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 580, முஸ்லிம் 607) மேலும் ருகூவை அடைந்து கொள்வதன் மூலமாகத்தான் ரக்அத்தை அடைந்து கொள்ள முடியும் என்பது தெரிந்ததே. ஏனெனில் இமாம் புகாரி அவர்கள் அபூபக்ரா(ரலி) அவர்கள் வழியாக பின் வருமாறு அறிவித்துள்ளார்கள்:

ஒரு நாள் நபி(ஸல்)அவர்கள் ருகூவிலிருக்கும்போது அபூபக்ரா(ரலி) பள்ளிக்கு வந்தார். வரிசையில் வந்து சேர்வதற்கு முன் ருகூவு செய்துவிட்டு பின்னர் வரிசையில் சேர்ந்து கொண்டார். நபி(ஸல்)அவர்கள் ஸலாம் கொடுத்ததும் அவரிடம், “அல்லாஹ் உமக்கு ஆர்வத்தை அதிகப்படுத்துவானாக! இனி அவ்வாறு செய்யாதீர்!” எனக் கூறினார்கள். அந்த ரக்அத்தை திருப்பித் தொழும் படி கட்டளையிடவில்லை. மாறாக வரிசையில் சேர்வதற்கு முன் ருகூவு செய்து கொண்டு வருவதைத் தான் தடுத்தார்கள். (பார்க்க: புகாரி 783) எனவே தாமதமாக வருபவர் வரிசையில் வந்து சேர்வதற்கு முன் அவசரப் பட்டு ருகூவு செய்யக் கூடாது.

47. பள்ளியில் நுழைந்தவருக்கு ரக்அத் கிடைக்க

வேண்டும் என்பதற்காக சில இமாம்கள் தமது ருகூவில் சற்றே தாமதித்து அவரை எதிர்பார்க்கின்றனர். இன்னும் சிலர் அவ்வாறு எதிர்பார்ப்பது ஷரீஅத்தின் நடைமுறை யல்ல என்கின்றனர். எது சரியானது?

**பதில்:** பள்ளியில் நுழைந்து விட்டவர் வரிசையில் வந்து சேர்வதற்காக சிறிது நேரம் எதிர்பார்ப்பது ஷரீஅத் தின் நடைமுறையாகும் என்பதே சரியான கருத்தாகும். அவ்வாறு செய்வது நபி(ஸல்)அவர்களைப் பின்பற்றிய தாகவும் ஆகும்.

48. இரண்டு அல்லது அதற்கும் அதிகமான சிறுவர் களுக்கு இமாமத் செய்பவர் அவர்களை தனக்குப் பின்னால் நிறுத்த வேண்டுமா? அல்லது தனது வலது புறத்தில் நிறுத்த வேண்டுமா? சிறுவர்களை வரிசையில் நிறுத்துவதற்கு அவர்கள் பருவமடைந்திருக்க வேண்டும் என்பது நிபந்தனையா?

**பதில்:** இதில் ஷரீஅத்தினுடைய நடைமுறை என்ன வெனில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிறுவர் களை- அவர்கள் ஏழு அல்லது ஏழிற்கும் மேற்பட்ட வயதினை அடைந்திருந்தால்- பருவமடைந்தவர்களைப் போன்று இமாமுக்குப் பின்னால் நிறுத்த வேண்டும். இவ்வாறே ஒரு சிறுவனும் பருவமடைந்த ஒருவனும் இருந்தால் அவ்விருவரையும் இமாமுக்குப் பின்னால்

நிறுத்த வேண்டும். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் அனஸ் (ரலி) அவர்களின் பாட்டியைச் சந்திக்கச் சென்றபோது, (சிறுவரான) அனஸுடனும் ஒரு அநாதைக் குழந்தை யுடனும் சேர்ந்து தொழுதார்கள். அவ்விருவரையும் தனக்குப் பின்னால் நிற்க வைத்தார்கள். இவ்வாறே அன்ஸாரிகளைச் சேர்ந்த ஜாபிர், ஜப்பார் ஆகிய இரு வரும் நபி(ஸல்) அவர்களுடன் நின்று தொழுதபோது அவ்விருவரையும் தமக்குப் பின்னால் நிறுத்திக் கொண் டார்கள்.

ஒருவர் மட்டும் என்றால்- அவர் சிறுவராக இருந் தாலும் சரி பெரியவராக இருந்தாலும் சரி- இமாமின் வலது புறத்தில் நிற்க வேண்டும். ஏனெனில் ஒரு நாள் இரவுத் தொழுகையில் (சிறுவர்) இப்னு அப்பாஸ்(ரலி) நபி(ஸல்) அவர்களின் இடது புறத்தில் நின்ற போது அவரை நபியவர்கள் திருப்பி தமது வலது புறத்தில் நிறுத்தினார்கள். இவ்வாறே ஒரு ந.்.பில் தொழுகையில் அனஸ்(ரலி) நபி(ஸல்) அவர்களுடன் தொழுத போது அவரை நபியவர்கள் தமது வலது புறத்தில் நிறுத்தி னார்கள். எனினும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களாக இருந்தால் அவர்கள் ஆண்களுக்குப் பின் னால் நிற்க வேண்டும். இமாமுடனோ, ஆண்களுடனோ நிற்பது கூடாது. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் அனஸு டனும் ஒரு அநாதைக் குழந்தையுடனும் சேர்ந்து

தொழுதபோது அனஸ்"டைய தாயார் உம்மு ஸ"லைம் அவர்களை அவ்விருவருக்கும் பின்னால் நிறுத்தினார்கள்.

49. பள்ளிவாசலில் முதல் ஜமாஅத் நடந்து முடிந்த பிறகு இரண்டாம் ஜமாஅத் நடத்துவது கூடாது என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு ஆதாரம் உள்ளதா? இதில் சரியான கருத்து என்ன?

**பதில்:** பள்ளிவாசலில் முதல் ஜமாஅத் முடிந்த பிறகு இரண்டாம் ஜமாஅத் நடத்தக் கூடாது என்பது சரியான கருத்தல்ல. நாம் அறிந்த வரை தூய்மையான இந்த மார்க்கத்தில் இதற்கு எந்த ஆதாரமுமில்லை. இன்னும் சொல்வதானால் ஆதாரப்பூர்வமான நபிவழி இதற்கு முரணாக உள்ளது.

"ஜமாஅத்துடன் தொழுவது தனியாகத் தொழுவதை விட இருபத்தேழு மடங்கு சிறந்ததாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி 645) மேலும் "ஒருவர் தனித்துத் தொழுவதை விட மற்றொருவருடன் சேர்ந்து தொழுவது சிறந்ததாகும்" என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (பார்க்க: அபூதாவூத் 554, நஸயீ 834) மக்கள் தொழுது முடித்த பிறகு ஒரு மனிதர் பள்ளியினுள் நுழைந்தார். இதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் "இவருக்குத் தர்மம் செய்பவர்- இவருடன்

சேர்ந்து தொழுபவர் யாரேனும் உண்டா?" எனக் கேட்டார்கள். (பார்க்க: அபூதாவூத் 574) எனினும் ஒரு முஸ்லிம் ஜமாஅத்தை விட்டும் தாமதமாவது கூடாது. மட்டுமின்றி பாங்கு சப்தத்தை அவன் கேட்டவுடன் பள்ளிக்கு விரைந்து செல்வது அவனுக்குக் கட்டாயமாகும்.

50. தொழுது கொண்டிருக்கும்போது இமாமுக்கு உளூ முறிந்துவிட்டால் தொழுகையை நிறைவு செய்ய தமக்குப் பதிலாக வேறொருவரை அவர் நியமிக்க வேண்டுமா? அல்லது அதனால் அனைவரின் தொழுகையும் முறிந்துவிடுமா? பிறகு தொழுகையை ஆரம்பத்திலிருந்து புதிதாக நடத்த ஒருவரை அவர் ஏவ வேண்டுமா?

**பதில்:** சரியான கூற்றின்படி தொழுகையை நிறைவு செய்ய தமக்குப் பதிலாக ஒருவரை நியமிப்பதே இமாமுக்கு கடமையாகும். உமர்(ரலி) அவர்கள் செய்தது போல. அதாவது உமர்(ரலி) அவர்கள் மக்களுக்குத் தொழுகை நடத்திக் கொண்டிருந்த நிலையில் ஈட்டியால் குத்தப்பட்டபோது அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.ஃப்(ரலி) அவர்களை தமக்குப் பகரமாக நியமித்தார்கள். அவர் .ஃபஜ்ர் தொழுகையை மக்களுக்கு நிறைவு செய்தார்.

இமாம் தமக்குப் பதிலாக ஒருவரை நியமிக்கவில்லை எனில் அவருக்குப் பின்னாலுள்ள ஒருவர் முன்னால் சென்று தொழுகையை நிறைவு செய்ய வேண்டும். அவர்

அத்தொழுகையை ஆரம்பத்திலிருந்து புதிதாகத் தொழுவித்தாலும் குற்றமில்லை. இவ்விஷயத்தில் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுள்ளது. எனினும் மக்களுக்கு தொழுகையை நிறைவு செய்ய இமாம் தமக்குப் பதிலாக ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதே மிகச் சிறந்த கருத்தாகும் ஏனெனில் நாம் மேற்குறிப்பிட்டது போல உமர்(ரலி) அவர்கள் அவ்வாறே செய்துள்ளார்கள். தொழுகையை ஆரம்பத்திலிருந்து அவர்கள் புதிதாகத் தொழுது கொண்டால் அதுபற்றிக் குற்றமில்லை.

51. ஒருவர் இமாம் ஸலாம் கூறும்போது ஜமாஅத்தில் சேர்ந்து இமாமுடன் அவரும் ஸலாம் கூறினால் அந்த ஜமாஅத் அவருக்குக் கிடைக்குமா? அல்லது அவருக்குக்கு இமாமுடன் ஒரு ரக்அத் கிடைத்தால் தான் அந்த ஜமாஅத் அவருக்குக் கிடைக்குமா? இமாம் இறுதி அத்தஹிய்யாத்தில் இருக்கும்போது ஒரு ஜமாஅத் பள்ளிவாசலுக்குள் நுழைந்தால் அவர்கள் ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்ளவது சிறப்பா? அல்லது இமாம் ஸலாம் கொடுக்கும் வரை காத்திருந்து அவர் ஸலாம் கொடுத்ததும் பின்னர் அவர்கள் தனி ஜமாஅத்தாகத் தொழுவது சிறப்பா?

**பதில்:** ஒருவர் இமாமுடன் ஒரு ரக்அத்தை அடைந்து கொள்வதன் மூலமாகத்தான் ஜமாஅத்தை அடைந்து கொள்ள முடியும்.

((مَنْ أَدْرَكَ رَكْعَةً مِنْ الصَّلَاةِ فَقَدْ أَدْرَكَ الصَّلَاةَ ))(خ/ ٥٨٠، م/ ٦٠٧)

“தொழுகையில் ஒரு ரக்அத்தை அடைந்து கொண்டவர் தொழுகையை அடைந்து கொண்டவராவார்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி 580, முஸ்லிம் 607) எனினும் ஒருவருக்கு மார்க்க ரீதியான- தக்க காரணம் இருக்குமானால் அவருக்கு இமாமுடன் ஜமாஅத் கிடைக்கா விட்டாலும் ஜமாஅத்தின் சிறப்பு கிடைத்து விடும்.

((إِذَا مَرِضَ الْعَبْدُ أَوْ سَافَرَ كُتِبَ لَهُ مِثْلُ مَا كَانَ يَعْمَلُ مُقِيمًا صَحِيحًا)) (خ/ ٢٩٩٦)

“ஒரு அடியான் நோயுற்றால் அல்லது பயணம் மேற்கொண்டால் அவன் ஆரோக்கியமானவனாய் ஊரில் தங்கியிருக்கும்போது செய்யும் நற்செயல்களுக்குக் கிடைப்பது போன்ற கூலி அவனுக்கு எழுதப்படும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி 2996)

((إِنَّ بِالْمَدِينَةِ لَرِجَالًا مَا سِرْتُمْ مَسِيرًا وَلَا قَطَعْتُمْ وَادِيًا إِلَّا كَانُوا مَعَكُمْ
حَبَسَهُمْ الْمَرَضُ)) (خ/ ٤٤٢٣، م/ ١٩١١) واللفظ له

தபூக் யுத்தத்தின்போது நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: மதீனாவில் சில ஆண்கள் இருக்கின்றனர். நீங்கள் எந்தப் பாதையில் சென்றீர்களோ எந்த பள்ளத்தாக்கைக் கடந்தீர்களோ அப்போது அவர்களும் உங்களுடன் இல்லாமலில்லை. (உங்களுடன் வர முடியா

தவாறு) நோய் அவர்களைத் தடுத்துவிட்டது. (புகாரி 4423, முஸ்லிம் 1911) இவ்வாசகம் முஸ்லிமுக்குரியது. முஸ்லி முக்குரிய மற்றொரு அறிவிப்பில்: "நற்கூலியில் அவர் களும் உங்களுடன் பங்கு கொள்ளாமலில்லை" என்று உள்ளது.

((إِذَا أَتَيْتُمُ الصَّلَاةَ فَعَلَيْكُمْ بِالسَّكِينَةِ فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا فَاتَكُمْ فَأَتِمُّوا))

(خ/ ٦٣٥، م/ ٦٠٣)

மேலும் "நீங்கள் தொழுகைக்கு வந்தால் அமைதி யைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்குக் கிடைத்ததைத் தொழுது கொள்ளுங்கள். தவறிவிட்டதைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்" (புகாரி 635, முஸ்லிம் 603) என்று நபி (ஸல்) அவர்கள் பொதுவாகக் கூறியிருப்பதால் ஒரு ஜமாஅத்தினர் கடைசி அத்தஹிய்யாத்தில் இமாமை அடைந்து கொண்டால் அவர்கள் இமாமுடன் சேர்ந்து கொள்வதே சிறந்தது. அவர்கள் தனி ஜமாஅத்தாகத் தொழுதால் குற்றமிருக்காது இன்ஷாஅல்லாஹ்.

52. ஃபஜ்ர் தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்ட பிறகு சிலர் பள்ளிக்குள் நுழைந்தால் ஃபஜ்ருடைய முன் சுன்னத்தை தொழுதுவிட்டுத்தான் இமாமுடன் சேர்கின் றனர். இதன் சட்டமென்ன? தவறிவிட்ட ஃபஜ்ருடைய முன் சுன்னத்தை ஃபஜ்ர் தொழுத பிறகு உடனே தொழுவது சிறப்பா? அல்லது சூரியன் உதிப்பதை எதிர்பார்த்திருந்து

(சூரியன் உதித்த பிறகு) தொழுவது சிறப்பா?

**பதில்:** இகாமத் சொல்லப்பட்ட பிறகு பள்ளிக்குள் நுழைந்தவர் முன் சுன்னத்தையோ தஹிய்யத்துல் மஸ்ஜித் எனும் பள்ளிவாசல் காணிக்கைத் தொழுகை யையோ தொழக் கூடாது. மாறாக நடப்புத் தொழு கையில் இமாமுடன் சேர்ந்துவிட வேண்டும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

((إِذَا أُقِيمَتْ الصَّلَاةُ فَلَا صَلَاةَ إِلَّا الْمَكْتُوبَةُ)) (م/ ٧١٠)

“தொழுகைக்காக பாங்கு சொல்லப்பட்டு விட்டால் ஃபர்ளு அல்லாத வேறு தொழுகை கிடையாது.”(முஸ்லிம் 710) இந்த ஹதீஸ் ஃபஜ்ர் தொழுகைக்கும் மற்ற தொழு கைகளுக்கும் பொதுவானதுதான். பிறகு அவர் விரும் பினால் ஃபர்ளுத் தொழுகைக்குப் பின்னர் ஃப்ஜ்ருடைய முன் சுன்னத்தைத் தொழுது கொள்ளலாம். விரும்பினால் சூரியன் உதித்து நன்கு உயர்ந்த பின்னர் வரை அதைத் தாமதப்படுத்தவும் செய்யலாம். இவ்வாறு தாமதித்து தொழுவதே சிறந்தது. ஏனெனில் இவ்விரண்டு விதமாகச் செய்வதற்கும் நபி(ஸல்) அவர்கள் மூலம் சான்றுகள் கிடைக்கின்றன.

53. எங்களுக்கு ஒருவர் தொழுகை நடத்தினார். முடிக்கும்போது வலது பக்கம் மட்டும் ஸலாம் கொடுத் தார். இவ்வாறு இமாம் ஒரு பக்கம் மட்டும் ஸலாம்

கொடுக்கலாமா? ஹதீஸில் இதற்கு ஏதும் ஆதாரம் உள்ளதா?

**பதில்:** ஒரு புறம் மட்டும் ஸலாம் கொடுப்பது போதுமானது என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும். ஏனெனில் சில ஹதீஸ்களில் இக்கருத்து காணப்படுகின்றன. ஆனால் நபி(ஸல்)அவர்கள் இரு புறமும் ஸலாம் கொடுத்ததாக ஹதீஸ்களில் நிரூபணமாகியுள்ளதால், மேலும் "என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்" (புகாரி 631) என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதால் இரு புறமும் ஸலாம் கொடுப்பது அவசியமாகும் என்று இன்னும் சில அறிஞர்கள் கூறுகின்றனர். இந்தக் கருத்தே சரியானதாகும்.

ஒரு பக்கம் மட்டும் ஸலாம் கொடுப்பது போதுமென்ற கருத்து பலவீனமானதாகும். ஏனெனில் அது குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் யாவும் பலவீனமானவையாகவும் நோக்கம் தெளிவில்லாமலும் இருக்கிறன்றன. அவை ஆதாரப்பூர்வமானவை என வைத்துக் கொண்டாலும் ஷாத் எனும் தரத்தில் அமைந்ததாகிவிடும். ஏனெனில் ஆதாரப்பூர்வமான, பலமான மற்றும் தெளிவான ஹதீஸ்களுக்கு அவை முரணாக அமைந்துள்ளன. எனினும் யாரேனும் இதனைத் தெரியாமல் செய்தால் அல்லது இது குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் யாவும் ஆதாரப்பூர்வ

மானவையே என எண்ணிச் செய்தால் அவரது தொழுகை நிறைவேறிவிடும். அல்லாஹ் மிக அறிந்தவன்!

54. (நான்கு ரக்அத் தொழுகையில்) தாமதமாக வந்த ஒருவர் இமாமுடன் சேர்ந்து இரண்டு ரக்அத் தொழுகிறார். பிறகு இமாம் ஐந்து ரக்அத் தொழுதுள்ளார் என்பது தெரிய வந்தால் அவர் இமாமுடன் தொழுத அதிகப்படியான ரக்அத்தையும் கணக்கில் சேர்த்து அவர் இரண்டு ரக்அத் தொழ வேண்டுமா? அல்லது அதைக் கணக்கில் சேர்க்காமல் மூன்று ரக்அத் தொழ வேண்டுமா?

**பதில்:** அவர் இமாமுடன் தொழுத அதிகப்படியான ரக்அத்தை கணக்கில் சேர்க்கக் கூடாது என்பதே சரியான கருத்தாகும். ஏனெனில் மார்க்கச் சட்டப்படி அந்த அதிகப்படியான ரக்அத் வீணானதாகும். எனவே தாமதமாக வந்தவர் இமாம் அதிகப்படியான ரக்அத்திலிருப்பதாகத் தெரிந்தால் அதில் இமாமைப் பின்தொடராமல் இருப்பது கடமையாகும். அவ்வாறு பின்தொடர்ந்தால் அந்த ரக்அத்தை கணக்கில் சேர்க்கக் கூடாது.

எனவே கேள்வியில் குறிப்பிடப்பட்ட அந்த நபர் மூன்று ரக்அத் தொழுவது கடமையாகும். ஏனெனில் அவருக்கு எதார்த்தத்தில் இமாமுடன் சேர்ந்து ஒரு ரக்அத்தான் கிடைத்துள்ளது. அல்லாஹ் மிக அறிந்தவன்!

55. இமாம் மறதியாக உளூவின்றி மக்களுக்கு தொழுவித்து விட்டால் பின்வரும் நிலைகளில் அந்தத் தொழுகையின் சட்டநிலை என்ன?

1. தொழுது கொண்டிருக்கும் போதே அவருக்கு நினைவு வந்து விட்டால்? 2. ஸலாம் கொடுத்த பிறகு மக்கள் பிரிந்து செல்லுமுன் நினைவு வந்தால்? 3. மக்கள் பிரிந்து சென்ற பின்னர் நினைவு வந்தால்?

**பதில்:** ஸலாம் கொடுத்த பின்பு தான் அவருக்கு நினைவு வந்தது எனில் மக்களின் தொழுகை நிறைவேறி விடும். அதை அவர்கள் திரும்பத் தொழ வேண்டியதில்லை. ஆனால் இமாம் அத்தொழுகையைத் திரும்பத் தொழ வேண்டும். தொழுது கொண்டிருக்கும்போதே இமாமுக்கு நினைவு வந்துவிட்டால் அறிஞர்களின் சரியான கருத்தின்படி மக்களுக்கு தொழுகையை நிறைவு செய்ய இமாம் தமக்குப் பதிலாக ஒருவரை நியமிக்க வேண்டும். உமர்(ரலி) அவர்களின் சம்பவம் இதற்கு ஆதாரமாகும். உமர்(ரலி) அவர்கள் ஈட்டியால் குத்தப்பட்டபோது தொழுகையை நிறைவு செய்ய தமக்குப் பதிலாக அப்துர் ரஹ்மான் பின் அவ்.்.ப்(ரலி) அவ்ர்களை நியமித்தார்கள். அவர் அத்தொழுகையை மக்களுக்கு நிறைவு செய்தார். அவர் அத்தொழுகையை ஆரம்பத்திலிருந்து புதிதாகத் தொடங்கவில்லை.

56. புகை பிடித்தல், தாடியை மழித்தல், கணுக் காலுக்குக் கீழ் ஆடை அணிதல் போன்ற பாவங்களைச் செய்பவர் இமாமத் செய்வது பற்றிய சட்டமென்ன?

**பதில்:** அவர் அல்லாஹ் மார்க்கமாக்கியபடி தொழு கையை நிறைவேற்றினால்- அறிஞர்களின் ஏகமனதான கருத்தின்படி அவரது தொழுகை நிறைவேறிவிடும். அவர் இமாமத் செய்தால்- அறிஞர்களின் சரியான கருத்தின் படி அவருக்குப் பின்னால் நின்று தொழுபவர்களின் தொழுகையும் நிறைவேறிவிடும். எனினும் ஒரு இறை மறுப்பாளன் (கா.்.பிர்) தொழுவித்தால் அவனது தொழு கையும் அவனுக்குப் பின்னால் நின்று தொழுபவர்களின் தொழுகையும் நிறைவேறாது. ஏனெனில் தொழுகை நிறைவேற அவர் முஸ்லிமாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை அங்கு இல்லாமல் போய்விடுகிறது.

57. பின்பற்றித் தொழுபவர் ஒருவராக இருந்தால் அவர் இமாமின் வலது பக்கத்தில் நிற்க வேண்டுமென்பது தெரிந்ததே. ஆனால் சிலரிடம் நாம் காண்பதுபோல அவர் இமாமைவிட சிறிது பின்னால் தள்ளி நிற்பது ஷரீஅத்தின் நடைமுறையாகுமா?

**பதில்:** பின்பற்றித் தொழுபவர் ஒருவராக இருந்தால் அவர் இமாமுக்கு அடுத்து அவரின் வலது பக்கத்தில் நிற்பதே ஷரீஅத்தின் நடைமுறையாகும். இதற்கு மாற்ற

மாக நிற்பதற்கு ஷரீஅத்தில் ஆதாரமில்லை.

**மறதிக்கான ஸுஜூத்**

58. தொழுது கொண்டிருப்பவருக்கு மூன்று ரக்அத் தொழுதுள்ளோமா நான்கு ரக்அத் தொழுதுள்ளோமா என்ற சந்தேகம் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** இவ்வாறு சந்தேகம் வருகிறபோது உறுதியாக உள்ள குறைந்த எண்ணிக்கையைக் கொண்டு அவர் செயல்பட வேண்டும். எவ்வாறெனில் மூன்று ரக்அத் தொழுதுள்ளோமா நான்கு ரக்அத் தொழுதுள்ளோமா என சந்தேகம் ஏற்பட்டால் மூன்று ரக்அத் தொழுததாக எடுத்துக் கொண்டு நான்காவது ரக்அத்தை அவர் நிறைவு செய்வார். ஸலாம் கொடுப்பதற்கு முன் மறதிக் கான இரண்டு ஸஜ்தா செய்து பிறகு ஸலாம் கொடுப்பார். ஆதாரம்:

((إِذَا شَكَّ أَحَدُكُمْ فِي صَلَاتِهِ فَلَمْ يَدْرِ كَمْ صَلَّى ثَلَاثًا أَمْ أَرْبَعًا فَلْيَطْرَحِ الشَّكَّ وَلْيَبْنِ عَلَى مَا اسْتَيْقَنَ ثُمَّ يَسْجُدُ سَجْدَتَيْنِ قَبْلَ أَنْ يُسَلِّمَ فَإِنْ كَانَ صَلَّى خَمْسًا شَفَعْنَ لَهُ صَلَاتَهُ وَإِنْ كَانَ صَلَّى إِتْمَامًا لِأَرْبَعٍ كَانَتَا تَرْغِيمًا لِلشَّيْطَانِ)) (م/ ٥٧١)

“உங்களில் ஒருவருக்குத் தொழுகையில் சந்தேகம் வந்தால், மூன்று ரக்அத் தொழுதோமா நான்கு ரக்அத் தொழுதோமா என்று தெரியவில்லை என்றால் சந்தே கத்தை விட்டுவிட்டு (மூன்று ரக்அத் தொழுதோம் என்ற)

உறுதியின் அடிப்படையில் அதை அமைத்துக் கொள்ளட்டும். பின்னர் ஸலாம் கொடுக்கும் முன் இரண்டு ஸஜ்தா செய்யட்டும். அவர் (உண்மையில்) ஐந்து ரக்அத் தொழுதிருந்தால் அந்த இரண்டு ஸஜ்தா அவரது தொழுகையை இரட்டைப்படையாக ஆக்கிவிடும். அவர் (உண்மையில்) நான்கு ரக்அத் தொழுதிருந்தால் அந்த இரண்டு ஸஜ்தா ஷைத்தானுக்கு மூக்கறுப்பாக அமையும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஸஈத் (ரலி), நூல்: முஸ்லிம் 571

முழுமைப்படுத்துதல், குறைத்தல் என்ற இரண்டு விஷயத்தில் ஒன்று அவரது மிகையான எண்ணமாக இருந்தால் அவரது மிகையான எண்ணத்தின் அடிப்படையில் செயல்படுவார். பிறகு ஸலாம் கொடுப்பார். பிறகு மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்வார். ஆதாரம்:

((وَإِذَا شَكَّ أَحَدُكُمْ فِي صَلَاتِهِ فَلْيَتَحَرَّ الصَّوَابَ فَلْيُتِمَّ عَلَيْهِ ثُمَّ لِيُسَلِّمْ ثُمَّ يَسْجُدُ سَجْدَتَيْنِ)) (خ/ ٤٠١)

"உங்களில் ஒருவர் தமது தொழுகையில் சந்தேகித்தால் உறுதியானதை அவர் தீர்மானிக்கட்டும். அத்தீர்மானத்தின் அடிப்படையில் தொழுகையை நிறைவு செய்து ஸலாம் சொல்லட்டும். பிறகு இரண்டு ஸஜ்தா செய்யட்டும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரி 401

59. சில இமாம்கள் மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுத்த பிறகு செய்கிறார்கள். சில இமாம்கள் ஸலாம் கொடுக்கும் முன் செய்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு முறை ஸலாம் கொடுக்கும் முன்பும் ஒரு முறை ஸலாம் கொடுத்த பிறகும் செய்கிறார்கள்.

ஷரீஅத்தில் மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுக்கும் முன் செய்வது எப்போது? ஸலாம் கொடுத்த பிறகு செய்வது எப்போது? மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுக்கும் முன் அல்லது ஸலாம் கொடுத்த பிறகு செய்வது என்பது ஷரீஅத்தில் கடமை என்ற அடிப்படையிலா அல்லது விரும்பத்தக்கது என்ற அடிப் படையிலா?

**பதில்:** இது விஷயத்தில் தாரளமாக நடந்து கொள்ள லாம். மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுக்கும் முன் செய்வது, ஸலாம் கொடுத்த பிறகு செய்வது ஆகிய இரண்டுமே ஆகுமானது தான். ஏனெனில் இந்த இரண்டு முறையிலும் நபி(ஸல்)அவர்கள் செய்ததாக ஹதீஸ்கள் வந்துள்ளன. ஆனாலும் பின்வரும் இரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுப்பதற்கு முன் செய்வதே சிறந்தது.

**ஒன்று:** ஒருவர் ஒன்றிரண்டு ரக்அத் குறைவாகத் தொழுது ஸலாம் கொடுத்து விட்டால் அவர் விடுபட்ட

ரக்அத்தை தொழுது நிறைவு செய்து ஸலாம் கொடுத்த பிறகு மறதிக்கான ஸஜ்தா செய்வதே சிறந்தது. இதில் நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் இருக்கிறது. ஏனெனில் அபூஹு"ரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில் நபி(ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத் குறைவாகத் தொழுது ஸலாம் கொடுத்த போதும், இம்ரான் பின் ஹு"ஸைன்(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் ஒரு ரக்அத் குறைவாகத் தொழுது ஸலாம் கொடுத்தபோதும், விடுபட்டதைத் தொழுது நிறைவு செய்து ஸலாம் கொடுத்த பிறகே மறதிக்கான ஸஜ்தா செய்துள்ளார்கள். (பார்க்க: புகாரி 482)

**இரண்டு:** ஒருவருக்குத் தமது தொழுகையில் சந்தேகம் வந்தால், நான்கு ரக்அத் தொழுகையில்- மூன்று ரக்அத் தொழுதோமா நான்கு ரக்அத் தொழுதோமா என்று தெரியவில்லை என்றால், அல்லது ம.்.க்ரிப் தொழுகையில்- இரண்டு ரக்அத் தொழுதோமோ மூன்று ரக்அத் தொழுதோமா என்று தெரியவில்லை என்றால், அல்லது ்.பஜ்ர் தொழுகையில்- ஒரு ரக்அத் தொழுதோமா இரண்டு ரக்அத் தொழுதோமா என்று தெரியவில்லை என்றால் ஆனாலும் முழுமைப்படுத்துதல், குறைத்தல் என்ற இரண்டு விஷயத்தில் ஒன்று அவரது மிகையான எண்ணமாக இருந்தால் அவரது மிகையான எண்ணத்தின் அடிப்படையில் அவர் செயல்படுவார்.

மறதிக்கான ஸஜ்தாவை ஸலாம் கொடுத்த பிறகு செய் வதே சிறப்பு. இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் அறிவிக் கின்ற ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும். (பார்க்க: புகாரி 401) இதனை 58 வது பதிலில் காணலாம்.

60. தாமதமாக வந்து இமாமுடன் சேர்ந்தவருக்கு மறதி ஏற்பட்டால் அவர் மறதிக்கான ஸஜ்தா செய்ய வேண்டுமா? எப்போது செய்ய வேண்டும்? மேலும் இமா மைப் பின்பற்றித் தொழுபவருக்கு மறதி ஏற்பட்டால் மறதிக்கான ஸஜ்தா செய்வது அவசியமா?

பின்பற்றித் தொழுபவருக்கு மறதி ஏற்பட்டால்- அவர் தொழுகையின் ஆரம்பம் முதலே இமாமுடன் சேர்ந்தி ருந்தால் மறதிக்கான ஸஜ்தா செய்ய வேண்டியதில்லை. அவர் இமாமைப் பின்பற்றுவது கடமையாகும். ஆனால் தாமதமாக வந்து இமாமுடன் சேர்ந்தவர் இமாமுடன் சேர்ந்து தொழும்போதோ அல்லது விடுபட்டதை அவர் நிறைவு செய்யும்போதோ அவருக்கு மறதி ஏற்பட்டால் அவர் மறதிக்கான ஸஜ்தா செய்து கொள்ள வேண்டும். இதன் விபரத்தை 58, 59 ஆவது கேள்விகளுக்குரிய பதில்களில் கண்க.

61. பின்வரும் இடங்களில் ஸஜ்தா ஸஹ்வு செய்வது அவசியமா?

1. நான்கு ரக்அத் தொழுகைகளில் பிந்திய இரண்டு

ரக்அத்தில் ஸூரத்துல் ஃபாத்திஹாவுடன் திருக்குர்ஆனில் தனக்குத் தெரிந்ததை ஓதினால்?

2. ஸுஜூதில் குர்ஆன் வசனங்களை ஓதிவிட்டால்? அல்லது இரு ஸஜ்தாக்களுக்கிடையில் சுப்ஹான ரப்பி யல் அழீம் எனக் கூறிவிட்டால்?

3. மெதுவாக ஓத வேண்டிய தொழுகையில் சப்தமாக ஓதிவிட்டால் அல்லது சப்தமிட்டு ஓத வேண்டிய தொழு கையில் மெதுவாக ஓதிவிட்டால்?

**பதில்:** நான்கு ரக்அத் தொழுகைகளில் பிந்திய இரண்டு ரக்அத்தில் அல்லது அவ்விரண்டில் ஒன்றில் ஒரு ஸூராவையோ அல்லது சில வசனங்களையோ மறதி யாக ஓதிவிட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டிய தில்லை. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் சில சமயங்களில் ளுஹருடைய 3 -வது 4 -வது ரக்அத்தில் பாத்திஹாவை விட அதிமாக ஏதாவது ஓதியிருக்கக் கூடும் என்ற கருத் தில் ஹதீஸ் வந்துள்ளது. எல்லா ரக்அத்திலும் ஸூரத் துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு "குல் ஹுவல்லாஹு" ஸூராவை ஓதிய ஒரு ஆளுநரை நபி(ஸல்) அவர்கள் பாராட்டியதாகவும் ஹதீஸ் வந்துள்ளது.

எனினும் நபி(ஸல)அவர்கள் 3 -வது 4 -வது ரக்அத்தில் ஸூரத்துல் ஃபாத்திஹாவைத் தவிர வேறு எதையும் ஓத வில்லையென்றே அவர்கள் மூலம் அறியப்பட்டதாகும்.

புகாரி, முஸ்லிமில் அபூகதாதா(ரலி) அவர்கள் வழியாக அறிவிக்கப்பட்டுள்ளது போல. இன்னும் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் ம.்.க்ரிபுடைய மூன்றாம் ரக்அத்தில் ஸூரத்துல் ஃ.பாத்திஹாவிற்குப் பிறகு

﴿ رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الوَهَّابُ ﴾

“ரப்பனா லா துஸி.்.க் குலூபனா பஅதஇத் ஹைதைத் தனா வஹப்லனா மின்லதுன்க ரஹ்மத்தன் இன்னக்க அன்தல் வஹ்ஹாப்” (3:8) என்ற வசனத்தை ஓதியதாக வந்துள்ளது. இந்த ஆதாரங்கள் யாவும் இவ்விஷயத்தில் தாராளமாக நடந்து கொள்ளலாம் என்பதையே காட்டு கிறது.

ருகூவிலும், ஸுஜூதிலும் குர்ஆன் வசனங்களை மறதி யாக யாரேனும் ஓதினால் அவர் மறதிக்கான ஸஜ்தா செய்ய வேண்டும். ஏனெனில் ருகூவிலும், ஸுஜூதிலும் குர்ஆன் வசனங்களை வேண்டுமென்றே ஓதுவது கூடாது. அதனை நபி(ஸல்)அவர்கள் தடை செய்துள்ளார்கள். ஆனால் ஒருவர் ருகூவிலும், ஸுஜூதிலும் குர்ஆன் வசனங்களை மறதியாக ஓதிவிட்டால் மறதிக்கான ஸஜ்தா செய்வது கடமையாகும்.

இவ்வாறே ஒருவன் மறதியாக- ருகூவில், சுப்ஹான ரப்பியல் அழீம் என்று கூறுவதற்குப் பதிலாக சுப்ஹான ரப்பியல் அ.்.லா என்றோ அல்லது ஸுஜூதில் சுப்ஹான

ரப்பியல் அ∴லா என்று கூறுவதற்குப் பதிலாக சுப்ஹான ரப்பியல் அழீம் என்றோ கூறினால், அவன் தொழுகையின் வாஜிபுகளில் (இரண்டாம் நிலைக் கடமைகளில்) ஒன்றை மறதியாக விட்டுவிட்டான் என்பதால் ஸஜ்தா ஸஹ்வு (மறதிக்கான ஸஜ்தா) செய்வது கடமையாகும்.

ஒருவன் ருகூவிலும் ஸுஜூதிலும் மறதியாக சுப்ஹான ரப்பியல் அழீம் என்பதையும் சுப்ஹான ரப்பியல் அ∴லா என்பதையும் சேர்த்து ஓதிவிட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும் என்பது கட்டாயமல்ல. மறதிக்காக ஸஜ்தா செய்ய வேண்டும் என்ற பொதுவான ஆதாரத் தின்படி ஸஜ்தா ஸஹ்வு செய்தாலும் குற்றமில்லை. மேற்கூறப்பட்ட இந்தச் சட்டம் இமாம், தனித்துத் தொழு பவர், தாமதமாக வந்து இமாமுடன் சேர்ந்து கொண்டவர் ஆகிய அனைவருக்கும் பொதுவானது தான்.

ஆனால் தொழுகையின் ஆரம்பத்திலிருந்தே இமா முடன் சேர்ந்து தொழுபவர் மேற்கூறப்பட்ட பிரச்சனை களில் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டியதில்லை. அவர் தமது இமாமையே பின் தொடர்வார்.

அடுத்து, மெதுவாக ஓதவேண்டிய தொழுகையில் சப்தமிட்டு ஓதினாலோ சப்தமிட்டு ஓத வேண்டிய தொழு கையில் மெதுவாக ஓதினாலோ ஸஜ்தா ஸஹ்வு அவசிய மில்லை. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் சில நேரங்களில்

மெதுவாக ஓதவேண்டிய தொழுகையில் பிறர் கேட்கு மளவு சப்தமிட்டு ஓதியுள்ளார்கள்.

**ஜம்வு, கஸர்**

(**குறிப்பு:** ஜம்வு செய்தல் என்றால் இரண்டு தொழுகை களை சேர்த்து தொழுதல் என்பதாகும். கஸர் செய்தல் என்றால் நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்தாக (சுருக்கி) தொழுவதாகும். ஜம்வுவில் முற்ப டுத்தி ஜம்வு செய்தல், பிற்படுத்தி ஜம்வு செய்தல் என இரண்டு வகை உள்ளன. முற்படுத்தி ஜம்வு செய்தல் என்பது ழுஹருடைய நேரத்தில் ழுஹரையும் அஸரை யும் சேர்த்து தொழுவதாகும். அதுபோல ம.்.க்ரிபுடைய நேரத்தில் ம.்.க்ரிபையும் இஷாவையும் சேர்த்து தொழு வதாகும். பிற்படுத்தி ஜம்வு செய்தல் என்பது அஸரு டைய நேரத்தில் ழுஹரையும் அஸரையும் சேர்த்து தொழுவதாகும். அதுபோல இஷாவுடைய நேரத்தில் ம.்.க்ரிபையும் இஷாவையும் சேர்த்து தொழுவதாகும்.)

62. சிலர், ஜம்வும் கஸரும் ஒன்றோடொன்று இணைந் ததாகும். கஸர் செய்யாமல் ஜம்வு செய்ய முடியாது; ஜம்வு செய்யாமல் கஸர் செய்ய முடியாது என்று கூறுகிறார்கள். இது பற்றி தங்களின் கருத்தென்ன? பயணிக்கு, ஜம்வு செய்யாமல் கஸர் மட்டும் செய்வது சிறந்ததா? அல்லது ஜம்வுவையும் கஸரையும் சேர்த்துச்

செய்வது சிறந்ததா?

**பதில்:** ஷரீஅத்தில் யாருக்கு கஸர் செய்ய அல்லாஹ் அனுமதித்துள்ளானோ அவருக்கு ஜம்வு செய்வதும் கூடும். அவர் பயணி ஆவார். ஆனால் அவ்விரண்டையும் அவர் சேர்த்து செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. ஜம்வு செய்யாமல் கஸர் மட்டும் செய்து கொள்ளலாம். பயணி தமது பயணத்தைத் தொடராமல் ஓரிடத்தில் தங்கியிருக்கும்போது ஜம்வு செய்யாமல் இருப்பதே சிறந்தது. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது மினாவில் (தங்கியிருக்கும்போது) ஜம்வு செய்யாமல் கஸர் மட்டும்தான் செய்துள்ளார்கள். தபூக் யுத்தத்தின் போது ஜம்வுவையும் கஸரையும் சேர்த்து செய்துள்ளார்கள். ஆக இது விஷயத்தில் தாரளமாக நடந்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிய வருகிறது. நபி(ஸல்) அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருக்காமல் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தால் ஜம்வு, கஸர் இரண்டையும் செய்வார்கள்.

ஜம்வு செய்வதைப் பொறுத்தவரை அதில் தாராளமாக நடந்து கொள்ளலாம். நோயாளிக்கு ஜம்வு செய்வது கூடும். மேலும் மழை பொழிந்து கொண்டிருக்கும்போது முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் ளுஹரையும் அஸரையும் மக்ரிபையும் இஷாவையும் சேர்த்து- ஜம்வு செய்து தொழுவதும் ஆகுமானதே. ஆனால் அவர்கள் கஸர்

செய்யக்கூடாது. ஏனெனில் கஸர் செய்வது என்பது பயணத்தில் மட்டும்தான்.

63. ஒருவர் ஊரிலிருக்கும்போது தொழுகைக்குரிய நேரம் வந்தும், தொழாமல் பயணம் மேற் கொண்டால் அவர் ஜம்வும் கஸரும் செய்யலாமா? இவ்வாறே ஒருவர் (பயணத்தில்) ளுஹரையும் அஸரையும் ஜம்வு செய்தும் கஸர் செய்தும் தொழுதுவிட்டு அஸருடைய நேரத்தில் ஊர் வந்து சேர்ந்துவிடுகிறார்.இவ்வாறு செய்வது கூடுமா? ஜம்வு, கஸர் செய்கிறபோது அஸருடைய நேரத்தில் ஊர் வந்து சேர்ந்துவிடுவோம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தும் அவ்வாறு செய்யலாமா?

**பதில்:** ஒருவர் ஊரில் இருக்கும்போது தொழுகைக் குரிய நேரம் வந்து, தொழுவதற்கு முன் பயணம் மேற் கொண்டால் அறிஞர்களின் சரியான கருத்தின்படி ஊரின் எல்லையை அவர் கடந்துவிட்டால் கஸர் செய்யலாம். பெரும்பாலான அறிஞர்களின் கருத்தும் இதுவேயாகும். இவ்வாறே ஒருவர் பயணத்தில் இருக்கும்போது இரண்டு தொழுகைகளை சேர்த்தும் சுருக்கியும் (ஜம்ஆகவும், கஸராகவும்) தொழுதுவிட்டு, இரண்டாவது தொழுகைக் குரிய நேரம் வருமுன் அல்லது இரண்டாவது தொழு கைக்குரிய நேரத்தில் ஊர் வந்து சேர்ந்துவிட்டால் அந்த இரண்டாவது தொழுகையை அவர் திருப்பித் தொழ

வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர் ஷரீஅத்தின் முறைப்படி தொழுகையை நிறைவேற்றி விட்டார். ஊர் மக்களுடன் சேர்ந்து அத்தொழுகையை அவர் திரும்பத் தொழுதால் அது அவருக்கு ந.்.பிலாகிவிடும்.

64. கஸர் செய்ய அனுமதிக்கப்பட்ட பயணத்திற்கு குறிப்பிட்ட தூரம் ஏதும் வரையறுகப்பட்டுள்ளதா? ஒரு பயணி (தாம் சென்ற இடத்தில்) நான்கு நாட்களுக்கு மேல் தங்கியிருக்க நாடினால் அவர் கஸர் செய்யலாமா?

**பதில்:** பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாவது: ஒட்டகத்தில் பயணம் செய்வோருக்கும் கால்நடையாக நடந்து செல்வோருக்கும் கஸர் செய்வதற்குரிய பயண தூரம் ஒரு இரவு, ஒரு பகல் பயணம் செய்யும் தூரமென வரையறுகப்பட்டதாகும். இது சுமார் 80 கி. மீ ஆகும். இத்தனை தூரத்திற்குரிய பயணம்தான் வழக்கத்தில் பயணமெனக் கருதப்படுகிறது. இதற்கும் குறைவான தூரத்திற்குரிய பயணம் பயணமாகக் கருதப்படுவதில்லை.

மேலும் பெரும்பாலான அறிஞர்கள் பின்வருமாறும் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதாவது ஒருவன் (பயணத்தில்) நான்கு நாட்களுக்கு மேல் தங்கியிருக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் (தொழுகைகளைக் கஸர் செய்யாமல்) முழுமைப்படுத்தி தொழுவதும் ரமளானில்

நோன்பு நோற்பதும் அவன் மீது கடமையாகிவிடும். நான்கு நாட்களுக்கு குறைவாக தங்க வேண்டியது வந்தால் அவன் ஜம்வும் செய்து கொள்ளலாம், கஸரும் செய்து கொள்ளலாம், நோன்பு நோற்காமல் விட்டுவிடவும் செய்யலாம். ஏனெனில் தங்கியிருப்பவர் விஷயத்தில் சட்டத்தின் அசல் நிலை தொழுகைகளை முழுமைப் படுத்துவதுதான். ஷரீஅத்தில் அவர் கஸர் செய்ய அனுமதிக்கப்படுவது என்பது தமது பயணத்தை அவர் தொடரும் போதுதான். நபி(ஸல்)அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின் போது நான்கு நாட்கள் தங்கி, கஸராகத் தொழுதுவிட்டு பின்னர் மினா, அர.்.பாவுக்குப் பயணமானார்கள் என ஹதீஸில் வந்துள்ளது. எனவே நான்கு அல்லது அதற்கும் குறைவான நாட்கள் தங்க முடிவு செய்தவர்கள் கஸர் செய்யலாமென இதன் மூலம் அறிய முடிகிறது.

நபி(ஸல்) அவர்கள், மக்கா வெற்றி கொள்ளப்பட்ட போது அங்கு 19 நாட்களும், தபூக் யுத்தத்தின்போது அங்கு 20 நாட்களும் தங்கியிருந்து கஸர் செய்தது எந்த அடிப்படையில் எனில் அவர்கள் அங்கு தங்க வேண்டும் என்று முடிவு செய்யவில்லை. மாறாக இப்பிரச்சனை எப்போது தீரப்போகிறது என்று தெரியாமல் தங்கியிருந் தார்கள். நபி(ஸல்)அவர்கள் இங்கு தங்கியதை பெரும் பாலான அறிஞர்கள் இப்படித்தான் எடுத்துக் கொண் டார்கள். இது பேணுதல் அடிப்படையிலும் சட்டத்தின்

அசல் நிலையின்படி செயல்படுவதற்காகவுமாகும்.

தங்கியிருப்பவர்கள் விஷயத்தில் சட்டத்தின் அசல் நிலை இதுதான். அவர்கள் ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகளை நான்கு ரக்அத்தாக தொழுவது கடமை யாகும். துஙக வேண்டும் என்று முடிவு செய்யாமல், இன்னும் சொல்வதானால் எப்போது புறப்படுவது என்பது தெரியாமல் ஒருவர் தங்கியிருந்தால் அவர் ஜம்வு, கஸர் செய்வதும், நோன்பை விடுவதும் கூடும்.

65. சாலைகள் நன்றாகவும்- தார்போடப்பட்டதாகவும், இருளில் ஓளிரக்கூடியதாகவும் இருக்கின்ற நகரங்களில், அதுவும் மழைக்காலங்களில் சேறு- சகதியின்றி, எந்த சிரமமும் இல்லாமலிருக்கும்போது ம.்.க்ரிபையும் இஷா வையும் சேர்த்து தொழுவது குறித்து தங்கள் கருத் தென்ன?

**பதில்:** அறிஞர்களின் சரியான கருத்தின்படி மழைக் காலங்களில் பள்ளிவாசலுக்குச் செல்ல சிரமமாக இருக் கும்போது ம.்.க்ரிபையும் இஷாவையும், ளுஹரையும், அஸரையும் சேர்த்து தொழுவதில் எந்தக் குற்றமும் இல்லை. இவ்வாறே வீதிகளில் வெள்ளம் ஓடும்போதும் வழுக்கு ஏற்பட்டிருக்கும்போதும்- இதில் சிரமம் இருப்ப தனால் இரண்டு தொழுகைகளைச் சேர்த்து தொழுவ திலும் தவறேதுமில்லை.

இதற்கான ஆதாரம் புகாரி, முஸ்லிமில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட ஹதீஸ் ஆகும்.

((صَلَّى رَسُولُ الله ﷺ الظُّهْرَ وَالْعَصْرَ جَمِيعًا بِالْمَدِينَةِ فِي غَيْرِ خَوْفٍ وَلَا سَفَرٍ ))

وفي رواية في غير خوف ولا مطر (م/ ٧٠٥) ومعناه في البخاري (خ/ ٤٣٥)

“நபி(ஸல்) அவர்கள் மதீனாவில் அச்ச நிலையோ பயணமோ எதுவுமின்றி- மற்றொரு அறிவிப்பில் அச்ச நிலையோ மழையோ எதுவுமின்றி- ளுஹரையும் அஸரையும் சேர்த்து, ம.்.க்ரிபையும் இஷாவையும் சேர்த்து (ஜம்வு செய்து) தொழுதுள்ளார்கள்.” (முஸ்லிம் 705) இக்கருத்து புகாரியிலும் உள்ளது. (பார்க்க: புகாரி 543)

ஆக சேர்த்து தொழுவதற்கு பயணத்தைப் போன்று அச்ச நிலையும் (போர்க்காலம்), மழையும் தக்க காரணமாகும் என்ற கருத்து நபித்தோழர்களிடம் நிலை கொண்டுள்ளது என இதன் மூலம் அறிய முடிகிறது. எனினும் இது போன்ற நேரங்களில் சுருக்கித் தொழுவது கூடாது. சேர்த்து தொழுவது மட்டுமெ ஆகுமானது. ஏனெனில் அவர்கள் பயணிகளாக இல்லாமல் சொந்த ஊரில் தங்கியிருப்பவர்களாக உள்ளனர். மேலும் கஸர் செய்வது பயணத்திற்குரிய பிரத்தியேக சலுகைளில் உள்ளதாகும்.

66. ஜம்வு நிறைவேறுவதற்கு நிய்யத் அவசியமா?

பெரும்பாலோர் (மழைக்காலங்களில்) ஜம்வுடைய நிய்யத் இன்றி ம.்.க்ரிபைத் தொழுவதில்லை. ம.்.க்ரிப்

தொழுத பிறகு ஜமாஅத்தாருடன் ஆலோசனை செய்து அவர்கள் ஜம்வு செய்ய அபிப்பிராயப்பட்டால் இஷாவைத் தொழுகிறார்கள். இதன் நிலை என்ன?

**பதில்:** இது விஷயத்தில் அறிஞர்களிடம் கருத்து வேறுபாடுள்ளது. சரியான கருத்தாவது, முதல் தொழுகையை ஆரம்பிக்கும்போது ஜம்வு செய்வதற்கு நிய்யத் செய்து கொள்ள வேண்டும் என்பது நிபந்தனை கிடையாது. ஜம்வு செய்வதற்குரிய காரணங்களான அச்ச நிலை (போர்க்காலம்), மழை, நோய் ஆகியன இருந்தால் ஜம்வு செய்து கொள்ளலாம்.

67. இரு தொழுகைகளை சேர்த்து தொழும்போது தொடராகத் தொழ வேண்டுமா? சிலர் இரண்டு தொழுகைகளுக்கிடையே பிரிக்கின்ற வகையில் சிறிது நேரம் தாமதப்படுத்தி ஜம்வு செய்கிறார்கள். இது குறித்த சட்டநிலை என்ன?

**பதில்:** இரண்டு தொழுகைகளையும் சேர்த்து முற்படுத்தி தொழும்போது இரண்டுக்கும் இடையில் தொடர் இருப்பது அவசியமாகும். எனினும் வழக்கத்தில் சிறிதளவு தாமதம் என்று எதற்குச் சொல்லப்படுமோ அத்தகைய தாமதம் இரண்டு தொழுகைகளுக்கிடையே இருந்தால் அதுபற்றிக் குற்றமில்லை. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் அவ்வாறு தொழுதுள்ளார்கள். மேலும் “என்னை எவ்வாறு

தொழக் கண்டீர்களோ அவ்வாறு நீங்களும் தொழுங்கள்" எனவும் நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 631) 66 ஆவது கேள்விக்குரிய பதிலில் முன்னர் குறிப் பிட்டது போல சேர்த்துத் தொழும்போது ஜம்வுக்குரிய நிய்யத் நிபந்தனை அல்ல என்பதே சரியான கருத்தாகும்.

இரண்டு தொழுகைகளையும் சேர்த்து பிற்படுத்தி தொழும்போது தாரளமாக நடந்து கொள்ளலாம். ஏனெ னில் இரண்டாவது தொழுகை அதற்குரிய நேரத்திலேயே நிறைவேற்றப்படுகிறது. எனினும் நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றி தொடராகத் தொழுவதே சிறப்பாகும்.

68. நாங்கள் பயணத்தில் இருக்கும்போது ளுஹர் நேரத்தில் ஒரு பள்ளியைக் கடந்து செல்லும்போது ளுஹரை அந்த ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதுவிட்டு பிறகு அஸரை கஸராக தொழுவது நல்லதா? அல்லது நாங்கள் ஜமாஅத்துடன் சேராமல் தனியாகத் தொழுவது நல்லதா? அடுத்து, நாங்கள் பள்ளியில் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதுவிட்டு பிறகு அஸர் தொழ விரும்பினால் தொடர் கிடைப்பதற்காக ஸலாம் கொடுத்த உடனேயே அஸர் தொழ வேண்டுமா? அல்லது திக்ர், தஸ்பீஹ் செய்து விட்டு அஸர் தொழலாமா?

**பதில்:** நீங்கள் தனியாக கஸராகத் தொழுவதே உங்களுக்குச் சிறந்தது. ஏனெனில் பயணிகள் நான்கு

ரக்அத் தொழுகைகளை சுருக்கித் தொழுவதே சுன்னத் தாகும். ஊரிலிருப்பவர்களின் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதால் முழுமைப்படுத்தி தொழுவது கடமையாகி விடும். நபி(ஸல்) அவர்களின் நடைமுறை இதைத்தான் சரிகாணுகின்றது. நீங்கள் (ளுஹரையும் அஸரையும் சேர்த்து) ஜம்வு செய்ய விரும்பினால்- 67 ஆவது கேள் விக்குரிய பதிலில் முன்னர் குறிப்பிட்டது போல்- (ளுஹர் தொழுது ஸலாம் கொடுத்தவுடன்) "அஸ்தக்.்.பிருல் லாஹ்" என மூன்று தடவையும் "அல்லாஹு"ம்ம அன்தஸ் ஸலாம் வமின்க்கஸ் ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்" என ஒரு தடவையும் கூறிவிட்டு உடனேயே அஸர் தொழ ஆரம்பித்து விட வேண்டும். இவ்வாறு செய்வது நபிவழியின் அடிப்படையில் செயல்படுவதாக அமையும்.

ஆனால் பயணி ஒரே ஒருவராக இருந்தால் ஊரிலிருப் பவர்களின் ஜமாஅத்துடன் சேர்ந்து முழுமைப்படுத்தித் தொழுது கொள்ள வேண்டும். ஏனெனில் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்று (இறைமார்க்கத்தின்) கடமை களில் ஒன்றாகும். தொழுகையைச் சுருக்கித் தொழுவது விரும்பத்தக்க (சுன்னத்தான) காரியங்களில் உள்ள தாகும். விரும்பத்தக்க காரியங்களை விட கடமையான காரியங்களுக்கு முன்னுரிமை தருவது அவசியமாகும்.

69. பயணியைப் பின்பற்றி பயணி அல்லாதோரும் பயணி அல்லாதோரைப் பின்பற்றி பயணியும் தொழுவதன் சட்டநிலை என்ன? இவ்வாறு தொழும்போது பயணி கஸர் செய்வது கூடுமா? அவர் இமாமாக இருந்தாலும் சரி. அல்லது ம.்.மூமாக இருந்தாலும் சரி.

**பதில்:** பயணி அல்லாதோரைப் பின்பற்றி பயணியும் பயணியைப் பின்பற்றி பயணி அல்லாதோரும் தொழுவதில் ஒரு குற்றமுமில்லை. பின்பற்றித் தொழுபவர் பயணியாகவும், பயணி அல்லாதவர் இமாமாகவும் இருந்தால் அப்பயணி தமது இமாமைப் பின்பற்றி தொழுகையை முழுமைப்படுத்தியே தொழ வேண்டும். ஏனெனில் பயணி அல்லாதவரைப் பின்பற்றி ஒரு பயணி நான்காகத் தொழுவது பற்றி இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு "அதுதான் நபிவழிதான்" என்று பதிலளித்துள்ளார்கள். (அஹ்மத், முஸ்லிம்)

ஆனால் நான்கு ரக்அத் தொழுகைகளில் பயணியைப் பின்பற்றி பயணி அல்லாதவர் தொழுதால் இமாம் ஸலாம் கொடுத்ததும் அவர் தனது தொழுகையை முழுமைப்படுத்திட வேண்டும்.

70. மழைக்காலங்களில் ம.்.க்ரிபையும் இஷாவையும் ஜம்வு செய்கின்றபோது- இமாம் இஷாவைத் தொழுவிக்கும்போது சிலர் பள்ளிக்கு வருகின்றனர். இமாம் ம.்.க்ரிப்

தொழுகிறார் என்று எண்ணி அவர்கள் இமாமுடன் சேர்ந்துவிடுகின்றனர். இந்த நிலையில் அவர்கள் என்ன செய்வது?

**பதில்:** இந்த நிலையில் அவர்கள் மூன்றாம் ரக்அத்தில் அமர்ந்து அத்தஹிய்யாத்தையும் துஆவையும் ஓதிக் கொண்டு (இமாமை எதிர்பார்த்து) இருக்க வேண்டும். பிறகு இமாமுடன் ஸலாம் கொடுக்க வேண்டும். அதன் பின்னர் அவர்கள் இஷாவைத் தொழ வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஜமாஅத்தின் சிறப்பும் அவர்களுக் குக் கிடைத்துவிடும். தொழுகைகளை வரிசைக்கிரம மாகச் செய்ய வேண்டிய கடமையையும் நிறைவேற்றி யவர்களாவர். அவர்களுக்கு ஒரு ரக்அத் தான் தவறி விட்டது என்றால் ம.்.க்ரிபுடைய நிய்யத்துடன் இமாமுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். அது அவர்களுக்கு ம.்.க்ரி பாக நிறைவேறிவிடும்.

ஒரு ரக்அத்துக்கும் கூடுதலாக தவறிவிட்டால் இமா முடன் சேர்ந்து, கிடைத்ததை அவர்கள் தொழுதுகொள்ள வேண்டும். மீதியை இமாம் ஸலாம் கொடுத்த பின்னர் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறே இமாம் இஷா தொழுகிறார் என்று அவர்களுக்குத் தெரிந்தால் அறிஞர்களின் சரியான கருத்தின்படி, ம.்.க்ரிபை நிய்யத் செய்து இமாமுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். பிறகு நாம் மேற்கூறியதுபோல நடந்து கொள்ள வேண்டும்.

அதன் பிறகு அவர்கள் இஷா தொழுது கொள்ள வேண்டும்.

71. பயணத்தில் கஸர் தொழுதுவிட்டு வழமையாக தொழப்படக்கூடிய ராத்திபு சுன்னத்துகளை (முன் பின் சுன்னத்துகளை) நிறைவேற்றுவது விரும்பத்தக்கது என்பதில் மக்களிடம் கருத்து வேறுபாடுள்ளது. சிலர் ராத்திபு சுன்னத்துகளை நிறைவேற்றுவது விரும்பத் தக்கது என்றும், சிலர், ஃபர்ளு தொழுகையே சுருக்கப் பட்டிருக்கும்போது ராத்திபு சுன்னத்து விரும்பத்தகாதது என்றும் கூறுகின்றனர். இதில் தாங்களின் கருத்தென்ன? இவ்வாறே (கஸர் தொழுதுவிட்டு) இரவுத் தொழுகை போன்ற பொதுவான நஃபில் தொழுகைளை தொழுவது குறித்தும் தங்களின் கருத்தென்ன?

**பதில்:** ராத்திபு சுன்னத்துகளை தொழாமல் இருப்பதே பயணிக்கு சுன்னத்தாகும். ஆனால் ஃபஜ்ருடைய முன் சுன்னத்தை மட்டும் நிறைவேற்றிட வேண்டும். இவ்வாறு செய்வது நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றியதாக அமையும். இவ்வாறே பயணத்தில் வித்ரு, தஹஜ்ஜுத் தொழுவதும் ஷரீஅத்தில் அவருக்கு சுன்னத்தாக்கப் பட்டுள்ளது. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள். இதுபோன்றே பொதுவான நஃபில் தொழுகைகளைத் தொழுவதும் காரண காரியங்களுடன் நிறைவேற்றப்படுகின்ற- ளுஹா தொழுகை, உளுவின்

சுன்னத், கிரகணத் தொழுகை போன்ற தொழுகைகளை தொழுவதும் சுன்னத்தாக்கப்பட்டுள்ளது. அதுபோல தொழுகைக்காகவோ வேறு காரணத்திற்காகவோ பள்ளி யினுள் நுழைபவர் (அங்கு அமர நேர்ந்தால்) பள்ளியின் காணிக்கைத் தொழுகையைத் தொழுவதும் குர்ஆன் ஓதும்போது ஸஜ்தா வசனங்கள் வந்தால் ஸஜ்தா செய் வதும் ஷரீஅத்தில் அவருக்கு சுன்னத்தாக்கப்பட்டுள்ளது.

**இதரச் சட்டங்கள்**

72. ஸஜ்தா வசனங்களை ஓதும்போது ஸஜ்தா செய் வதற்கு உளூ அவசியமா? தொழுகையிலோ தொழு கைக்கு வெளியிலோ அதற்காகக் குனியும்போதும் உயரும்போதும் தக்பீர் சொல்ல வேண்டுமா? அந்த ஸஜ்தாவில் என்ன கூற வேண்டும்? இது விஷயத்தில் ஸஹீஹான ஹதீஸ் ஏதும் வந்துள்ளதா? தொழுகைக்கு வெளியில் இந்த ஸஜ்தாவுக்குப் பிறகு ஸலாம் கொடுக்க வேண்டுமா?

**பதில்:** அறிஞர்களின் சரியான கருத்தின்படி குர்ஆன் ஓதும்போது ஸஜ்தா செய்வதற்கு உளூ அவசியமில்லை. இந்த ஸஜ்தாவிலிருந்து உயரும்போது தக்பீர் சொல் வதும், இந்த ஸ்தாவை முடித்து விட்டு ஸலாம் கொடுப் பதும் அவசியமில்லை. ஆனால் இந்த ஸஜ்தாவுக்காக குனியும் போது (அல்லாஹு அக்பர் என்று) தக்பீர்

சொல்வது ஷரீஅத்தின் நடைமுறையில் உள்ளது. இதற்கான ஆதாரம் இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

ஆனால் தொழுகையில் குர்ஆன் ஓதும்போது ஸஜ்தா செய்ய நேர்ந்தால் அந்த ஸஜ்தாவுக்காக குனியும் போதும் அந்த ஸஜ்தாவிலிருந்து எழும் போதும் தக்பீர் சொல்வது அவசியமாகும். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் தொழுகையில் ஒவ்வொரு முறையும் குனியும்போதும், எழும்போதும் (அல்லாஹு அக்பர் என்று) தக்பீர் கூறியுள்ளார்கள். மேலும் "என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்"(புகாரி 631) என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக ஆதாரப்பூர்வமான ஹதீஸும் உள்ளது. மேலும் பொதுவான ஆதாரங்களின் அடிப்படையில் தொழுகையிலுள்ள ஸஜ்தாவில் ஓத வேண்டுமென்று ஷரீஅத்தில் சொல்லப்பட்டுள்ள அதே திக்ரு, துஆவையே குர்ஆன் ஓதும்போது செய்கின்ற ஸஜ்தாவிலும் ஓத வேண்டும். அத்தகைய திக்ருகளில் ஒன்று வருமாறு:

اللَّهُمَّ لَكَ سَجَدْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ تَبَارَكَ الله أَحْسَنُ الْخَالِقِينَ (م/ ٧٧١)

"அல்லாஹும்ம லக ஸஜத்து, வபிக்க ஆமன்து, வலக அஸ்லம்து, ஸஜத வஜ்ஹீ லில்லதீ கலகஹு, வஸவ்

வரஹு", வஷக்க ஸம்அஹு", வபஸரஹு" தபாரக்கல்லாஹு" அஹ்ஸனுல் காலிகீன்." இந்த திக்ரை நபி(ஸல்)அவர்கள் தொழுகையின் ஸஜ்தாவில் கூறியதாக இமாம் முஸ்லிம் அவர்கள் தமது நூலில் பதிவு செய்துள்ளார்கள். (பார்க்க: முஸ்லிம் 771)

(**பொருள்:** இறைவா! உனக்கே நான் சிரம்பணிந்தேன், உன் மீதே விசுவாசம் கொண்டேன. உனக்கே நான் கீழ்ப் படிந்தேன், என் முகம் அதைப் படைத்து, அதன் தோற் றத்தை அமைத்து அதன் கண்களுக்கும், காதுகளுக்கும் வழி அமைத்துக் கொடுத்த இறைவனுக்குப் பணிந்து விட்டது. படைப்பாளர்கள் அனைவரினும் சிறந்தவனாகிய அல்லாஹ் அருட்பாக்கியம் உடையவன்.)

தொழுகையினுடைய ஸஜ்தாவில் ஓத வேண்டுமென்று ஷரீஅத்தின் நடைமுறையிலுள்ள அதே திக்ரு, துஆவை தான் குர்ஆன் ஓதும்போது செய்கின்ற ஸஜ்தாவிலும் ஓத வேண்டும் என்று ஷரீஅத் விரும்புகிறது என்பதை ஏற்க னவே குறிப்பிட்டிருக்கிறோம். மேலும் நபி(ஸல்)அவர்கள் குர்ஆன் ஓதும்போது செய்கின்ற ஸஜ்தாவில்

اللَّهُمَّ اكْتُبْ لِي بِهَا عِنْدَكَ أَجْرًا وَضَعْ عَنِّي بِهَا وِزْرًا وَاجْعَلْهَا لِي عِنْدَكَ ذُخْرًا وَتَقَبَّلْهَا مِنِّي كَمَا تَقَبَّلْتَهَا مِنْ عَبْدِكَ دَاوُدَ (ت/ ٥٧٩)

"அல்லாஹும்ம் மக்துப் லீ பிஹா இன்தக அஜ்ரன், வள. அன்னீ பிஹா விஸ்ரன், வஜ்அல்ஹா லீ இன்தக துக்ரன்,

வதகப்பல்ஹா மின்னீ கமா தகப்பல்தஹா மின் அப்திக தாவூத்” என்றும் ஓதுவார்கள் என்ற ஒரு அறிவிப்பும் உள்ளது. (பார்க்க: திர்மிதி 579)

(**பொருள்:** இறைவா! இந்த ஸஜ்தாவுக்குப் பகரமாக உன்னிடத்தில் எனக்கு நற்கூலி எழுதுவாயாக! இதன் மூலம் என்னை விட்டும் ஒரு பாவத்தை அழித்துவிடு வாயாக! இதை உன்னிடத்தில் எனக்காக பொக்கிஷமாக ஆக்குவாயாக! உன் அடியார் தாவூதிடமிருந்து இதனை நீ ஏற்றுக் கொண்டது போல் என்னிடமிருந்தும் ஏற்றுக் கொள்வாயாக.)

இன்னும் சொல்வதானால் தொழுகையிலுள்ள ஸஜ் தாவில் “சுப்ஹான ரப்பியல் அளீம்” என்று கூறுவது (இரண்டாம் நிலைக்) கடமையாக இருப்பதுபோல இந்த ஸஜ்தாவிலும் “சுப்ஹான ரப்பியல் அளீம்” என்று கூறு வதே கடமையாகும். அதற்கு மேல் ஓதுகின்ற திக்ரு, துஆ யாவும் விரும்பத்தக்கதே.

தொழுகையிலும் தொழுகைக்கு வெளியிலும் குர்ஆன் ஓதும்போது செய்கின்ற ஸஜ்தா சுன்னத்தானதாகும். அது கடமையானதல்ல. ஸைத் பின் ஸாபித்(ரலி), உமர்(ரலி) ஆகியோர் அறிவிக்கின்ற ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும்.

73. சில நேரங்களில் சூரிய கிரகணம் அஸருக்குப் பிறகு ஏற்படுகிறது. தொழுவதற்குத் தடுக்கப்பட்ட இந்த

நேரத்தில் சூரிய கிரகணத் தொழுகையை தொழலாமா? இவ்வாறே தொழுவதற்குத் தடுக்கப்பட்ட நேரத்தில் தஹிய்யத்துல் மஸ்ஜித்- பள்ளிவாசலின் காணிக்கைத் தொழுகையைத் தொழலாமா?

**பதில்:** இவ்விரு பிரச்சனைகளிலும் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. இவ்விரு காரியங் களும் கூடும் என்பதே சரியான கருத்தாகும். இன்னும் சொல்வதானால் ஷரீஅத்தின் நடைமுறையும் அதுதான். ஏனெனில் கிரகணத் தொழுகையும், பள்ளியின் காணிக் கைத் தொழுகையும் கரண காரியங்களுடன் நிறைவேற் றப்படுகின்ற தொழுகைகளில் உள்ளவையாகும். எனவே இத்தொழுகைகளை மற்ற நேரங்களில் தொழுவதுபோல. தடுக்கப்பட்ட நேரமாகிய அஸருக்குப் பின்னரும் ஃபஜ் ருக்குப் பின்னரும் தொழலாமென்பதே சரியான கருத் தாகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்களுடைய ஹதீஸ் பொதுவாகவே வந்துள்ளது.

((إِنَّ الشَّمْسَ وَالْقَمَرَ آيَتَانِ مِنْ آيَاتِ الله لَا يَنْكَسِفَانِ لِمَوْتِ أَحَدٍ وَلَا لِحَيَاتِهِ فَإِذَا رَأَيْتُمُوهُمَا فَادْعُوا الله وَصَلُّوا حَتَّى يَنْجَلِيَ)) (خ/ ١٠٦١، م/ ٩١٥)

“சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இரண்டு அத்தாட்சிகளாகும். எவரது மரணத்திற்காகவோ எவரது பிறப்பிற்காகவோ அவற்றுக்கு கிரகணம் பிடிப்ப தில்லை. அவற்றுக்கு கிரகணம் பிடிப்பதை நீங்கள்

கண்டால் அது விலகும் வரை தொழுங்கள், துஆ செய்யுங்கள்" என நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 1061, முஸ்லிம் 915)

(إِذَا دَخَلَ أَحَدُكُمُ الْمَسْجِدَ فَلْيَرْكَعْ رَكْعَتَيْنِ قَبْلَ أَنْ يَجْلِسَ)(خ/ ٤٤٤، م/ ٧١٤)

"உங்களில் ஒருவர் பள்ளியினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத் தொழாமல் அவர் அங்கு அமர வேண்டாம்" என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 444, முஸ்லிம் 714)

இவ்வாறே ஒருவர் சுபுஹுக்குப் பிறகோ அஸருக்குப் பிறகோ கஅபாவை தவ.்.ப் செய்தால் தவா.்.பினுடைய இரண்டு ரக்அத்தை தொழுது கொள்ளலாம்.

((يَا بَنِي عَبْدِ مَنَافٍ لَا تَمْنَعُوا أَحَدًا طَافَ بِهَذَا الْبَيْتِ وَصَلَّى أَيَّةَ سَاعَةٍ شَاءَ مِنْ لَيْلٍ أَوْ نَهَارٍ)) (ت/ ٨٦٨، نس/ ٥٨١)

அப்து மனா.்.பின் சந்ததிகளே! இரவு, பகல் தாம் விரும்பும் எந்த நேரத்திலும் இவ்வாலையத்தை தவா.்.ப் செய்வதையும் இங்கு தொழுவதையும் தடுக்காதீர்கள்" எனவும் நபி(ஸல்) கூறியுள்ளார்கள். (திர்மிதி 868, நஸயீ 581, அபூதாவூத் 1894, இப்னுமாஜா 1254, அஹ்மத் 16136)

74. ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் திக்ர், துஆ செய்வதற்கு ஆர்வமூட்டப்பட்ட ஹதீஸ்களில் "ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகு" என்பதைக் குறிக்க "துப்ர குல்லி

ஸலாத்தின்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் கருத்து "ஒவ்வொரு தொழுகையின் இறுதியில்" என்பதா? அல்லது ஒவ்வொரு தொழுகையிலும் ஸலாம் கொடுத்த பிறகு என்பதா?

**பதில்:** "துப்ர குல்லி ஸலாத்தின்" என்ற வார்த்தை தொழுகைக்குப் பிறகும் (ஸலாம் கொடுத்தவுடன்) என்ற அர்த்தத்திலும் சொல்லப்படுகிறது. "ஒவ்வொரு தொழு கையின் இறுதியில்" (ஸலாம் கொடுக்கும் முன்) என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. ஆதாரப்பூர்வமான பல ஹதீஸ்கள் இவ்விரு அர்த்தத்திலும் வந்துள்ளன. அவற்றில் பெரும்பாலான- துஆ சம்பந்தப்பட்ட ஹதீஸ்கள் "தொழுகையின் இறுதியில்" (ஸலாம் கொடுப்பதற்கு முன்) என்ற கருத்தையே தருகின்றன. உதாரணமாக இப்னு மஸ்ஊத்(ரலி) அறிவிக்கின்ற ஹதீஸைப் போல.

நபி (ஸல்) அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்க ளுக்கு அத்தஹிய்யாத்தைக் கற்றுக் கொடுத்த போது (அத்தஹிய்யாத்திற்குப் பிறகு) "பின்னர் தமக்கு விருப்ப மான துஆவைத் தேர்வு செய்து பிரார்த்திக்கட்டும்" என்று கூறினார்கள். (பார்க்க: புகாரி 835) மற்றொரு அறிவிப்பில் "தாம் நாடியதைக் தேர்வு செய்து கேட்கட்டும்" எனக் கூறியதாக உள்ளது. (பார்க்க: முஸ்லிம் 402) (ஆக "துப்ர குல்லி ஸலாத்தின்" என்று கூறி துஆ சம்பந்தப் பட்டதை நபி(ஸல்) அவர்கள் கூறியிருந்தால் "தொழு

கையின் இறுதியில்”- ஸலாம் கொடுப்பதற்கு முன்- என்ற கருத்தைக் கொள்ள வேண்டும்.) இதுபோன்றே முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸும்.

((يَا مُعَاذُ لَا تَدَعَنَّ فِي دُبُرِ كُلِّ صَلَاةٍ تَقُولُ اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ ))(د/ ١٥٢٢)

முஆத் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஆதே! ஒவ்வொரு தொழுகையின் இறுதியிலும் அல்லாஹும்ம அயின்னி அலா திக்ரிக்க வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக எனக் கூறுவதை விட்டு விடாதே. (அஹ்மத் 21109, அபூதாவூத் 1522, நஸயீ 1286) (**பொருள்:** இறைவா! உன்னை நினைப்பதற்கும் உனக்கு நன்றி செலுத்துவதற்கும் உன்னை அழகிய முறையில் வணங்குவற்கும் எனக்கு உதவி செய்வாயாக!) ஸ.்.து பின் அபீ வக்காஸ்(ரலி) அவர்கள் வழியாக இமாம் புகாரி அவர்கள் அறிவித்துள்ள ஹதீசும் இது போன்றுதான்.

((إِنَّ رَسُولَ الله ﷺ كَانَ يَتَعَوَّذُ مِنْهُنَّ دُبُرَ الصَّلَاةِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْجُبْنِ وَأَعُوذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ)) (خ/ ٢٨٢٢)

நபி (ஸல்)அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் இறுதி

யில் "அல்லாஹு"ம்ம இன்னீ அவூதுபிக மினல் ஜு"ப்னி, வஅவூதுபிக அன் உரத்த இலா அர்தலில் உம்ரி, வஅவூ துபிக மின் ஃபித்னதித் துன்யா, வஅவூதுபிக மின் அதாபில் கப்ர்" என்று கூறுவார்கள். (புகாரி 2822)

**(பொருள்:** இறைவா! கோழைத்தனத்தை விட்டும் உன் னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மோசமான வயோதிகத் திற்கு நான் தள்ளப்படுவதை விட்டும் உன்னிடம் பாது காப்புத் தேடுகிறேன். உலகத்தின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மண்ணறையின் வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகி றேன்.)

எனினும் திக்ர் சம்பந்தமாக வந்திருக்கும் ஹதீஸ்கள் யாவும் தொழுகையின் இறுதியில் ஸலாம் கொடுத்த பின்னர் கூற வேண்டுமென்றே அறிவிக்கின்றன. ஸலாம் கொடுத்த பின்னர் கூறவேண்டிய அத்தகைய திக்ருகளில் சில வருமாறு:

அஸ்தக்ஃபிருல்லாஹ், அஸ்தக்ஃபிருல்லாஹ், அஸ்தக் ஃபிருல்லா, அல்லாஹு"ம்ம அன்தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்.

இந்த திக்ர்- இமாம், பின்பற்றித் தொழுபவர், தனியாகத் தொழுபவர் ஆகிய அனைவருக்கும் பொதுவானதாகும். பின்பு இமாம் திரும்பி மக்களை முன்னோக்கி அமர்ந்து

பின்வரும் திக்ருகளைக் கூற வேண்டும். இந்த திக்ருகளும் இமாம், பின்பற்றித் தொழுபவர், தனியாகத் தொழுபவர் ஆகிய அனைவருக்கும் பொதுவானதே.

லாயிலாஹு இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர். லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹி, லாயிலாஹு இல்லல்லாஹு வலா ந.'.புது இல்லா இய்யாஹு, லஹுன் நி.'.மது, வலஹுல் .'.பழ்லு, வலஹுஸ் ஸனாவுல் ஹஸனு, லாயிலாஹு இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் கா. .பிரூன்.

லாயிலாஹு இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அ.'.தைத்த, வலா மு.'.திய லிமா மன.'.த, வலா யன்.'.பஉ தல்ஜத்தி மின்கல்ஜத்.

இந்த திக்ருகளை முஸ்லிமான ஆண், பெண் அனைவரும் ஐவேளை தொழுகைகளில் ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஓதுவது விரும்பத்தக்கதாகும்.

பிறகு, சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33 தடவை, அல்லாஹு அக்பர் 33 தடவை கூறிக் கொள்ள வேண்டும். இவை மொத்தம் 99 தடவையாகும். 100 ஐ பூர்த்தியாக்க "லாஇலாஹு இல்லல்லாஹு

வஹ்தஹு லாஷரீக்கலஹு, லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்" என்று ஒரு தடவை கூறவேண்டும். (பார்க்க: 36- வது கேள்விக்குரிய பதில். தலைப்பு: ஐவேளைத் தொழுகைகளிலும் ஸலாம் கொடுத்த பிறகு ஓத வேண்டிய திக்ருகள்.)

இவை யாவும் நபி(ஸல்) அவர்கள் மூலம் வந்துள்ள ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் பதிவு செய்யப்பட் டுள்ளன. இதன் பிறகு ஆயதுல் குர்ஸி ஒரு தடவையும், குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ், ஆகியவை ஒவ்வொரு தடவையும் ஓதுவது விரும்பத்தக்கதாகும்.

ஃபஜ்ருக்குப் பிறகும் மஃக்ரிபுக்குப் பிறகும் குல்ஹுவல் லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய மூன்றையும் மும்முறை ஓதிக் கொள்ள வேண்டும்.

மேலும் மேற்கூறப்பட்ட திக்ருகளை ஓதியதற்கு மேல் ஃபஜ்ருக்குப் பிறகும் மஃக்ரிபுக்குப் பிறகும்- குல் ஹுவல் லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகியவற்றை ஓதுவதற்கு முன்னால்- "லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு, வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்" என்று பத்து

தடவை ஓதுவது விரும்பத்தக்கதாகும். இதற்கு ஆதராரப் பூர்வமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அல்லாஹ் மிக அறிந்தவன்!

75. தொழுகைக்குப் பிறகு எல்லோரும் ஒன்றுபோல்-கூட்டாக திக்ர் செய்வதன் சட்டநிலை என்ன? இப்படிச் சிலர் செய்கிறார்கள். திக்ரை சப்தமாக சொல்வது நபி வழியா? அல்லது மெதுவாக சொல்வது நபிவழியா?

**பதில்:** ஐவேளை தொழுகைக்குப் பிறகும், ஜும்ஆ தொழுகைக்குப் பிறகும் ஸலாம் கொடுத்தவுடன் சப்த மிட்டு திக்ர் செய்வதே நபிவழி. புகாரி, முஸ்லிமில் இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கக் கூடிய ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும்.

عن ابْنَ عَبَّاسٍ أَنَّ رَفْعَ الصَّوْتِ بِالذِّكْرِ حِينَ يَنْصَرِفُ النَّاسُ مِنْ الْمَكْتُوبَةِ كَانَ عَلَى عَهْدِ النَّبِيِّ ﷺ وَقَالَ ابْنُ عَبَّاسٍ كُنْتُ أَعْلَمُ إِذَا انْصَرَفُوا بِذَلِكَ إِذَا سَمِعْتُهُ (خ/ ٨٤١، م/ ٥٨٣)

“மக்கள் கடமையான தொழுகையை முடிக்கும்போது சப்தமாகத் திக்ரு செய்யும் நடைமுறை நபி(ஸல்)அவர் களின் காலத்தில் இருந்தது. இந்த திகரின் சப்தத்தைக் கேட்டு அவர்கள் தொழுகையை முடித்து விட்டார்கள் என்பதை நான் அறிந்து கொள்வேன்” என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி 841, முஸ்லிம் 583)

எனினும் எல்லோரும் சேர்ந்து- ஆரம்பம் முதல் கடைசி வரை- கோரஸாக திக்ர் செய்வதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. மட்டுமின்றி அது பித்அத்தாகும். ஆயினும் எல்லோரும் சேர்ந்து கோரஸாகச் சொல்லும் எண்ணமின்றி அதாவது தமது சப்தம் அடுத்தவரின் சப்தத்துடன் சேர வேண்டும் என்ற எண்ணமின்றி ஆரம்பம் முதல் கடைசி வரை திக்ர் செய்தால் அது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டதே.

76. ஒருவர் தொழுகையில் மறதியாக பேசிவிட்டால் அவரது தொழுகை முறிந்துவிடுமா?

**பதில்:** ஒருவர் தொழுகையில் மறதியாகவோ அறியாமலோ பேசிவிட்டால் அவரது தொழுகை முறிந்துவிடாது. அத் தொழுகை ஃபர்ளாக இருந்தாலும் சரி. அல்லது நஃபிலாக இருந்தாலும் சரி. “எங்கள் இறைவா! நாங்கள் மறந்துவிட்டாலோ, தவறு செய்து விட்டாலோ எங்களைத் தண்டித்துவிடாதே!” (அல்குர்ஆன் 2:286) இந்த வசனம் அருளப்பட்டதும் “நான் அவ்வாறே நடந்து கொள்கிறேன்” (அதாவது நீங்கள் மறந்தாலோ தவறு தவறு செய்து விட்டாலோ உங்களைத் தண்டிக்க மாட்டேன்) என்று அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (பார்க்க: முஸ்லிம் 126)

முஆவியா பின் ஹகம்(ரலி) அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது- சட்டம் தெரியாமல்- தும்மிய

வருக்குப் பதில் கூறிவிட்டார். அங்குள்ளவர்கள் அவரை சைகை மூலம் கண்டித்தனர். (தொழுகை முடிந்ததும்) அவர் இது பற்றி நபி(ஸல்)அவர்களிடம் கேட்டார். அதற்கு நபி(ஸல்)அவர்கள் அவரைத் திரும்பத் தொழும்படி ஏவ வில்லை. (பார்க்க: முஸ்லிம் 537)

மறதியாகச் செய்தவன் தெரியாமல் செய்தவன் போன்றுதான். இன்னும் சொல்வதானால் மறதியாகச் செய்தவன் நிலை தெரியாமல் செய்தவனின் நிலையை விட மோசமானதே! மேலும் நபி(ஸல்)அவர்களும் தொழு கையில் மறதியாக பேசியுள்ளார்கள். அத்தொழுகையை திருப்பித் தொழவில்லை. அப்படியே நிறைவு செய்து விட்டார்கள். இதற்கான சான்று புகாரி முஸ்லிமில், துல்யதைன் (இரு கைகள் நீளமானவர்) சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் அபூஹுரைரா(ரலி)அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸிலும், இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸிலும் உள்ளது.

தொழுகையில் சைகை செய்வதைப் பொறுத்தவரை அவசியம் ஏற்படின் அவ்வாறு செய்வதில் தவறில்லை. அல்லாஹ் மிக அறிந்தவன்!